விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka

பக்கங்கள்:பதினாறு + பதினாறு

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

SPEED
PURIFIED DRINKING WATER
சுத்தமான குடி தண்ணீர்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெறுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)
விசே. விலைக்கழிவு வழங்கப்படும்.
ஸ்ரீமுருகன்
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(C-6773)
021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 மார்கழி 03 ஞாயிற்றுக்கிழமை (18.12.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

## இ.போ.ச பேருந்து-ஹயஸ் மோதி



# சாவகச்சேரியில் கோர விபத்து

## சுற்றுலா வந்த தென்பகுதியினர் 11 பேர் பலி

### பலர் படுகாயம்





(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-சங்கத்தானை ஏ9 வீதியில் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து ஒன்றும் தென்னிலங்கையில் இருந்து வடக்கிற்கு சுற்றுலா வந்த ஹயஸ் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் ஹயஸில் பயணித்த பெரும்பான்மை இனத்தை சேர்ந்த 7 ஆண்கள், 4 பெண்கள் உட்பட 11 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன் 12 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர்.

15 ஆம் பக்கம் பார்க்க....

## மு.காவின் உட்கட்சிப்பூசல் இணக்கப்பாட்டுடன் முடிவு

### எம்.பியாகிறார் ஹசன் அலி

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்குள் இதுவரை காலமும் நிலவி வந்த உட்கட்சிப் பூசல் நேற்றுமுன்தினம் இணக்கப்பாட்டுடன் முடிபடைந்துள்ளது.

கடந்த பொதுத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் ஹசன் அலி கட்சி நடவடிக்கைகளில் இருந்து ஒதுக்கிவைக்கப்

15 ஆம் பக்கம் பார்க்க....

## 1340 மில்லியன் அமெரிக்க டொலர் கடன் வழங்க உலக வங்கி இணக்கம்

### நிதியமைச்சர் ரவி தகவல்

(கொழும்பு)

உலக வங்கி ஆயிரத்து 340 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை இலங்கைக்கு கடனாக வழங்க இணங்கியுள்ளதாக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இலங்கையின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்த கடன் தொகையை வழங்குவதாக உலக வங்கி நேற்று அறிவித்துள்ளது.

இலங்கை ஆரம்பித்துள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் நம்பிக்கை இருப்பதனால் இந்த கடன் தொகையை வழங்குவதற்கு உலக வங்கி இணங்கியுள்ளதாக நிதியமைச்சர் தெரிவித்தார். (இ-10)

## சனி, ஞாயிறுகளில் கடைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரை வர்த்தக நிலையங்களை சனி, ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களிலும் திறந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ்.வணிகர் கழகம் செயலாளர் இ.ஜனககுமார் தெரிவிக்கையில்,

யாழ்.வணிகர் கழக ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் இன்று தொடக்கம் எதிர்வரும் ஜனவரி மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வர்த்தக நடவடிக்கையில் உள்ள பொதுவான நடைமுறைகள் சிலவற்றில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதாவது மேற்குறித்த காலப் பகுதியில் சனி, ஞாயிறு நாட்களிலும் அரச விடுமுறை நாட்களிலும்

15 ஆம் பக்கம் பார்க்க....

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

மலேசியாவிற்கு மூன்று நாள் உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று மாலை நாடு திரும்பினார்.

ஜனாதிபதி உள்ளிட்ட பிரதிநிதிகள் குழுவினர் நேற்று மாலை 4.10 மணிக்கு கட்டு நாயக்க விமான நிலையத்தை அவர் வந்தடைந்தனர்.

மலேசியாவிற்கு உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி. மலேசிய மன்னர் மற்றும் பிரதமரை சந்தித்து இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் பல கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தார். இந்த விஜயத்தின் போது இரு நாடுகளுக்குமிடையே 5 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## வாகன விபத்து; குடும்பஸ்தர் காயம்



02 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாகன விபத்து...

மோட்டார் சைக்கிளும் - சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் கோண்டாவில் டிப்போ சந்தியில் இடம்பெற்றது.

இதில் உரும்பிராயைச் சேர்ந்த சரவணமுத்து சிறிதரன் (வயது 53) என்ற குடும்பஸ்தரே படுகாயமடைந்தவராவார். இது தொடர்பில் பொலிஸில் முறையிட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் .

(செ -30, 78)


## அறைகள் வாடகைக்கு

கிளிநொச்சியில் கச்சேரி, புகையிரத நிலையம் அருகாமையில்அறைகள்வாடகைக்கு உண்டு. அரச பணியாளர்கள் விரும்பத்தக்கது. (சி-6769)

தொடர்பு : 0778472715

## உடற்பருமன் கொண்டோருக்கும் உடல் எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி

ஆண், பெண் இருபாலாருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனி யுடன் திகழ ஆயுள்வேத கேர்பல் ஔடதம், பால்மா, குளிசை, (6978)

**உடல் பருமன் கொண்டோருக்கு**

**விலை 3500/=, 5500/=, 9000/=**

உடல் எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு குறைத்தல் வயிற்றுக்கோளாறு, நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான, ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.

ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.

**உடல் எடை குறைவானோருக்கு**

**விலை 3500/=, 5500/=, (24000/=, 3 மாதத்திற்குரியது.)**

உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னாங்கள் குண்டுக் கன்னங்களாக மாற்ற பலகீனம், கணச்சூடு, எதைச்சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிறவர்கள், மார்பு கூட்டுதல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு. மேலும் கறுப்பு, கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பருக்கள், வடுக்கள், காயங்கள், கருந்திட்டுக்கள், கரும்புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு. தேவையற்ற ரோமம், முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு. (விலை 3500/=, 5500/=) (6718)

தொடர்புகளுக்கு : 077 210 6155 221, நாவலர் றோட் (பிறவுண்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

## புத்தக வெளியீடு

**“ஆராய்ச்சியினூடாக பனங்கைத்தொழிலின் மேம்பாடு”**

பனை ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சி முடிவுகளின் வெளியீடுகளை உள்ளடக்கிய புத்தக வெளியீட்டு வைபவம் எதிர்வரும் 19.12.2016 (திங்கட்கிழமை) பிற்பகல் 01:00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் இடம்பெறவுள்ளது.

இவ்வைபவத்திற்கு அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நிகழ்ச்சிஅமைப்புக் குழு,
பனை ஆராய்ச்சி நிறுவனம்,
பனை அபிவிருத்திச் சபை.

தலைவர்,
பனைஅபிவிருத்திச் சபை

(சி-6783)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Scorpio சொகுசு ஜீப் விற்பனைக்கு உண்டு. (6982)

தொடர்பு : 0779384243, 0770098336

## காணி விற்பனை

1) குளப்பிட்டி றோட் C.C.T.M.S வீதியில் 05 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

2)இராசாவின் தோட்ட வீதியில் 05 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (6981)

தொடர்பு : 0771671174, 0777286061

## NEW SCIENCE HALL

Kannathiddy Jaffna

### 2019 A/L கணித, உயிரியல் பிரிவு

**PHYSICS**

திரு. S. சோதிலிங்கம் திரு. G. பிரபா
திரு. K. செல்வன் திரு. N. கபிலன்

**CHEMISTRY**

திரு. K. சிவத்திரன் திரு. N. மகேஸ்வரன்
திரு. G. BENO திரு. T. சுசாந்தன்
திரு. J.ரஞ்சித்காந்

**BIOLOGY**

திரு. T. தம்பிராஜா (எமது வழமையான ஆசிரியர்)
திரு. T. கெங்காதரன்

**COM.MATHS**

திரு. P. செந்தில்நாதன்
திரு. B. சிவகரன்

(C-6781)

ஆரம்பம்

**23.12.2016**

## NEW SCIENCE HALL

JAFFNA

### 2019 A/L CHEMISTRY

# க. சிவத்திரன்

B.Sc (Hons)

புதிய பாடத்திட்டத்துக்கமைவான (New Syllabus) Theory & அலகுரீதியான வினா - விடை வகுப்புக்களுடன் மாதாந்த பரீட்சைகளும் இடம்பெறும். (6964)

ஆரம்பம்: வெகுவிரைவில்

## பணிப்பெண் தேவை

திருநெல்வேலி மற்றும் கந்தர்மடம் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகளில் வேலை செய்வதற்கு இரண்டு பெண்கள் தேவை. (சம்பளம் 12,000-18,000 வரை) (6980)

தொடர்பு : 0763313154

## வேலைவாய்ப்பு

யாழ். நகருக்கு அண்மையில் உள்ள பொதிகள் சேவை நிறுவனத்திற்கு 25 வயதிற்குட்பட்ட ஆண் தேவை. (மோட்டார் சைக்கிள் வாகன அனுமதிப்பத்திரம் விரும்பத்தக்கது) (சி-6786)

0750402086

## நிரு கல்வி நிலையம்

கோண்டாவில்

2019 A/L உயிரியல் பிரிவு

உயிரியல்:- க.கலைவாணன்
இரசாயனவியல்:- S.சக்தி
பௌதிகவியல்:- மதன்

ஆரம்பம்: 19.12.2016
திங்கள் மாலை 3.30PM (சி-6959)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரவன்சவின் வீட்டில் உயிரிழந்த இளைஞன் குறித்து விசாரணை

## அமைச்சர் சுஜீவ வலியுறுத்து

(கொழும்பு)

**ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவின் வீட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்த மர்மம் தொடர்பான உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.**

பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவின் இல்லத்தில் குறித்த இளைஞன் உயிரிழந்திருந்தால் அதனை ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர் பேச்சு மேடைக்காக பயன் படுத் தியிருப் பார் கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் உள்ள இந் திரஜோதி வித்தியாலயத்தில் நேற்று நடமாடும் சேவையொன்று இடம்பெற்றது. இதில் சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க விசேட விருந் தினராக அழைக்கப்பட்டிருந்தார்.

நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர் "பக்சவன்ச என்ற விமல்வீரவன்ச வீட்டில் இளை ஞர் ஒருவர் திடீர் மரணமடைந்திருந் தார். இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய புதிய பொலிஸ் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டி ருப்பதாக விமல் வீரவன்ச கூறி யிருந்த தகவலை நான்கண்டேன். அந்த அதிகாரியின் பெயர்கூட எனக் குத் தெரியாது. ஆனால் நான் தான் அவரை நியமித்தேன் என்று கூறுகின்றார். வீரவன்சவின் கால் கள் நடுங்கினால் எனக்கு ஒன்றும் செய்ய முடியாது. அவரை பக்சவன்ச என்றும் கூறுகின்றனர்.

இன்று அவர் ஒளிந்துகொண்டு தான் நாடாளுமன்றம் வருகின் றார். அவரைப் பார்த்து விமல் வீர வன்ச என்று அழைத்தால் சீக்கி ரமே இடத்திலிருந்து நழுவி விடு வார். இந்த நாட்டில் அனைவ ருக்கும் சரிசமனாக நீதி நிலை நாட்டப்படுகிறது" என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கொழும்பு நகரில் மோனா ரயில் திட்டம்



கொழும்பு நகரை அபிவி ருத்தி செய்யும் வேலைத் திட்டமான "நாளைய கொழும்பு" திட்டத்தின் கீழ் மேம்பாலத் தில் பயணிக்கும் மோனோ ரயில் திட்டத்திற்கான சர்வ தேச விலைமனு கோரல் அடுத்த இரண்டு வாரங்களில் மேற்கொள்ளப்படும் என பெரு நகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு தெரி வித்துள்ளது.

பல வசதிகளுடன் நிர்மாணிக் கப்படும் புதிய நகர திட்டத் திற்கு அமைவாக கொழும்பு மற்றும் கொழும்பின் புறநகர் பகுதிகள் உள்ளடங்கும் வகை யில் 7 மோனோ ரயில் பாதை கள் நிர்மாணிக்கப்படவுள்ளன.

7 மோனோ ரயில் பாதை களில் இரண்டு பாதைகளை நிர் மாணிக்க ஜப்பானின் ஜெய்க்கா நிறுவனம் நிதி பங்களிப்பை வழங்க முன் வந்துள்ளது.

அத்துடன் ஏனைய 5 பாதைகளை முதலீட்டாளர் கள் மூலம் நிர் மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் கொழும்பு நக ரின் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காக மோனோ ரயில் திட்டம் முன்னெடுக்கப் படுகின்றமை குறிப்பிடத்தக் கது. (இ-10)

# இலங்கை ஜனாதிபதிக்கு ரஷ்ய ஜனாதிபதி அழைப்பு



(கொழும்பு)


ரஷ்யாவுக்கு அதிகார பூர்வ பயணமாக வருகை தரும்படி, ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவுக்கு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் அழைப்பு விடுத்துள்ளார்.

ஜனாதிபதியுடன் மலே சியா சென்றிருந்த வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமர வீர, கோலாலம்பூரில் நேற்று முன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த போதே இதனைத் தெரிவித்தார்.

ரஷ்ய ஜனாதிபதியின் அழைப்பை ஏற்றுக் கொண் டுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அடுத்த மூன்று மாதங்களுக்குள் மொஸ்கோ வுக்குப் பயணம் மேற்கொள் வார் என்றும் தெரிவித் தார். (இ-10)

# தாக்குதல் நடத்திய தளபதியை நியாயப்படுத்தும் சரத் பொன்சேகா மீது விக்கிரமபாகு காட்டம்





இலங்கை கடற்படைத் தளபதி அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில்வைத்து ஊடகவியலாளர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தியதன் ஊடாக கடற் படையினருக் குரிய ஒழுங்கு விதிகளை அப்பட்ட மாக மீறியிருப்பதாக நவசம சமாஜக் கட்சியின் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன குற்றம்சாட்டியுள்ளார்.

கப்பல்களுக்குள் யாரா வது அத்துமீறி ஏறியிருந்தால் கடற்படையினருக்கு தாக்கு தல் நடத்தும் உரிமை இருப் பதாகத் தெரிவிக்கும் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன அவ்வாறான நிலை ஏற்படாத சந்தர்ப்பத்தில் தரையில் போராட்டத்தில் ஈடுபட்டவர் களை தாக்குவதற்கு எந்த உரிமையும் கிடையாது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந் திர விஜய குணவர்த்தன அம்பாந்தோட்டைத் துறை முகத்தில் கடந்த 10 ஆம் திகதி சனிக்கிழமை நடந்து கொண்ட விதத்தையும், அவர் அன்று அணிந்திரு ந்த உடையையும் நியாயப் படுத்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா முயன்றிருப்ப தாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்ன குற்றஞ்சாட்டி னார்.

எனினும் இலங்கை கடற் படைத் தளபதியின் நடவடிக்கை கள் தொடர்பில் தனக்கு பாரிய முரண்பாடுகள் இருப் பதாக அவர் தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி எதற் காக நேரில் பிரசன்னமாகியி ருந்தார் என்றும் கேள்வி எழுப்பியுள்ள விக்கிரமபாகு, அமைச்சர் சரத்பொன்சேகா இராணுவத்தளபதியாக இருந்த காலத்தில் இவ்வாறு எத்தனை தடவைகள் நேரில் யுத்த களத் திற்கு சென்றிருக்கின்றார் என் றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் ரவீந் திர விஜேய குணவர்த்தனவே மகாம்பர துறைமுகப் பிரச்சினை விடயத்தில் தலையிட்டமை தொடர்பில் பல்வேறு சந்தே கங்கள் எழுந்துள்ளதாகவும் விக்கிரமபாகு தெரிவித்துள் ளார்.

அம்பாந்தோட்டை துறை முகத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சி னையை மிகைப்படுத்தி காண் பிப்பதற்காகவா? கடற்படைத் தளபதியே குறித்த போராட் டத்தை ஒடுக்கும் படை நடவ டிக்கைக்கு தலைமை தாங்கி யிருந்தார் என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (இ-10)

# இரண்டு மரண தண்டனைக் கைதிகள் உட்பட 35சிறைக்கைதிகள் ஆங்கிலப் பாட பரீட்சைக்கு நேற்றுத் தோற்றினர்

சிறைச்சாலைகளுக்குள் இருந்தவாறே ஆங்கிலம் கற்றுக்கொண்ட 35 கைதி கள் நேற்று நடந்த ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கிலப் பாடத்துக்குத் தோற்றியதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள் ளது.

இவர்களுள் இரண்டு மரணதண்டனைக் கைதி களும் உள்ளடங்குவதாக வும் சிறைகளில் உள்ள ஆங் கிலப் புலமை பெற்ற கைதி கள் சக கைதிகளுக்காக இலவசமாக நடத்தும் ஆங் கில வகுப்புகள் அவர்கள் மத்தியில் பெரும் வரவேற் பைப் பெற்றிருப்பதாக சிறைச் சாலைகள் திணைக்களத் தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

# ஐ.நா. வெசாக் நாள் கொண்டாட்டங்களில் பங்கேற்க உலகத் தலைவர்களுக்கு அழைப்பு

அடுத்த ஆண்டு ஐ.நா. வெசாக் நாள் கொண்டாட் டங்கள் இலங்கையில் இடம் பெறவுள்ள நிலையில், இந்த நிகழ்வுக்கு பல்வேறு நாடுக ளின்தலைவர்களுக்கு இலங்கை அரசாங்கம் அழைப்புகளை விடுத்துள்ளது.

இந்தத் தகவலை நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜேதாச ராஜ பக்ஷ தெரிவித்தார்.

அடுத்த ஆண்டு இலங்கை யில் நடத்தப்படவுள்ள ஐ.நா. வெசாக் நாள் கொண்டாட்டங் களுக்கான ஏற்பாடுகளைக் கண்காணிக்கும் செயலகம் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் திறந்து வைக் கப்பட்டது.

இந்தச் செயலகத்தை திறந்து வைத்து உரையாற் றிய அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ, ஐ.நா. வெசாக் நாள் முதல் முறையாக இலங்கையில் கொண்டா டப்படவுள்ளது.

இதன் பிரதான நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்ட பத்தில் எதிர்வரும் 2017 மே 12ஆம் திகதி நடைபெறும்.

100 இற்கும் மேற்பட்ட நாடுகளின் பிரதிநிதிகள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ள வுள்ளனர்.

மறுநாள் தலதா மாளிகை யில் அனைத்துலக பௌத்த கருத்தரங்கு இடம்பெறும். அன்றிரவு சிறப்பு தலதா பெர ஹெர இடம்பெறும்.

ஐ.நா. வெசாக்நாள்கொண் டாட்டங்களில் பங்கேற்க பல்வேறு நாடுகளின் தலை வர்களுக்கு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, புதிய ஐ.நா. பொதுச் செயலர் அன்ரனியோ குரெரெஸ் ஆகியோரும் அழைக்கப் பட்ட தலைவர்களில் அடங்கி யுள்ளனர்.

தாய்லாந்து பிரதமர் ஏற்க னவே தமது வருகையை உறுதிப் படுத் தியுள் ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## இலங்கையில்

# அமெரிக்காவின் முடிவினால் பொருளாதாரத்துக்கு பாதிப்பு

அடுத்த ஆண்டு அமெ ரிக்கா எடுக்கவுள்ள பொருளா தார முடிவுகளினால் இலங்கை யின் பொருளாதாரம் பாதிக் கப்படும் ஆபத்து இருப்பதாக அமைச்சர் சம்பிக்க ரண வக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய சம்பிக்க ரணவக்க, அமெரிக்காவின் மத்திய வங்கியான பெடரல் றிசேவ் சிஸ்டம் அடுத்த ஆண்டு வட்டி வீதங்களை அதிகரிக்கவுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம் பரில் இதுபோன்று வட்டி வீதங்கள் அதிகரிக்கப்பட்ட தால், 2400 மில்லியன் டொலர் முதலீடுகள் இலங்கை யில் இருந்து விலக்கிக் கொள் ளப்பட்டன.

அமெரிக்காவில் வட்டி வீதம் மீண்டும் உயர்த்தப் பட்டால், இலங்கை ரூபா வின் மதிப்பின் மீது அது அழுத்தங்களைக் கொடுக் கும்.

இதனால் நாம் குறிப்பிட்ட காலத்துக்கு பொருளாதார நெருக்கடிகளை சந்திக்க நேரிடும். இதனால் நாம் கவனமாகச் செயற்பட வேண் டும்.

மசகு எண்ணெயின் விலை யும் அதிகரித்துள்ளது. இது வும் கூட இலங்கையின் பொருளாதாரத்தில் சிக்கலை ஏற்படுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை அமெ ரிக்காவின் பெடரல் றிசேவ் சிஸ்டம், வட்டி வீதத்தை அதிகரிக்க அனுமதி அளிக் கப்பட்டது. அடுத்த ஆண்டு மேலும் மூன்று தடவைகள் வட்டி வீதத்தை அதிகரிக்கவும் எதிர்பார்த்துள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SCIENCE WORLD
VICTORY MUST
Brown Road, Jaffna.

# New Science World

**T.P: 077 336 4055**

## 2019 A/L - கணித, உயிரியல் பிரிவு

### தமிழ்மொழி மூலம்

| | |
|---|---|
| பௌதிகவியல் | திரு. R. குமரன் M.Sc<br>திரு. R. குகன் B.Sc |
| இரசாயனவியல் | திரு. டயஸ் B.Sc (Hons), Spl.in che<br>திரு. K.T. சிவகுமார் B.Sc, PGDE |
| உயிரியல் | திரு. S. பொன் திவாகரன் B.Sc (Hons)<br>திரு. V. உமாசங்கர் B.Sc, PGDE |
| இணைந்த கணிதம் | திரு. S. செந்தில்ராஜ் B.Sc, PGDE |

### English Medium

| | |
|---|---|
| Physics | Mr. R.Kumaran M.Sc |
| Chemistry | Mr. Dias B.Sc (Hons) Spl.in che |
| Biology | Mr. V. Umasanger B.Sc, PGDE |
| Com.Maths | Mr. T. Shanjeevan B.Sc (Hons),<br>Dip. in English (Lecturer in University) |

**ஆரம்பம் 23.12.2016**

# New Science World

பிரவுண் ரோட், நாவலர் றோட் சந்தி

(C-6785)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுத் திட்டத்தில் முன்னுரிமை வேண்டும்

வடமராட்சிப் பகுதியில் வீட்டுத்திட்டம் வழங்கப்படும் போது வன்னியில் இருந்து வந்து மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் வழங்கப்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது. இறுதி யுத்தத்தின் பின்னர் வன்னியிலிருந்து வந்த பல குடும்பங்கள் வடமராட்சிப் பகுதியில் மீள்குடியமர்ந்தன. இவ்வாறு மீளக் குடியமர்ந்த குடும்பங்களில் சிலருக்கு இதுவரையில் எவ்வித வீட்டுத்திட்டமும் வழங் கப்படவில்லை. தற்போது வழங்கப்படவுள்ள வீட்டுத் திட்டத்தில் இவர்களை முன்னுரிமைப்படுத்த வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் தரப்பில் கோரப்பட்டுள்ளது. (இ-60)

# மீள்குடியேறியவர்களுக்கு நல்லின ஆடுகள் வழங்கல்

யாழ். கீரிமலைப் பகு தியில் மீள்குடியேறிய 20 குடும்பங்களுக்கு அவர்க ளது வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கோடு வடக்கு கால்நடை அமைச்சு நல்லின




ஆடுகளை வழங்கியுள்ளது. கீரிமலை நகுலேஸ்வரர் வீதியில் அமைந் துள்ள புதிய குடியிருப்புப் பகுதியில் ஆடுகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்வில் வடக்கு கால் நடைத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் கலந்து கொண்டு ஆடுகளை வழங்கி வைத்துள்ளார்.

வடக்கு கால்நடை அமைச்சு பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள கிராமங்களில் மக்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்தும் நோக்கோடும், போசனை மட்டத்தை அதிகரிக்கச் செய்யும் நோக்கோடும் தகர் என்ற பெயரில் ஆடு வளர்ப்புத் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் இத்திட்டத்தின் ஒரு கட்டமாகவே கீரிமலையில் அண்மையில் குடியேறிய மக்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் விந்தன் கனகரத்தினம், பா.கஜதீபன், அ.பரஞ் சோதி, கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத் தின் மாகாணப் பணிப்பாளர் சி.வசீகரன், பிரதிப் பணிப்பாளர் வக்சலா அமிர்தலிங்கம், கால்நடை வைத்திய அதிகாரி வ.மதிபா ஆகியோரும் கலந்து கொண்டிரு ந்தனர். (இ-10)

31 ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணில் 11 • 12 • 1952



விண்ணில் 17 • 11 • 2016

எமது அன்புத்தெய்வம்

அமரர் **வினாயகமூர்த்தி சிவகுமாரன்**

எளிய நடையில் இனிய கவிதை உன் வாழ்வு!
குயிலாக கூவி மகிழ்ந்திருந்த உன் உயிரை
ரயில் மீது வந்த யமன் களவாடி சென்றனனே!
அக்கணம் யாரை நினைத்தாயோ
இக்கணம் நின் நினைவில் தவிக்கின்றோம்
எக்கணம் உன் திருமுகம் காண்போமோ!

17.11.2016 அன்று எம்மை விட்டு நீங்கிய அன்புத்தெய்வத்தின் அந்தியேட்டி கிரியைகள் 20.12.2016 செவ்வாய்க்கிழமை அன்று கரணவாய் மூத்த விநாயகர் கோவில் மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். அன்னாரின் மறைவுச்செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி வழியாக இரங்கல் தெரிவித்தோர், நினைவுப் பிரசுரம் வெளியிட்டோர் மற்றும் உதவிக்கரம் தந்த எல்லா இதயங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வீரப்பதிராயன்
கரணவாய் தெற்கு,
கரவெட்டி

(இ-6740)

தகவல்:
குடும்பத்தினர்
021 226 3658

# பாதுகாப்புச்சேவை நிறுவனத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று

மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனத்தின் வருடாந்த ஒன்றுகூடல் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு இல. 527, நாவலர் வீதி, நல்லூர் எனும் முகவரியில் அமைந்துள்ள தியாகி அறக்கொடை சொர்ணாம்பிகை மண்டபத்தில் இடம்பெறும்.

நிர்வாகப் பணிப்பாளர் வி.சுகுமாரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக டி.என்.நவரட்ண (சிவில் பாதுகாப்புச் திணைக்களம் -களுத்துறை), யாழ்ப்பாணம் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பிரதி பொது முகாமையாளர் எந்திரி எஸ்.சிவநாதன், சாவகச்சேரி துங்கீஸன், கிளினிக் வைத்தியர் பி.நித்தியானந்தன், யூனியன் அசூரன்ஸ் வலய முகாமையாளர் சி.என்.மதிவதனன், ஏ.ஜே. ï ] ì ï V\ ì [g ¼é VÄï ì - MSS Pvt Ltd) நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் ஜி.றொசைறோ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# தென்னை பயிர்ச்செய்கையாளர்களுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு நல்லூரில்

தென்னை பயிர்ச் செய்கை சபையினால் தென்னைப் பயிர்ச் செய்கையினை மேம்படுத்துவதற்காக பல்வேறு திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வகையில் தென்னை மண் ஈரப்பதன் பேணல், தென்னை மரங்களுக்கான டொலமைற் பிரயோகம், ஊடுபயிர்ச்செய்கை மற்றும் தென்னை மட்டைக்குழி அமைத்தல் போன்ற எமது மானிய திட்டங்களின் ஊடாக பலர் பயனடைந்து வருகின்றனர்.

எனவே இவ் வருடமும் மேற்படி வேலைத திட்டங்களினை மேற்கொண்டவர்களை ஊக்குவிக்கும் முகமாக மானியக் கொடுப்பனவு வழங்க உத்தேசித்துள்ளோம். இதன் முதற்கட்டமாக இத் திட்டங்களுக்குரிய பயனாளிகளுக்கு முதலமைச்சர் மற்றும் அரசாங்க அதிபர் தலைமையில் காசோலை வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 27 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறும் என தென்னை பயிர்ச் செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் அறிவித்துள்ளார். (இ)


## விற்பனைக்கு

சாவகச்சேரி சரசாலை கனகன்புளியடி சந்திக்கு அண்மையில் பருத்தித்துறை வீதியில் 9 1/2 பரப்பில் 4 அறைகளைக் கொண்ட பூர்த்தியடையாத வீடும் தென்னந் தோட்டமும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
011 236 0769 (சி-6760)


# இராசி பலன்

18.12.2016
(மார்கழி 03, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு
பஞ்சமி முன்னிரவு 11.26 மணிவரை
ஆயிலியம் மாலை 6.08 மணிவரை
சுபநேரம் 9.23-10.53 மணிவரை
இராகுகாலம் 4.53-6.23 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது செவ் | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்தராடம், திருவோணம் மாலை 5.42 மணிக்கு சிங்-சந் | | சந் |
| சுக் | | | ராகு |
| சூரி புத | சனி | | குரு |

**மீனம்:** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டு வீர்கள், ஏற்கனவே திட்டமி ட்ட காரியமொன்று இன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**மேடம்:** தொட்ட காரியங்களில் வெற்றி பெறுவீர்கள், கொடுக்கல்-வாங்கல்கள் சுமுகமாக அமையும், வீட்டை அழகு படுத்தும் எண்ணம் உருவாகும்.

**இடபம்:** கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த கருமங்களில் முன்னேற்றம் ஏற்படும், தன்னம்பிக்கை துளிவிடும் நாள், போசன நன்மையுண்டு.

**மிதுனம்:** கடினமான வேலைகளைக் கூட நியாயமாகப் பேசி முடித்துக் கொள்வீர்கள். வெளியூர்ப் பயணிகளால் ஆதாயமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கும்பம்:** குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவமொன்று இடம் பெற லாம், மாற்றுக் கருத்துடை யோர் மனம் மாறுவர், கடன் சுமை குறைய வழிவகை செய்வீர்கள்.

**கடகம்:** விருப்பங்கள் நிறைவேற வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும்.

**மகரம்:** வசதி வாய்ப்புக்களைப் பெரு க்கிக் கொள்ள முற்படுவீர் கள், கொடுத்த வாக்கை கடைசி நேரத்தில் காப்பாற்று வீர்கள், கௌரவமான சம்ப வங்கள் இடம்பெறும்.

**சிம்மம்:** எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், சயன சுகக் குறைவான நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் உருவாகும்.

**தனுசு:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், எதிலும் பொறுமையை கடைப்பிடிப்பது நல்லது, மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும்.

**விருச்சிகம்:** தந்தை வழி உறவில் எதிர் பார்த்த உதவிகள் கிடைக் கும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், எதிர்கால நலனில் அதிக அக்கறை காட் டுவீர்கள்.

**துலாம்:** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**கன்னி:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட் டுவீர்கள், தன்னம்பிக்கை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்தித்துறை துறைமுக பணிகள் ஆரம்பம்



(கரணவாய்)

பருத்தித்துறை துறைமுகத்தினை அபிவிருத்தி செய்வதற்கான ஆரம்பப்பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ் வருட முற்பகுதியில் பருத்தித்துறை துறைமுகத்தின் அபிவிருத்தி குறித்து ஆராய்வதற்காக நேரடியாக வந்த கடற்றொழில் அமைச்சர் இங்குள்ள நிலைமை குறித்து ஆராய்ந்து சென்றார்.

இந்நிலையில் தற்போது இயந்திரங்கள் கொண்டு வரப்பட்டு அப் பகுதியின் ஆழம், மண்ணின் தன்மைகள் என்பன பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

இவை பரிசோதிக்கப்பட்டு அதன் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்எனவும்அதன்பின்னரே துறைமுகத்தின் அபிவிருத்தி முன்னெடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(இ-60)

## க.ச.ட.த.ப.ற. குறும்பட வெளியீடு

(யாழ்ப்பாணம்)

க.ச.ட.த.ப.ற.குறும்பட வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கல்லூரி அதிபர் எஸ்.வேலழகன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறும் . (இ-3)

# யாழ்ப்பாணத்தில் திருட்டுப் போன 21 துவிச்சக்கரவண்டிகள் மீட்பு

## பொலிஸாரால் மூவர் கைது



யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் துவிச்சக்கர வண்டிகளை திருடிய மூவரை கைது செய்துள்ளதாகவும் அவர்களிடமிருந்து 21 துவிச்சக்கரவண்டிகளையும் கைப்பற்றியுள்ளதாகவும் யாழ்பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்துள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் துவிச்சக்கர வண்டிகளின் உரிமையாளர்கள் யாழ். பொலிஸ் நிலையத்துடன் உரிய ஆதாரங்களுடன் தொடர்பு கொணடு தமது துவிச்சக்கர வண்டிகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்டகாலமாக யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளிலும் துவிச்சக்கரவண்டிகள் களவாடப்பட்டு வந்தன. இந்நிலையில் இச் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இதனடிப்படையில் எமக்கு கிடைக்கப்பெற்ற முறைபபாடுகளுக்கமைய மேற்கொணடிருந்த விசாரனைகளின் படியே இம் மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட மூவரும் 21,22 வயதுடையவர்களாக காணப்பட்டதுடன் இவர்கள் கல்வியங்காடு, குருநகர், பாஷையூர் பகுதிகளை சேர்ந்தவாகள் எனவும் தெரிவித்தார்.

மேலும் இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளினூடாக இவர்கள் களவாடியிருந்த துவிச்சக்கர வண்டிகள் 21ஐ கைப்பற்றியிருந்தோம். இவ்வாறு கைப்பற்றப்பட்ட துவிச்சக்கரவண்டிகளில் அதிகளவானவை புதிய துவிச்சக்கரவண்டிகளாக காணப்பட்டன. அனைத்து துவிச்சக்கர வண்டிகளுமே வேறு திறப்பினை பயன்படுத்தியும் பூட்டை உடைத்தும் தான் திருடப்பட்டுள்ளன. எனவே துவிச்சக்கர வண்டிகளை உபயோகிப்போர் பாதுகாப்பான இடத்தில் தரித்து விட்டு செல்லவும் எனவும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்ட குறித்த மூவரையும் நீதவான் நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் இவர்களை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டிருந்தது.

இதேவேளை தமது துவிச்சக்கர வண்டிகள் களவாடப்பட்டிருந்தால் யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு தமது துவிச்சக்கர வண்டிகளை அடையாளம் காணமுடியும் எனவும் யாழ். பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார். (இ-4)

# வடக்கு அமைச்சுக்களின் பட்ஜெட் குறித்து செவ்வாய்க்கிழமை விவாதம் நடக்கும்

வடக்கு மாகாண அமைச்சுக்களின் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது. வடக்கு மாகாண சபையின் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தை முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் பதின் மூன்றாம் திகதி சமர்ப்பித்திருந்தார். அன்றைய அமர்வின் போது வடக்கு மாகாண ஆளுநர் செயலகம், மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழு மற்றும் மாகாண பேரவை செயலகம் ஆகியவற்றுக்கான செலவீன தலைப்பு தொடர்பில் விவாதிக்கப்பட்டது.

இந்நிலையில் குறித்த மூன்று செலவீன தலைப்புக்களுக்கும் வடக்கு மாகாண சபை அங்கீகாரமளித்துள்ள நிலையில் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையிலேயே வடக்கு மாகாண விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு, சுகாதார அமைச்சு, மீன்பிடி அமைச்சு, முதலமைச்சர் அமைச்சு, பிரதம செயலர் அலுவலகம் ஆகியவற்றின் செலவீனங்கள் தொடர்பில் விவாதிக்கப்படவுள்ளன. இதில் முதலமைச்சர் அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 2430.611 மில்லியன், மூலதன் செலவீனமாக 301.5 மில்லியனும் பிரதம செயலாளர் அலுவலகத்திற்கு மீண்டு வரும் செலவீனமாக 872.78 மில்லியனும் மூலதன செலவீனமாக 393.38 மில்லியனும் மாகாண விவசாய அமைச்சுக்கான மீண்டு வரும் செலவீனமாக 983. 784 மில்லியனும் மூலதன செலவீனமாக 289.5 மில்லியனும் மாகாண கல்வி அமைச்சுக்கு மீண்டுவரும் செலவீனமாக 9670.871 மில்லியனும் மூலதன செலவீனமாக 666.5 மில்லியனும் சுகாதார சுதேச மருத்துவ அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 5267.45 மில்லியனும் மூலதன செலவீனமாக 786.5 மில்லியனும் மீன்பிடி போக்குவரத்து வர்த்தக வாணிப அமைச்சிற்கு மீண்டுவரும் செலவீனமாக 420.726 மில்லியனும் மூலதன செலவீனமாக 293 மில்லியனும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவை எல்லாவற்றுக்குமான மொத்த ஒதுக்கீடு 22728.117 மில்லியனாகும்.

இந்நிலையிலேயே மேற்படி செலவீன தலைப்புக்கள் மீதான விவாதம் நாளை மறுதினம் சபையில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. இவற்றின் மீதான விவாதம் குழு நிலையில் இடம்பெற்று பின்னர் சபையின் அங்கீகாரத்திற்கு விடப்படும். மேலும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பிரமாண அடிப்படையிலான ரூபா அறுபது இலட்சம் நிதியை அதிகரித்து தருமாறு உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை தொடர்பிலும் இந்த அமர்வின் போது பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, சுமுகமான முடிவுக்கு கொண்டு வரப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (இ-4)

## சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் ஒளிவிழா இன்று

யாழ்.மாவட்ட சமூக அபிவிருத்தி மன்றம் நடத்தும் ஒளிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு நல்லூர் கந்தர்மடம் சைவ பிரகாச வித்தியாலயத்தில் சமூக அபிவிருத்தி மன்றத்தின் உப தலைவி ஜெபமணி ஜோசப் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.சென்.பற்றிக்ஸ் கல்லூரி உப அதிபர் அருட்தந்தை எ.எட்வின்நாதன், நல்லூர் பிரதேச கலாசார உத்தியோகத்தர் வி.விஜயரட் ணம், கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் குமாரதாசனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அச்செழு யூலனூர் சென். கென்றி சேமிப்பு கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ-134)





சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1

க.பொ.த (சா.த)-2016 பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு

We Serve

அண்மைக்காலமாக தமிழ் மொழி பேசும் மாணவர்கள் குறிப்பாக யாழ்ப்பாண மாணவர்கள் உயர்தரத்தில் விஞ்ஞான துறைக்கு செல்வது குறைந்து கொண்டே வருவது யாவரும் அறிந்ததே. இக்குறையைப் போக்கி விஞ்ஞான துறையை உயர் கல்வியில் தெரிவு செய்வதை ஊக்குவிக்கும் முகமாக யாழ். மாவட்டத்தில் முதல் கட்டமாக வடமராட்சி வலயத்திற்குட்பட்ட மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கொன்றினை யாழ்.பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் கருத்தாலோசனைகளுடன் சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1 நடாத்தவுள்ளது. இத்தகவல் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரூடாக பாடசாலைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பங்கு பற்றி பயனடைய க.பொ.த (சா/த)-2016 மாணவர்களை அழைக்கின்றோம்.

இடம்:-நெல்லியடி மத்திய கல்லூரி பிரதான மண்டபம்

காலம்:-24.12.2016 காலை 9.00 தொடக்கம் 12.30 வரை

தொடர்புகளுக்கு:-லயன் க.கமலேஸ்வரன்

மாவட்ட இணைப்பாளர் (தொழில் வழிகாட்டலும் தொழில் வங்கியும்)

சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306B1

தொலைபேசி:-0776047195

lionkamales@gmail.com

(இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களஞ்சியசாலையின் மீது இரவுவேளையில் கல்வீச்சு

(கரணவாய்)

கரணவாய்ப் பகுதியிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபையினரின் களஞ்சியசாலை மீது இரவு வேளைகளில் கற்கள் வீசப்படுவதாக நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

மண்டான்-கரணவாய்-உப்புரோட்டில் அமைந்துள்ள இக்களஞ்சியசாலை மீது கடந்த மூன்று நாட்களாக இரவுவேளைகளில் கற்கள் வீசப்பட்டு வந்ததாக தெரிவிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக கற்கள் வீசப்பட்டு வரும் நிலையில் இது குறித்து நெல்லியடிப் பொலிஸில் நேற்று முறையிடப்பட்டுள்ளது. (இ-60)

## விளையாட்டுப் போட்டி

நாவாந்துறை வடக்கு ஜே/ 85 முதியோர் சங்க விளையாட்டுப் போட்டியும் ஒன்றுகூடலும் பரிசளிப்பு விழாவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும். (இ-3)

# UNIVERSITY COLLEGE OF JAFFNA

UNIVERSITY OF VOCATIONAL TECHNOLOGY
MINISTRY OF SKILLS DEVELOPMENT AND VOCATIONAL TRAINING

UNIVERSITY COLLEGE OF JAFFNA

## VACANCIES

Applications are invited from suitable qualified persons for the below mentioned posts in University College of Jaffna.

### 1. LECTURER (PROBATIONARY) IN THE FIELDS OF MECHANICAL ENGINEERING, CIVIL ENGINEERING, QUANTITY SURVEYING, STATISTICS WITH COMPUTER SCIENCE AND HOSPITALITY MANAGEMENT

Qualifications:

1. A Degree with specialization in a relevant subject with First Class or Second Class (Upper Division) Honours.

OR

2. A degree with specialization in a relevant subject with Second Class (Lower Division) Honors and at least 01 year of experience in teaching /research/professional work in recognized mercantile establishment /postgraduate studies in a recognized University or Higher Education Institution;

OR

3. (a) A degree with specialization in the relevant subject without Honors or any other general degree with at least Second Class Honors,

AND

(b) A Postgraduate Degree with duration of at least 02 academic years in the relevant subject with a research component by way of thesis/dissertation;

OR

4. (a) A Degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) One year Master Degree in the relevant subject or equivalent further professional qualification offered or recognized by a professional institution established by an Act of Parliament of Sri Lanka.

AND

(c) Five (5) years professional experience after graduation or after securing professional qualification given in 4(a).

OR

5 (a) A degree or equivalent professional qualification offered or recognized by a professional institution established by Act of parliament of Sri Lanka in the relevant subject.

AND

(b) Eight (8) years professional and/ or teaching experience after graduation or after securing professional qualification given in 5(a)

Age Limit - 22 – 60yrs
Selection Procedure: Through an Interview.
Salary Scale: U-AC 3 (IV) - 2006A- Rs. 27,775 – 10 x 645 - 13 x790 – 8 x 1050 – 52895 p.m

### 2. LECTURER (PROBATIONARY) / VISITING LECTURER - COSMETOLOGY (BEAUTY CULTURE)

Qualifications:

1. Candidates shall possess the academic qualifications required for the Category 1 Mentioned above

OR

2. National Vocational Qualification (NVQ) Level 5 or equivalent in the relevant field.

Age Limit - 22 – 60yrs
Selection Procedure: Through an Interview.
Salary Scale: U-AC 3 (IV) - 2006A- Rs. 27,775 – 10 x 645 - 13 x790 – 8 x 1050 – 52895 p.m (For Permanent Posts)

### 3.DEMONSTRATORS IN BUILDING SERVICES TECHNOLOGY (MECHANICAL & ELECTRICAL ENG.), PRODUCTION TECHNOLOGY (MECHANICAL & MANUFACTURING) , FARM MACHINERY TECHNOLOGY (AGRICULTURAL MACHINERY TECHNOLOGY) AND FOOD TECHNOLOGY

Qualification:

- A Degree in the relevant filed

Age Limit - 22 – 45yrs
Selection Procedure: Through an Interview.
Salary Scale: U-AC-1 2006A Rs.21,370 p.m (Fixed)

### 4. INSTRUCTORS IN INFORMATION TECHNOLOGY AND ENGILISH LANGUAGE (CONTRACT BASIS)

Qualifications:

- A Degree in the relevant field

OR

- Not below NVQ 6 and five (05) year experience in the relevant field

Age Limit - 22 – 45yrs
Selection Procedure: Through an Interview
Salary Scale: U-AS-1 2006A Rs.21,370 p.m (Fixed)

### 5. LABORATORY ASSISTANT – BUILDING SERVICES TECHNOLOGY / CONSTRUCTION TECHNOLOGY

Qualifications:

1. Persons who have sat for the G.C.E. (O/L) Examination and passed a minimum of 02 subjects

AND

2. National Vocational Qualification (NVQ) Level 4 in the relevant field.

Salary Scale : U- PL3- 2006A – Rs.15,650 – 10X140 – 10 X155 – 10X185 -12 X200 – 22,850 p.m
Age Limit - 18 – 45yrs
Selection Procedure: Through a Trade test & Interview.

### 6. MAINTENANCE TECHNICIAN

Qualifications:

(a) Having passed the G.C.E. (O/L) Examination in six subject in one sitting with credit passes for 04 subject including;
(i)Sinhala/Tamil
(ii)English Language
(iii)Mathematics

(b) Having achieved the performance level required to follow a tertiary education course by passing the required number of subjects other than the 'General Papers' at the G.C.E.(A/L) Examination.

AND

(c) Not below National Vocational Qualification (NVQ) Level 5 in Electronics, Electrical, Multi Media, Instructional Material Development, Mechanical & ICT.

Salary Scale : U-MT-1 2006A - Rs 16,535 - 7X155 - 11X185 - 10X245 - 13X320 - 26,265 p.m
Age Limit - 18 – 45yrs
Selection Procedure: Written competitive Examination & Interview.

**Nature of Appointment:**
✓ Demonstrator and Instructor (Contract) - Temporary with entitlement to EPF & ETF.
✓ All Other Posts - Permanent with entitlement to EPF & ETF (Except Visiting)

❖ Other Government Approved Allowances.

- Specimen Application form and further details are available at **www.ucj.lk.** Duly filled applications forms indicating academic and professional qualifications should have sent to **"Assistant Registrar, University College of Jaffna, No 29, Brown Road, Kokuvil, Jaffna"** by Registered post on or before **12th January 2017.**
- Desired post applied should indicate clearly on the top left hand corner of the envelope
- Applicants from Higher Education Institutions, Government Departments and Government Corporations should apply through the Heads of such Institutions. Applications which do not conform to this requirement will be rejected. Such applicants are strongly advised to submit an advance copy to the address given above.
- Only short listed applicants will be called for the written examination and or for the interview.

Assistant Registrar
University College of Jaffna

17.12.2016

---

இவர்களுக்கு **மணமகள் தேவை** | **கல்யாண மாலை** | இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி செவ் 1 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:Diploma/வியாபாரம்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: B/6621 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 59செவ் 8 இல்<br>உயரம்: 150cm<br>தகைமை/தொழில்:MBBS/வைத்தியர்<br>எதிர்பார்ப்பு:சைவபோசனம்<br>தொ.இ: G/6662 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 32<br>உயரம்: 165cm<br>தகைமை/தொழில்:HNDA/<br>அரசதொழில்<br>தொ.இ: B/6623 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 19<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:CIMA<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/6663 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்:BSc லண்டன்<br>NOT PR<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: B/6624 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 8<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்:BA,ஆயுள்வேதம்<br>தொ.இ: G/6665 |
| பிறப்பு: 1987. இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>கி.பா: 28 செவ் 1 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L/தனியார்<br>தொழில்<br>தொ.இ: B/6625 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 56<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்<br>தொ.இ: G/6666 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai. jaffna@ gmail.com**
**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**
**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

---

UNIVERSITY COLLEGE OF JAFFNA UNIVOTEC

# University College of Jaffna

**University of Vocational Technology**
Ministry of Skills Development & Vocational Training

## Applications are open for the following Courses

- ★ Construction Technology
- ★ Building Services Technology
- ★ Mechatronics Technology
- ★ Production Technology
- ★ Farm Machinery Technology
- ★ Food Technology
- ★ Hospitality Management
- ★ Cosmetology ( Beauty Culture )

**Closing Date 16th January 2017**

***Entry Qualifications***
**GCE A/L qualified or NVQ 4**

*Career Path :*
A/L or NVQ 4 → University College [NVQ 5/ Diploma → NVQ 6/ HND] → UNIVOTEC NVQ 7/ Degree

*For more details*
University College of Jaffna
29, Brown Road,
Kokuvil,
Jaffna.

Visit our website: www.ucj.lk
E-mail: infoucjaffna@sltnet.lk
Telephone: 021-221-7791 or 021-221-7792

**Application forms are available at leading bookshops and can be dowloaded from the website or can be collected from our office**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவிடம் ஒப்படைப்பதற்கு மகிந்த ராஜபக்ஷவும் எதிர்ப்பு

(கொழும்பு)

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தை வெளிநாட்டொன்றுக்கு விற்றுவிட தற்போதைய ரணில் , மைத்திரி அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

சீனாவைக் கொண்டே அம்பாந்தோட்டை துறைமுகத்தை தான் அமைத்ததாகத் தெரிவித்த அவர் எனினும் அதற்காக சீனாவிற்கு குறித்த துறைமுகத்தை விற்க முற்படவில்லை என்றும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பணிகளை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் சீன் நிறுவனமொன்று பொறுப்பேற்கவுள்ளதாக பிரதமர் உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தார்.

குறித்த நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு இணங்க அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்புக்கான பொறுப்பு கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு நிரந்தர கடற்படை முகாமொன்றை அமைக்கத்திட்டமிட்டுள்ளதாகவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடற்படைத்தளபதியை சந்தித்து கலந்துரையாடிய நிலையில் ஊடகங்களுக்கு தெரிவித்தார்.

இந்த நிலையில் இலங்கைக்கு அதிக வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்தை வெளிநாட்டிற்கு விற்றுவிடுவதில் தற்போதைய அரசாங்கம் ஆர்வம் காட்டி வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம்சாட்டியுள்ளார்.

துறைமுகப்பணியாளர்கள் மேற்கொண்ட பணிப்புறக்கணிப்பின் போது அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வந்திருந்த இரண்டு வெளிநாட்டுக் கப்பல்களை சிறைபிடித்திருந்ததாக அரசாங்கம் அறிவித்துவந்த நிலையிலும் வெளிநாட்டு கப்பல்கள் அங்கு வந்திருந்ததாக மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதன்மூலம் அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு என்ன தடைகள் வந்தாலும் வெளிநாட்டு கப்பல்கள் வரும் என்பது உறுதியாகியுள்ளதாகவும் கூறும் மகிந்த இந்தப் பின்னணியில் துறைமுகத்தை விற்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்துள்ளார்.

அதேவேளை மத்தள விமான நிலையத்திற்கு தனது ஆட்சியின் போது வாராந்தம் 24 விமானங்கள் வந்திறங்கியதாகவும் எனினும் தற்போதைய அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறியதும் தன்மீதுள்ள ஆத்திரம் காரணமாக குறித்த விமான நிலையத்திற்கான விமானப் பயணங்களை இரத்துச் செய்தது மாத்திரமன்றி நெற் களஞ்சியசாலையாக விமான நிலையத்தை மாற்றியதாகவும் கடும் விசனம் வெளியிட்டார். (இ-10)

# அடுத்தாண்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது

2017 ஆம் ஆண்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

காலநிலை மாற்றம் மற்றும் உரத்தட்டுப்பாடு காரணமாக இம்முறை பெரும்போக நெற்செய்கைக்கான அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ளமுடியாது போகும என விவசாயிகள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக, கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இம்முறை பெரும்போக நெற்செய்கை அறுவடை அரைவாசியாகக் குறைவடையும் நிலை காணப்படுகின்றது.

அதிகளவில் நெல் பயிரிடப்படும் பொலநறுவை, அநுராதபுரம் மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில் இம்முறை பெரும்போக நெற்செய்கை குறைந்தளவிலேயே மேற்கொள்ளப்படுகின் றது.

குருநாகல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 90 ஆயிரம் ஏக்கர் வயல் காணியில், சுமார் 19 ஆயிரம் ஏக்கரில் மாத்திரமே நெற் செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் 8 இலட்சம் ஏக்கர் வயல் காணியில் 90 வீதமான பகுதியிலேயே பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-10)

# மகிந்தவின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரித்த ருவான்



இலங்கை கடற்படையின் பெயரைக் கெடுப்பதற்காகவே, அம்பாந்தோட்டை துறைமுகப் பணியாளர்களின் போராட்டத்தைக் குழப்புவதற்கு, கடற்படையை அரசாங்கம் அனுப்பியதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறிய குற்றச்சாட்டை, அரசாங்கம் நிராகரித்துள்ளது.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, மகிந்த ராஜபக்ஷவின் குற்றச்சாட்டை முற்றாக நிராகரிப்பதாக தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்தைப் பாதுகாக்கவும், போராட்டக்காரர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த இரண்டு கப்பல்களை விடுவிககவுமே கடற்படை ஈடுபடுத்தப்பட்டது.

தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பல்களை பாதுகாக்கும் உரிமை கடற்படைக்கு உள்ளது. அந்த இரண்டு கப்பல்களுக்கு மாத்திரமன்றி, துறைமுகத்தின் அருகில் இருந்த எண்ணெய்த் தாங்கிகளுக்கும் அச்சுறுத்தல் இருந்தது.

போராட்டக்காரர்கள் ஏற்கனவே, மின் பிறப்பாக்கிகள், இழுவைப் படகுகள், மரைன் படகுகள் உள்ளிட்ட துறைமுகச் சொத்துக்களை சேதமாக்கியிருந்தனர். இதனால், 15 மில்லியன் ரூபாவுக்கு மேல் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சோமாலியா போன்று இலங்கையும் கடற்கொள்ளையரின் பாதுகாப்பிடமாக முத்திரை குத்தப்படுவதையா மகிந்த ராஜபக்ஷ விரும்புகிறார்?

போராட்டத்தில் ஈடுபட்ட பணியாளர்கள், இலங்கைத் துறைமுக அதிகார சபையினால் பணிக்கு அமர்த்தப்பட்டவர்களல்ல. முன்னைய ஆட்சிக்காலத்தில் மனிதவள நிறுவனம் ஒன்றின் ஊடாகவே இவர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருந்தனர். இந்தப் பணியாளர்கள் மீது கரிசனை இருந்திருந்தால் முன்னைய ஆட்சியில், அவர்களை துறைமுக அதிகார சபையின் ஊடாக பணிக்கு அமர்த்தியிருக்கலாம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# பொறுப்புக்களை சரியான முறையில் ஊடகங்கள் நிறைவேற்றுவதில்லை

## இராஜாங்க அமைச்சர் செனவிரத்ன குற்றச்சாட்டு

ஊடகங்கள் தமது பொறுப்புக்களை சரியான முறையில் நிறைவேற்றுவதில்லை என இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு தொழில்நுட்ப கல்லூரியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். ஊடகங்கள் தமது கடமைகளை சரிவர நிறைவேற்றினால் நாட்டை அபிவிருததி செய்வதற்கு அவ்வளவு காலம் தேவையில்லை என்று அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற சிறந்த வேலைத் திட்டங்கள் ஊடகங்களில் காண்பிக்கப்படுவதில்லை எனவும் சில அசாதாரண சம்பவங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பிரசாரம் செய்வதற்கு ஊடகங்கள் முன்னுரிமை வழங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஊடகவியலாளர்கள் தமது நாடுகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செய்திகளை வெளியிடுவதை தவிர்த்துக் கொள்வதாக இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் செனவிரத்ன தெரிவித்தார். (இ-10)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

12.2016
18

- 1271 - குப்லாய் கான் தனது சீனப் பேரரசின் பெயரை "யுவான்" என மாற்றிக் கொண்டான். யுவான் வம்சம் ஆரம்பமானது.
- 1505 - பெல்ஜிய மன்னன் ஜோன் ஜஓ வான் ஹோர்ன் தூக்கிலிடப்பட்டான்.
- 1642 - ஏபெல் டாஸ்மான் நியூசிலாந்தில் காலடி பதித்த முதலாவது ஐரோப்பியரானார்.
- 1787 - நியூ ஜெர்சி ஐக்கிய அமெரிக்காவில் 3வது மாநிலமாக இணைந்தது.
- 1911 - சேர் பொன்னம்பலம் இராமநாதன் இலங்கையின் சட்டசபைக்கு தேசியப் பிரதிநிதியாகத் தெரிவானார்.
- 1926 - துருக்கி கிரிகோரியன் நாட்காட்டிக்கு மாறியது.
- 1935 - இலங்கை சமசமாஜக் கட்சி என்ற இடது சாரிக கட்சி இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1941 - ஹொங்கொங்கின் பிரித்தானிய ஆளுனர் சரணடைய மறுத்ததைத் தொடர்ந்து ஜப்பான் ஹொங்கொங் மீது படையெடுத்தது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் விமானப்படை விமானங்கள் சீனாவின் ஹன்கோவ் நகரில் ஜப்பானிய இராணுவத்தளத்தின் மீது குண்டுகளை வீசின.
- 1961 - இந்தோனீசியா டச்சு நியூ கினியை ஆக்கிரமித்தது.
- 1966 - சனி கோளின் சந்திரன் எப்பிமேத்தியஸ் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1973 - சோவியத் விண்கலம் சோயூஸ் 13 வலன்டீன் லேபெடெவ், பியோத்தர் கிளீமுக் ஆகியோருடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1987 - லரீ வோல் தனது பேர்ள் கணினி நிரலாக்க மொழியை வெளியிட்டார்.
- 1990 - ஈழப்போர்: இலங்கையின் திருகோணமலை இராணுவத் தளபதி லக்கி விஜயவர்த்தனா கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டார்.
- 1997 - எச்.டி.எம்.எல் 4.0 வெளியிடப்பட்டது.
- 1999 - ஈழப்போர்: கொழும்பு நகரசபை முன்னரங்கில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார கூட்டத்தின் போது, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக குமாரதுங்க மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் தனது வலது கண்ணை இழந்தார்.
- 2005 - சென்னையில் வெள்ள நிவாரணம் பெறுவதில் ஏற்பட்ட நெருக்கடியில் 42 பேர் உயிரிழந்தனர்.
- 2012 - தமிழ் விக்கிப்பீடியாவில் 50,000 வது கட்டுரை எழுதப்பட்டது.

**பிறப்புக்கள்**

- 1822 - ஆறுமுக நாவலர், ஈழத்தின் ஆன்மீகவாதி, தமிழ் உரைநடையின் முன்னோடி. (இ. 1879)
- 1856 - ஜெ. ஜெ. தாம்சன், நோபல் பரிசு பெற்ற ஆங்கில இயற்பியலாளர். (இ. 1940)
- 1863 - பிரான்ஸ் பேர்டினண்ட், ஆஸ்திரியாவின் முடிக்குரிய இளவரசர். (இ. 1914)
- 1878 - ஜோசப் ஸ்டாலின், சோவியத் தலைவர். (இ. 1953)
- 1932 - நா. பார்த்தசாரதி, தமிழ் எழுத்தாளர். (இ. 1987)
- 1946 - நெல்லை க. பேரன், ஈழத்து எழுத்தாளர் . (இ. 1991)
- 1948 - ஸ்டீவன் ஸ்பில்பேர்க், அமெரிக்கத் திரைப்பட இயக்குநர்.

**இறப்புகள**

- 1843 - தாமஸ் கிரஹாம், லினடொக் பிரபு, இந்தியாவுக்கான பிரித்தானிய வைசிராய். (பி.1748)

**சிறப்பு நாள்**

- சர்வதேச புலம் பெயர்ந்தோர் தினம்.
- நைஜர் - குடியரசு தினம் (1958)


# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 100 | 90 | 70 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 110 | 120 | 100 | 120 | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 100 | 220 | 110 | 160 | 60 |
| தக்காளி | 60 | 120 | 45 | 60 | 60 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 80 | 40 | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 30 | 80 | 20 | 20 | 40 | 50 | 30 |
| கரட் | 140 | 140 | 90 | 100-140 | 100 | 160 | 100 |
| பூசணி | 40 | 60 | 35 | 50 | 40 | 60 | 40 |
| புடோல் | 100 | 80 | 60 | 80 | 50 | 80 | 70 |
| வாழைக்காய் | 40 | 80 | 45 | 50 | 40 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 80 | 100 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 100 | 140 | 95 | 120 | 110 | 120 | 100 |
| பாகற்காய் | 160 | 400 | 180 | 300 | 200 | 400 | 300 |
| வெண்டிக்காய் | 80 | 150 | 80 | 100 | 80 | 120 | 80 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | 50 | 60 | 60 | 80 | 50 |
| பயற்றங்காய் | 140 | 200 | 150 | 180 | 120 | 160 | 200 |
| லீக்ஸ் | 100 | 100 | 95 | 100 | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 100 | 50 | 80 | 80 | 120 | 60 |
| கறிமிளகாய் | 180 | 100 | 130 | 200 | 140 | 160 | 100 |
| முருங்கைக்காய் | 300 | 100 | 200 | 350 | 300 | 160 | 300 |
| போஞ்சி | 200 | 200 | 160 | 200 | 240 | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 60 | 50 | 50 | 60 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 60 | 50 | — | 40 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 400 | 300 | 400 | 400 | 400 | 35-45 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 20-40 | 50 | 30 | — | 50 |
| இராசவள்ளி | 300 | 500 | — | 300 | 300 | — | 300 |
| வெங்காயப்பூ | 35 | 200 | — | — | 240 | — | — |
| முள்ளங்கி | 40 | 120 | 50 | 60 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 15 | 30 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 15 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 120 | — | 80 | 60 | 80 | 70 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேசிய மன்னருடன் மைத்திரி விசேட சந்திப்பு







மூன்று நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு மலேசியா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் மலேசிய மன்னர் சுல்தான் முஹம்மதுக்குமிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

மலேசிய அரச மாளிகைக்கு சென்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, மலேசிய மன்னர் மகிழ்ச்சியுடன் வரவேற்றார்.

மிகவும்சுமுகமாக இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இலங்கையின் புதிய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப்புகழ்ந்து பேசிய மலேசிய மன்னர், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையிலான இணக்க அரசாங்கத்தின் செயற்பாடுகளையும் பாராட்டினார்.

இலங்கைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குமாறு தான் மலேசிய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகக் குறிப்பிட்ட மன்னர் சுல்தான் முஹம்மத், இலங்கையின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு வாழ்த்துக்களையும்தெரிவித்தார்.

நல்லிணக்கம், அரசியலமைப்பு சீர்திருத்தம் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை நோக்கி புதிய இணக்க அரசாங்கத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மலேசிய மன்னருக்கு விளக்கினார்.

மலேசிய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகளுக்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி, இலங்கையின்எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொள்வதற்கு மலேசியாவின் உதவி தொடர்ந்தும்கிடைக்கும்என தான்நம்புவதாகவும் தெரிவித்தார்.

2016 ஆம் ஆண்டு அதிகாரத்திற்கு வந்த மன்னர் சுல்தான் முஹம்மத் மலேசியாவின் மன்னர்களில் மிகவும் குறைந்த வயதுடையவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# சீருடையில் இருந்த மாணவனைத் தாக்க முயன்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன

பாடசாலைச் சீருடையில் இருந்தமாணவன்ஒருவனை, தாக்க முயற்சித்தார் என்று இராணுவத்தில் இருந்து அண்மையில் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி கொழும்பு டி.எஸ்.சேன நாயக்க வித்தியாலயம் அருகே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

க.பொ.த சாதாரணதரத் தேர்வு எழுதும் அந்த மாணவன், கணிதபாட முதல் தாள் தேர்வை எழுதி விட்டு வரும் போதே, மேஜர் ஜெனரல் கமால்குணரட்ன அந்த மாணவனின் சீருடையில் பிடித்து இழுத்து, அச்சு றுத்தியதுடன் தாக்கவும் முயன்றார்.

இதேவேளை மேஜர் ஜெனரலினால் அச்சுறுத்தப்பட்ட மாணவனை அழைத்துச் சென்று மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் பொலிஸ் நிலையத்தில் முறையிடவுள்ளதாக, இலங்கை ஆசிரியர் சங்க செயலர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, சில இணையத்தளங்கள் தமக்கு எதிராக அடிப்படையற்ற, பொய்யான தகவல்களை வெளியிட்டுள்ளதாக மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.



தாம் ஒருபோதும் மாணவனைத் தாக்கவில்லை என்றும் இராணுவத்தில் இருந்த போது கூட ஒரு வீரரையும் தாக்கியதில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-10)

# பயணச்சீட்டு வழங்காத பேருந்துகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்

பொதுப் போக்குவரத்தில் தனியார் பேருந்துகளில் பயணிகள் போக்குவரத்து செய்யும் போது பயணச்சீட்டு வழங்காத பேருந்து உரிமையாளர்களுக்கு எதிராக இனி மேல் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதா பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை தெரிவித்துள்ளது.

பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கு பயணச்சீட்டு வழங்குவது கட்டாயமானது என்று அதிகார சபையின் தலைவர் துசித ருவான் வணிகரத்ன தெரிவித்தார். பொதுப் போக்குவரத்து பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகள் பயணச்சீட்டு பெற்றுக் கொள்வது அவர்களின் உரிமை என்று அவர் தெரிவித்தார். அவ்வாறு நடந்து கொள்ளத் தவறும் பேருந்துகள் தொடர்பில் அதிகார சபைக்கு அறியத் தருமாறு துசித ருவான் வணிகரத்ன மேலும் தெரிவித்தார். (இ-10)

## வாரம் ஒரு தகவல்

### ஐன்ஸ்டீனும் சிறுவர்களும்

கிறிஸ்துமஸ் திருநாள். சிறுவர்கள் கூட்டமாகக்கூடி ஐன்ஸ்டீன் வீட்டின் முன்னே வந்து பாடிக்கொண்டு நின்றார்கள்.

சிறுவர்களின் குரலைக் கேட்டு ஐன்ஸ்டீன் வெளியே வந்து பார்த்தார். அவரைக் கண்டதும் சிறுவர்கள் ஐயா நல்ல நாள், ஏதாவது எங்களுக்குக் காசு கொடுங்கள் என வேண்டிக் கொண்டார்கள்.

உடனே ஐன்ஸ்டீன் வீட்டினுள் சென்றார். நகைப்பளிக்கும் விதத்தில் ஆடைகளை அணிந்து கொண்டு கையில் ஒரு பிடிலோடு வெளியே தோன்றினார்.

சிறுவர்களிடம் அவர், பிள்ளைகளே நானும் உங்களோடு வருகிறேன். பிரியும் காசில் எனக்கும் பங்கு கொடுங்கள் என்று சொல்லி அவர்களோடு புறப்பட்டு விட்டார்.

**கவிஞர் தே.ப.பெருமாள்**

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் போலி கிளைமோர் குண்டுகள் மீட்பு அமெரிக்காவில் இருந்து வந்ததாம்




கட்டுநாயக்க விமான நிலையத்தில் சரக்கு விமானம் ஒன்றில் கண்டெடுக்கப்பட்ட வெடி பொருட்கள் போலியானவை என பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த மாதிரி வெடி பொருட்கள் அமெரிக்க இராணுவத்தினரால் பயிற்சிகளின்போது பயன்படுத்தப் படுபவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க விமான நிலையத்தில் இரண்டு கிளைமோர் குண்டுகள், இரண்டு ஆர்.பி.ஜி குண்டுகள் மற்றும் இரண்டு கையெறி குண்டுகள் மீட்கப்பட்டதாக தகவல் வெளியாகியிருந்தது. இதனை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது குறித்த வெடிபொருட்கள் உண்மையானவை அல்ல என கண்டறிப்பட்டதுடன் அவை பயிற்சிகளுக்காக அமெரிக்க தூதரகத்தினால் கொண்டு வரப்பட்டவை எனவும் கண்டறியப்பட்டுள்ளது. இந்த தகவலை இலங்கை சுங்கப்பிரிவு உறுதிப்படுத்தியுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதாவின் மறைவு குறித்து பேரறிவாளன் கண்ணீருடன் கடிதம்




தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் மறைவு தம்மை துயரக் கடலில் ஆழ்த்தியதாக, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் சிறையில் இருக்கும் பேரறிவாளன் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவின் மரணம் குறித்து பேரறிவாளன் கடிதம் ஒன்றையும் எழுதியுள்ளார்.

குறித்த கடிதத்தில், "என் தாயின கரத்தை பற்றிக் கொண்டு கலங்காதீர்கள் உங்கள் மகன் தான் உங்களுடன் வந்து சேரப்போகின்றாரே என பரிவோடு என் தாயிடம் கூறியவர் முதல்வராக இருந்த ஜெயலலிதா. அந்த வார்த்தை 23 ஆண்டுகளாக தன்னலம் கருதா தியாகத்திற்கு அங்கீகாரம் வழங்கியதாக இருந்தது.

அதுமட்டுமல்லாது 2011 ஆம் ஆண்டில் மூவர் உயிருக்காக சட்டப்பேரவையில் அவர இயற்றிய தீர்மானம், 2014 இல் 7பேரின் விடுதலைக்காக ஏற்படுத்தப்பட்ட தீர்மானத்தை கையாண்ட விதமும, "திருவாளர்கள்" என்று அழைத்ததும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

ஈழ விடுதலை குறித்தும், காவிரி, முல்லை பெரியாறு நீர் பங்கீடு குறித்தும் மக்களின பிரச்சினைகளுக்காக அவர் போராடிய விதம் அற்புதமானது. மக்களுக்காக பணியாற்றி, மக்கள் பணியிலேயே அவர் உயிர் துறந்துள்ளார். அவர் கையால் விடுதலை பெற்று அவருக்கு நன்றி கூற வேண்டும் என்று பெருங்கனவு கண்டேன்" என கண்ணீருடன் தெரிவித்துள்ளார். (இ-10)



சாமான்ய மக்களுக்காகவே வாழ்ந்தார்; சாமான்ய மக்களுக்காகவே செயலாற்றினார்; மக்கள் பணியிலேயே உயிர் துறந்தார். மண்ணில் மனித தேகம் வாழும்வரை மக்கள் மனங்களில் வாழ்வார்.

[illegible]

கண்ணீருடன்,

அறிவு

[illegible]

# சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல்; இலங்கை-இத்தாலியிடையே ஒப்பந்தம்

சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் தொடர்பில் இலங்கை மற்றும் இத்தாலி நாடுகளுக்கு இடையில் புதிய ஒப்பந்தம் ஒன்று ஏற்படுத் தப்பட்டுள்ளது.

இருநாட்டு மோட்டார் போககுவரத்து திணைக்கள அதிகாரிகளுக்கு இடையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம இலங்கையில் பெற்றுக் கொள்ளும் சாரதி அனுமதிப் பத்திரம் மூலம் இத்தாலியி லும் வாகனம் செலுத்த முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியில் வாழும் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் குறித்த ஒப்பந்தம் மூலம் நன்மை அடையவுள்ளதாக இத்தாலியிலுள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது. இந்த ஒப் பந்தம் அடுத்த வருட ஆரம்பத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் என தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-10)

# மூன்று மாகாணங்களில் முதலீட்டு வலயங்களை உருவாக்க அரசு முடிவு

மேல், வடமேல், சப்ரகமுவ ஆகிய மாகாணங்களை மையப்படுத்தி மூன்று பிரதான முதலீட்டு வலயங்களை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிக்கச் செய்தல், நாட்டில் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் உள்ளிட்ட முக்கிய பல விடயங்களைக் கருத்திற்கொண்டே மேற்படி நடவடிக்கையில் அரசாங்கம் இறங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அம்பாந்தோட்டையில் அமையவுள்ள தொழிற்பேட்டை, உத்தேச கொழும்பு நிதி நகரம் ஆகிய திட்டங்களுக்கு மேலதிகமாக மேற்படி மூன்று முதலீட்டு வலயங்கள் உருவாக்கப்படவுள்ளன.

வடமேல் மாகாணத்தில் குருநாகலையும், மேல் மாகாணத்தில் களுத்துறை, மீரிகம மற்றும் சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரியையும்அடிப்படையாகக்கொண்டே குறித்த திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

இதற்குரிய காணிகளை குறித்த பகுதிகளில் தெரிவு செய்வது சம்பந்தமாக பிரதேச அரசியல்வாதிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் நடந்துள்ளது.

இதன்படி, இன்னும் இரண்டு மாதங்களுக்குள் காணிகளை அடையாளம் கண்டு அறிவிக்குமாறு பிரதமர் ஆலோசனை வழங்கியுள்ளார் என அறியமுடிகின்றது. (இ-10)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்

## 16.12.2016–13.01.2017



*தவறை ஒப்புக்கொள்ளும் குணம் கொண்ட மிதுன ராசி நேயர்களே!*

மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் தனாதிபதி சந்திரன் உங்கள் ராசியில் சஞ்சரிக்கின்றார். அவரை இராசிநாதன் புதனும், சகாய ஸ்தானாதிபதி புதனும் பார்க்கின்றார்கள். எனவே புத-ஆதித்ய யோகம் செயற்படுகிறது. மேலும் அஷ்டமாதிபதியான சனி பகவான் 6இல் சஞ்சரித்து விபரீத ராஜ யோகத்தை உருவாக்குகிறார்.

எனவே திட்டமிடாது செய்யும் காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். உங்கள் திறமை பளிச்சிடும். உங்களை விட்டு விலகிச் சென்ற உற்றார், உறவினர்கள், ஓடிவந்து உறவாடுவர். புதிய பாதை புலப்படும். வியாபாரத்திலிருந்த தொய்வுநிலை மாறும். பங்குதாரர்கள் மூலதனம் போட்டு பணம் பெருக வழிவகுத்துக் கொடுப்பர்.

அரசு வழியில் கடனுதவியை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கும், வள்ளல்களின் ஆதரவைப் பெறுவதற்கு திட்டமிட்டவர்களுக்கும் அது நிறைவேறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். பஞ்சம விரயாதிபதியான சுக்ரன் 8இல் மறைவது யோகம் தான். குழந்தைகளின் எதிர்காலக் கனவுகளை நனவாக்க எடுத்த முயற்சிகள் இனி ஒவ்வொன்றாக நடைபெறும்.

தாமதங்களை அகற்றுவது குருவின் பார்வை பலம் தான். அந்த அடிப்படையில் 5,12இற்கு அதிபதியான சுக்ரனைக் குரு பார்க்கிறார். எனவே பார்க்கும் குருவைப் பலப்படுத்த வியாழக்கிழமை தோறும் விரதமிருந்து குருபகவானை வழிபட்டு வருவது நல்லது. குருவிற்குரிய சிறப்பு ஸ்தலங்களான ஆலங்குடி, பட்டமங்கலம், குருவித்துறை போன்ற ஆலயங்களுக்கு சென்று வழிபட்டு வருவதும் நல்லது.

திடீர் திருப்பங்களை தித்திக்கும் விதத்தில் தருவது தெய்வ வழிபாடுகள்தான். எனவே ஆன்மீகப் பற்றை அதிகம் வளர்த்துக் கொள்ளுங்கள். இல்லற வாழ்க்கை சிறப்பாக இருக்கும். ஞானகாரகன் கேது, செவ்வாயோடு 9இல் இணைந்திருக்கிறார். எனவே பூர்வீகச் சொத்துகளில் ஏற்பட்ட பிரச்சினைகள் அல்லது புதிதாக வாங்கிப் போட்ட சொத்துகளில் பிரச்சினைகள் உருவாகலாம். அவற்றைச் சமாளிக்க வேண்டிய பொறுப்பும் உங்களுக்கு ஏற்படும். இம்மாதம் சிவாலயம் சென்று நடராஜப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

## விரோதங்கள் விலகும்!

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிநாதன் புதன் டிசெம்பர் 19 ஆம திகதி விருச்சிகத்தில் சஞ்சரிக்கப் போகிறார். புதன் வக்ர இயக்கத்தில் வருவது யோகம் தான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வக்ரம் பெறும் பொழுது, உங்களுக்கு யோகத்தை அதிகம் வழங்கும் என்பதால் இக்காலம் ஒரு பொற்காலமாகும். நினைத்த காரியம் நிறைவேறும். நிகழ்காலத் தேவைகள பூர்த்தியாகும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும். தடைப்பட்ட காரியங்கள் தானாகவே நடைபெறும். உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டு. பதவி உயர்வோடு இடமாற்றங்கள் வந்து சேரலாம்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 30ஆம் திகதி கும்ப ராசிக்குச் சுக்ரன் செல்கிறார். அதன் விளைவாகப் பழைய வாகனங்களை வாங்கும் சூழ்நிலை




உருவாகலாம். முன்னேற்றத்தில் ஏற்பட்ட முட்டுக்கட்டைகள் அகலும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்கிச் சேர்க்கும் எண்ணம் உருவாகும். பெண் பிள்ளைகளின் கல்யாணத்தை முன்னிட்டு சீரவரிசைப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பங்குதாரர்களோடு ஏற்பட்ட பகை மாறும். மங்கள நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெற பெற்றோரின் ஒத்துழைப்பு கிட்டும். வெளிநாடு செல்ல ஆர்வம் காட்டுபவர்களுக்கு, அந்த முயற்சி கைகூடும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

இப்பொழுது வரும் புதனின் மாற்றம் ஒரு புதிய திருப்பத்தை உருவாக்கும். பணிகளில் இருந்த தாமதம் அகலும். பங்குதாரர்கள் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். புதன், தனுசு ராசிக்கு செல்லும் நிகழ்வு, ஜனவரி 8ஆம் திகதி நடைபெற உள்ளது. அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள் உங்களுக்கு ஆதரவாக இருப்பர். நாட்பட்ட நோய்களிலிருந்து நிவாரணம் கிடைக்கும். பணப் பற்றாக்குறை அகலும். இல்லம் கட்டிக் குடியேறும் எண்ணம் நிறைவேறும்.

இம்மாதம் புதன்கிழமை தோறும் மாருதி வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் மாதம் இது. வளர்ச்சி எதிர்பார்த்தபடியே வந்து சேரும். எதிர்பார்த்த நல்ல மாற்றங்கள் இல்லத்தில் வந்துசேரப் போகிறது. உங்கள் பெயரில் அசையா சொத்துகளை வாங்க அடிபோடுவீர்கள். வாழ்க்கைத் துணை வழியே ஏற்பட்ட வாக்குவாதங்கள் மாறும். வாரிசுகளால் பெருமை உண்டு. அரசியலில் பிரவேசிக்க ஆசைப்படுவீர்கள். மாமன், மைத்துனர் வழியில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும். புகுந்த வீட்டில் உங்கள் புகழ் பரவி தனி முத்திரை பதிப்பீர்கள். நடராஜர் தரிசனத்தன்று நடராஜப் பெருமானை வழிபாடு செய்யுங்கள். மார்கழி அஷ்டமியில் சிவனை வழிபடுவது செல்வாக்கை உயர்த்தும்.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*பிறர் நலனில் அக்கறை செலுத்தும் கடக ராசி நேயர்களே!*

உங்களின் மார்கழி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் சந்திரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரைத் தனாதிபதி சூரியன் பார்க்கிறார். எனவே தனவரவு தாராளமாக வந்தாலும் உடனுக்குடன் செலவாகி விடும். கைமாற்று வாங்கும் சூழ்நிலை கூட உருவாகலாம். 8இல் செவ்வாய் இருப்பதும் அவ்வளவு நல்லதல்ல. எதிர்பாராத திடீர் விரயங்களைச் சந்திக்க நேரிடும். சுக்ர பார்வை உங்கள் ராசியில் பதிவதால், பெண் வழிப் பிரச்சினைகள் உருவாகலாம். பெற்றோர்களால் உதவி கிடைப்பது அரிது.

அலுவலகப் பணிகளில் அவசரம் காட்ட வேண்டாம். அலட்சியமும் காட்ட வேண்டாம். உங்களுக்கு கொடுத்த பொறுப்புகளை நீங்களே நேரடியாகச் செய்வது நலலது. வாகனப் பழுதுச் செலவுகள் அதிகரிக்கின்றதே என்று கவலைப்படுவீர்கள்.

ராகு 2ஆம் இடத்தில் இருப்பதால் பால்ய நண்பர்களின் சந்திப்பால் பண வரவு ஏற்படும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து இணைவதுடன், உங்களின் செயலுக்கு உறுதுணையாகவும் இருப்பார்கள். ஆரோக்கியத் தொல்லை அகல, மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. பயணங்களாலும், அதிக அலைச்சல்களாலும் ஏதேனும் இடர்பாடுகள் ஏற்படலாம். எனவே கூடுதல் கவனத்தோடு செயற்பட வேண்டிய மாதம் இது. அஷ்டமத்துச் செவ்வாய்க்குப் பரிகாரமாக அங்காரக தோஷ நிவர்த்தி ஸ்தலங்களுக்கு யோகபலம் பெற்ற நாளில் சென்று வழிபட்டு வருவது நல்லது. அதுமட்டுமல்லாமல் செவ்வாய்க்கிழமை தோறும் முருகப்பெருமானை வழிபட்டு வருவது நல்லது. இதுபோன்ற காலங்களில் இறைவனின் தரிசனம் பார்ப்பது நல்லது. இன்னல்களில் இருந்து விடுபட வைக்கும்.

**விருச்சிக புதனின் சஞ்சாரம்!**

## சிந்தித்து செய்தால் ஜெயமுண்டு

விருச்சிக ராசிக்கு டிசெம்பர் 19ஆம் திகதி புதன் செல்கிறார். 3,12இற்கு அதிபதியான புதன் 5இல் சஞ்சரிக்கும் பொழுது, முக்கிய புள்ளிகளால் ஏற்பட்ட இடையூறுகள் அகலும். முகஸ்துதிக்காக பழகியவர்களை இனம் கண்டு கொள்வீர்கள். தக்க தருணத்தில் சிலரது ஒத்துழைப்பு கிடைக்கும். சில உபத்திரவங்களும் வந்து சேரலாம். விரயாதிபதி 5இல் சஞ்சரிக்கும் பொழுது, பிள்ளைகளால் விரயம் உண்டு. வாரிசுகளை உங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக் கொள்வது நல்லது. வெளிநாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். குழந்தைகளுக்கு அதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பீர்கள். தொழிலில் பங்குதாரர்களை மாற்றும் எண்ணம் மேலோங்கும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

டிசெம்பர் 30ஆம் திகதி கும்ப ராசிக்குச் சுக்ரன் செல்கிறார். இதன் விளைவாக நன்மைகள் அதிகம் நடைபெறும். நாட்டுப் பற்று மிக்கவர்கள் உங்கள் கூட்டு முயற்சிக்கு ஒத்துழைப்புச் செய்வர். திட்டமிட்ட




காரியங்கள் திட்டமிட்டபடியே நடைபெறும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாவதற்கான அறிகுறிகள் தென்படும். வெளிநாட்டில் இருந்து வியக்கும் செய்திகள் வந்து சேரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அத்தியாவசியப் பொருட்கள் முதல் ஆடம்பரப் பொருட்கள் வரை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள். வாழ்க்கைத் துணை வழியே ஏதேனும் உத்தியோக முயற்சிக்கு ஏற்பாடு செய்திருந்தால், அதில் அனுகூலங்கள் கிடைக்கும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

ஜனவரி 8ஆம்திகதி தனுசு ராசிக்குப் புதன் செல்கிறார். இதனால் உங்களின் பொருளாதார நிலை மேலும் உயரும். உத்தியோக உயர்வு, பதவி உயர்வு எதிர்பார்த்தபடி வந்துசேரும். அஞ்சல் வழி தகவல் அனுகூலமாக இருக்கும். ஆரோக்கியம் சீராகி உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்ட வாய்ப்புகள் உருவாகும். அரசாங்கம் மூலம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம். இம்மாதம் செவ்வாய் தோறும் விரதமிருந்து அம்பிகையை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள!**

ஆரோக்கியத்தில் அதிக அக்கறை செலுத்த வேண்டிய மாதம் இது. கூட்டுக் குடும்பத்தில் உள்ளவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் மனக்கசப்பை மாற்றிக் கொள்ளலாம். கணவன்-மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. புகுந்த வீட்டிற்கு பெருமை சேர்க்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பிள்ளைகளுக்கு வேலை கிடைத்து உதிரி வருமானங்களை உங்கள் கரங்களில் கொண்டு வந்து சேர்ப்பர். வீடு வாங்கும் முயற்சி வெற்றி தரும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது. ஊர் மாற்றங்கள் உருவாகலாம். நடராஜப் பெருமான் வழிபாடு நன்மையை வழங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் போராளிகள் மூவரின் சுயதொழிலுக்கு உபகரணங்கள்

## புனர்வாழ்வு காரியாலயம் மூலமாக வழங்கி வைப்பு



(குருமன்காடு)

வவுனியா புனர்வாழ்வு நிலையத்தில் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைந்து கொண்ட முன்னாள் போராளிகளுக்கு சுய தொழில்களுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் மாலை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு, மீள்குடியேற்றம், புனர் நிர்மாணம் மற்றும் புனர்வாழ்வு காரியாலயம் மூலமாக வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளைச் சேர்ந்த முன்னாள் போராளிகளுக்கான தையல் இயந்திரங்கள், கோழிக் குஞ்சுகள் சுய தொழிலுக்காக வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந் நிகழ்வின் போது மூன்று முன்னாள் போராளிகளான ஒரு வருட புனர்வாழ்வுப் பயிற்சி பெற்ற மட்டக்களப்பைச் சேர்ந்த செல்லப்பா சிவநாதன், அம்பாறையைச் சேர்ந்த தியாகராசா முரளிதரன் மற்றும் வாழைச்சேனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை அமரசிங்கம் ஆகியோர் சமூகத்துடன் இணைத்து வைக்கப்பட்டனர்.

இந்து மத அலுவல்கள் அமைச்சின் அனுரசணையின் கீழ் புனர்வாழ்வு பெற்று சமூகத்துடன் இணைந்து கொண்டவர்களுக்கிடையிலான வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டக் கழகங்களுக்கிடையிலான நட்புறவை மேம்படுத்தும் வகையில் கால்பந்தாட்ட இறுதிப் போட்டியும் இடம்பெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் ஆலோசனைகளுக்கு அமைவாக புனர்வாழ்வுப் பணியகப் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஜானக ரத்நாயக்க, பிரிகேடியர் யூ.எஸ்.பி.தர்சன லியனகே, சிறப்பு விருந்தினராக வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.பி.ரோஹண புஸ்பகுமார ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் பயிற்சி பெற்ற பயிலுநர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-250)

# இளைஞர் பாராளுமன்ற தேர்தல் 670தேர்தல் மத்திய நிலையங்களில் இன்று நடைபெறும்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றததின் நான்காவது இளைஞர் பாராளுமன்ற தேர்தல் எதிர்வரும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிமுதல் மாலை 4 மணி வரை நாடு பூராகவும் 670 தேர்தல் மத்திய நிலையங்களில் வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்ட இளைஞர் சேவைகள் அதிகாரி மா.சசிகுமார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் அவர் கூறுகையில்,

இத்தேர்தலுக்காக 945 இளைஞர் யுவதிகள் வேட்பு மனு தாக்கல் செய்திருப்பதுடன், வாக்களிப்பதற்காக 332,701 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

இளைஞர் பாராளுமன்றத்தின் 225 ஆசனங்களுக்கு 160 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து ஒரு உறுப்பினரைத் தெரிவு செய்ய 27 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் . 8 வாக்களிப்பு நிலங்களில் 4 ஆயிரத்து 276 வாக்காளர்கள் வாக்களிக்கவுள்ளனர்.

இதேவேளை 85 உறுப்பினர்கள் தெரிவானது பல்கலைக்கழக இளைஞர்கள் யுவதிகள், சட்டக் கல்லூரி மாணவ, மாணவிகள், பாடசாலை மாணவத் தலைவர்கள், வேறு இளைஞர் அமைப்பு உறுப்பினர்கள், பல்வேறு திறன்களை கொண்ட வேறு இளைஞர் யுவதிகள் போன்றவர்களில் இருந்து ஏனைய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டு நியமிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)




# முல்லை. அபிவிருத்தி குழுக்கூட்டம்

(பணிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட செயலக கேட்போர் கூட்டத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும் என மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவர் வைத்திய கலாநிதி சி.சிவமோகன் தெரிவித்துள்ளார். (2-281)

# உரமானியக் கொடுப்பனவுகளை வங்கியூடாக பெற்றுக்கொள்ள முடியும்

## வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வவுனியா மாவட்ட விவசாயிகள நெற்பயிர் செய்கைக்கான உரமானிய கொடுப்பனவுகளை விவசாயிகள் தாங்கள் சமர்ப்பித்த வங்கிக் கணக்கில் பெற்றுக்கொள்ள முடியும் என வவுனியா மாவட்ட கமநல அபிவிரு த்தித் திணைக்கள உதவி ஆணை யாளர் ஆர்.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் 45 ஆயிரத்து 683 ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணுவதற்காக 17 ஆயிரத்து 551 விவசாயிகள் கமநல அபிவிருத்தி திணைக்களத்தில் பதிவு செய்திருந்தனர். இவர்களுக்கான உரக்கொடுப்பனவுக்காக ஏக்கர் ஒன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் வீதம் 226.8 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

அக் கொடுப்பனவுக்கான வேலைகள் எமது திணைக்களத்தில் நிறைவு செய்யப்பட்டு மத்திய விவசாய அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கான உரமானியக் கொடுப்பனவுகள் அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனவே விவசாயிகள் நேற்று முதல் அவற்றை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (2-250)

# ஆட்டோ - பட்டாரக வாகனம் மோதி வவுனியா - மன்னார் வீதியில் விபத்து



(மல்லாவி)

வவுனியா - மன்னார் வீதியில் பயணித்த ஆட்டோவும் பட்டா ரக வாகனம் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் ஆட்டோச் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் 12.15 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா - மன்னார் வீதியில் நெளுக்குளம் சந்திக்கு அருகில் பயணித்த ஆட்டோ ஒன்றினை அதே வீதியில் பயணித்த பட்டா ரக வாகனம் முந்திச் செல்ல முற்பட்ட வேளை மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது விபத்துக்குள்ளான ஆட்டோ முன்னால் சென்ற ஹென்ரேனர் வாகனத்துடன் மோதுண்டு மேலும் விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் ஆட்டோச் சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பட்டா ரக வாகனத்தின் சாரதி தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர் பில் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2-15)

# மீன்பிடி அமைச்சின் திட்டத்திற்கு அமைவாக குளங்களில் மீன்குஞ்சுகள் வைப்பிலிடப்பட்டன





வடக்குமாகாணத்தில் உள்ள நன்னீர் மீன்பிடி சங்கங்களை வாழ்வாதாரத்தில் ஊக்குவிக்கும் மீன்பிடி அமைச்சரின் திட்டத்திற்கு அமைவாக, ஏற்கனவே இந்த ஆண்டு 4 இலட்சத்து 50 ஆயிரம் மீன்குஞ்சுகளும, 12 இலட்சம் நன்னீர் இறால் குஞ்சுகளும் கட்டுக்கரைக்குளத்திற்கு அந்த குளத்தை அண்டிய நன்னீர் மீன்பிடி சங்கத்தினரின் வாழ்வாதாரத்திற்காக வைப்பிலிடப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து அவர்களை மேலும் ஊக்குவிக்கும் நோக்கோடு, வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சின் 2016 ஆம் ஆண்டுக்கான மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான 50,000 மீன்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டு கட்டுக்கரைக் குளத்தில் வைபபிலிடும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் நடைபெற்றது.

இதேவேளை மன்னார் மாவட்டத்தில் அமைந்துள்ள மடு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மீள் குடியேற்றம் செய்யப்பட்ட பூமலர்ந்தானில் உள்ள கிராம மக்களை சந்தித்து கலந்துரையாடி, அவர்களது தேவைகள் தொடர்பாக விசேடமாக கலந்தாலோசிக்கப்பட்டது.

அங்குள்ள மக்களது வாழ்வாதாரத்தை ஊக்குவிக்கும் முகமாக பூமலர்ந்தான் குளத்தில் 50 ஆயிரம் மீன்குஞ்சுகளை வைப்பிலிடும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்றது.

இதேவேளை 50 ஆயிரம் மீன் குஞ்சுகள் கொள்வனவு செய்யப்பட்டு வங்காலை குளத்தில் வைப்பிலிடும் நிகழ்வு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் நடைபெற்றது. (2)



கிளிநொச்சி பொதுச் சந்தையில் அமைக்கப்பட்டுள்ள வெற்றிலைக்கடை, தேங்காய்க்கடை, பழக்கடை ஆகியவற்றுக்கான புதிய கட்டடத் தொகுதி வேலைகள் நிறைவு பெறும் நிலையில் இருப்பதைப் படத்தில் காணலாம். (படம்:- கிளிநொச்சி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயத்தை விடக் கருணை உயர்ந்தது; புனிதமானது.

~ கர்ம யோகி

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

## கோர விபத்து அறிந்து தலையில் கைவையாதார் இல்லை

சாவகச்சேரிப் பகுதியில் நடந்த கோர விபத்தால் நெஞ்சம் நெகிழாதார் எவரும் இல்லை எனலாம். அந்தளவிற்கு அந்த விபத்து மிகப் பெரும் துயரத்தை ஏற்படுத்தி விட்டது.

பொதுவில் வட மாகாணத்தில் விபத்துக்கள் நடந்த தாயினும் பதினொரு பேர் என்ற உயர்ந்த எண்ணிக்கை கொண்ட உயிரிழப்பு முன்பு நடந்ததில்லை.

ஒரு கணப்பொழுதில் ஏற்பட்ட விபத்தில் பதினொரு பேர் உயிரிழப்பது என்பது ஜீரணிக்க முடியாத துன்பம். இக் கொடும் விபத்தில் தென்பகுதிச் சகோதரர்கள் பலியானது அறிந்து தம் தலையில் கைவைத்து அந்தோ என்னே! கொடுமை என்று கலங்காத தமிழ் மக்கள் இல்லை எனலாம்.

எமது பகுதியில் இப்படியொரு விபத்து நடந்து விட்டதே என்ற துயரமும் எங்களை வாட்டவே செய்கிறது.

மனித உயிர் என்பது விலைமதிப்பற்றது. ஒவ்வொரு மனிதர்களும் பெறுமதியானவர்கள். அவர்களை நம்பி வாழ்பவர்கள் பலராக இருக்கலாம்.

அதிலும் குறிப்பாக பெற்றோரின் அரவணைப்பில் வாழும் பிள்ளைகள் பெற்றோரை இழந்து விட்டால் அவர்களின் எதிர்காலம் எப்படியாகும் என்ற ஏக்கம் சாதாரணமானதல்ல.

இதேவேளை பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றோர்களின் அவலமும் சாதாரணமானதன்று.

எனவேதான் ஒவ்வொரு மனித உயிரும் பெறுமதியானவை. ஒரு மனிதனின் உயிரிழப்பு என்பது முதுமையில் நடக்க வேண்டியது. மரணம் என்பதற்கு ஒரு வயதுண்டு. ஆனால் எங்கள் மண்ணில் வாழ வேண்டிய வயதில் மரணம் காவு கொண்டு விடுவது தான் மிகப் பெரும் துன்பம். ஒரு காலத்தில் இந்த நாட்டில் நடந்த யுத்தம் அருமந்த மனித உயிர்களை கபளீகரம் செய்தது. இதுபோல் இடையிடையே வந்து போகும் இயற்கை அனர்த்தமும் தன் பசிக்கு மனிதர்களையே இரையாக்கிச் செல்கிறது.

நிலைமை இதுவாக இருக்கையில்; இப்போது எம் நாட்டில் விபத்து மரணங்கள் மிகவும் மலிந்து போயுள்ளன.

பொறுப்பற்ற சாரத்தியம்; சரியான பயிற்சி இன்மை. மனித உயிர்களின் பெறுமதி தெரியாமை போன்றன விபத்து மரணங்களை மலியச் செய்துள்ளன.

தவிர போக்குவரத்து கண்காணிப்பில் ஈடுபடும் பொலிசாரில் ஒரு பகுதியினர் தமது கடமையை உயிர் காக்கும் பணியாகக் கருதாமல் உழைப்பாகக் கருதுகின்றனர்.

அதாவது போக்குவரத்துக் கண்காணிப்பில் ஈடுபடுவோர் இலஞ்சத்தில் கண்ணாக இருப்பதனாலும் விபத்துக்கள் மலிந்து போகின்றன.

விபத்துக்கள் தொடர்பில் சரியான விழிப்புணர்வு இருந்திருக்குமாயின் நேற்றைய தினம் விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களை காப்பாற்றி இருக்க முடியும்.

இத்தகைய விபத்து மரணங்கள் தடுக்கப்படக் கூடியவையாக இருந்தும் அதனை செய்ய முடியவில்லை என்றால் ஏதோவொரு தவறும் குறைபாடும் உண்டென்பதே உண்மை.

எனவே இதுபோன்ற விபத்துக்களை சாரதிகள் ஞாபகத்தில் கொள்ள வேண்டும்.

அதிவேகமாக வாகனங்களைச் செலுத்தினால் மரணம் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கிறோம் என்பதை ஒவ்வொரு சாரதியும் உள்ளார்த்தமாக உணர்ந்தால் விபத்தைக் குறைக்கவும் இல்லாமலும் செய்யமுடியும். ஆனால் விபத்துக்களை வெறும் செய்தியாகப் பார்க்கின்றவர்கள் இருக்கும்வரை விபத்தைத் தடுப்பது கடினமே

எதுவாயினும் நேற்றையத் தினம் சாவகச்சேரிப் பகுதியில் நடந்த விபத்தில் 11 பேர் உயிழந்த சோகம் சாதாரணமன்று.

தென்பகுதிச் சகோதரர்களின் இந்த உயிரிழப்பு தமிழ் மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது.

எத்துணை ஆசையோடு வந்தவர்களுக்கு இப்படியாயிற்றே என்ற வேதனையோடு அவர்களின் குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்வதைத் தவிர வேறு எதைத்தான் நாம் செய்ய முடியும்?

## இளைஞர் பாராளுமன்ற தேர்தல்

# மன்னாரில் ஒருவரை தெரிவு செய்ய 17 வேட்பாளர்கள் களமிறக்கம்

(மல்லாவி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 4 ஆவது இளைஞர் பாராளுமன்ற தேர்தல் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெறவுள்ள நிலையில் மனனார் மாவட்டத்தில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்வதற்காக 17 வேட்பாளர்கள் தேர்தலில் களமிறங்கியுள்ளதாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர் என்.எம். முனவ்பர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நான்காவது இளைஞர் பாராளுமன்ற தேர்தல் இன்று நாடளாவிய ரீதியில் இடம் பெறவுள்ளது.

குறித்த தேர்தலில் மன்னார் மாவட்டம் சார்பாக இரு பெண்கள் உள்ளடங்கலாக 17 பேர் போட்டியிடுகின்றனர்.

இதற்கமைய மன்னார் மாவட்டத்தில் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் நான்கு வேட்பாளர்களும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் நான்கு வேட்பாளர்களும் முசலி பிரதேச பிரிவில் நான்கு வேட்பாளர்களும மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு வேட்பாளர்களும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் மூன்று வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்வதற்கு 7 ஆயிரத்து 87 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதேவேளை, வாக்களிப்பதற்காக மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் மூன்று வாக்களிப்பு நிலையங்களும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு வாக்களிப்பு நிலையங்களும் முசலி பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு வாக்களிப்பு நிலையங்களும் மடு பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு வாக்களிப்பு நிலையங்களும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் இரண்டு வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இன்று, காலை 7 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை இளைஞர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட வாக்களிப்பு நிலையங்களுக்குச் சென்று உரிய முறையில் வாக்களிக்க முடியும் என தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாண பணிப்பாளர் என்.எம். முனவ்பர் தெரிவித்துள்ளார். (2-15)

# சமுதாய பொலிஸ் நாற்பது நாள் வேலைத்திட்ட இறுதிநாள் நிகழ்வு

## பூவரசங்குளம் கிராமத்தில் நடைபெற்றது

(மல்லாவி)

பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவின் திட்டத்தின் கீழ் பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வழிகாட்டலில் நாடு தழுவிய ரீதியில் உள்ள பொலிஸ் நிலையப் பிரிவுகளில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமுதாயப் பொலிஸ் நாற்பது நாள் வேலைத்திட்டத்திற்கு அமைய ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கதிரவேலர் பூவரசங்குளம் கிராமத்தில் நடைபெற்று வந்த வேலைத்திட்டத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன.

ஓமந்தை பொலிஸ் நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரி இந்திக்க சுரேஷ் அன்ரனிஷ் த சில்வா தலைமையில் இடம் பெற்றுள்ளது.

இந் நிகழ்வில் நடமாடும் மருத்துவ முகாம், சிரமதானப் பணி மற்றும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டி நிகழ்வுகள் உட்பட பல நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் பாடசாலை மாணவர்களுக்கு இடையிலான போட்டியில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கான பரிசுப் பொருட்கள் வழங்கப்பட்டதுடன், ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் உள்ள மிகவும் வறுமைக் கோட்டிற்குட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கு பொருட்கள் என்பனவும் பொலிஸாரினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

நடைபெற்ற நிகழ்வில் வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிர குமார, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் வெல்கம, வவுனியா மாவட்ட பிரதேச செயலாளர் கா. உதயராசா, ஓமந்தை பிரதேசத்துக்குட்பட்ட கிராம சேவகர்கள், மதகுருமார்கள் உட்பட ஓமந்தை பிரதேச வைத்திய அதிகாரி செ.மதுரகன், பாடசாலை மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-15)

# இயேசுவின் பிறப்பில் நாம்வாழ எம்மைத் தயார்படுத்துவோம்

திருவருகைக் காலத்தின் நான்காம் வாரத்தில் இருக்கும் நமக்கு இந்த நாள் இயேசு பிறப்பு விழாவுக்கு முன்னரான கடைசி ஞாயிறு. இன்று இயேசு பிறப்பின் அறிவிப்பு விழாவைக் கொண்டாடுகிறோம். கடவுளின் வானத்தூதர் கபிரியேல் அன்னை மரியாள் முன்பு தோன்றி,' கடவுளின் அருளைப் பெற்ற பெண்மணியே... பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவரே... நீர் கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர். அவருக்கு இயேசு என்னும் பெயரிடுவீர். அவர் உன்னதக் கடவுளின் மகன் எனப்படுவார்"என்று இயேசுவின் பிறப்பை முன் அறிவித்த பதோ கடவுளின் வருகைக்காக காத்திருப்பது. அவர் நம்மிடையே வரவேண்டும். நம்மல் வரவேண்டும் என்பது தான் அனைவரின் விருப்பம். நம விருப்பம் நிறைவேற நாம ஆயத்தமாக இருக்க வேண்டும். ஏனெனில் இயேசுவே பைபிளில் விழிப்பாயிருங்கள். உங்கள் ஆண்டவர் எந்த நாளில் வருவார் என உங்களுக்குத் தெரியாது..., எனவே நீங்களும் ஆயத்தமாய் இருங்கள். ஏனெனில் நீங்கள் நினையாத நேரத்தில் மானிட மகன் வருவார் என்று கூறியுள்ளார். அவரது வார்த்தை உயிருள்ளது, உண்மையானது என்றும் அழியாதது. எனவே நாம

### பரமபிதா காட்டிய பாதை

நன்னாளையே, அறிவிப்புப் பெருவிழாவாக நாம் கொண்டாடுகிறோம். மனிதனாகப் பிறக்கும் கடவுள் பூவுலகுக்கு எம்மை தேடி வருகிறார்என்றும்அன்னை மரியாள் வழியாகத்தான் அவர் பிறக்கவுள்ளார் என்றும் நாம் விசுவசித்து அவரை காண காத்து நிற்கின்றோம். வருகையும், காத்திருத்தலும் நமது அன்றாட வாழ்வில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. வருகை மகிழ்ச்சியைத் தர, காத்திருத்தல் நம்பிக்கையுடன் கூடிய சுகத்தைத் தருகிறது. நாம் எம் வாழ்வில் பலரின் வருகைக்காக காத்திருக்கிறோம். பல பணிகளைப்புரிய காத்திருக்கிறோம். இவை அனைத்துமே நொடிப் பொழுதிலோ, மணித்துளியிலோ சந்தோசத்தை தந்து மறைந்து போய்விடுகின்றன. ஆனால் திருவருகைக் காலம் என் அவரின் வருகைக்காக எம்மையே தயாரிக்க வேண்டும். அதற்காகத்தான் திருச்சபை திருவருகைக் காலம் என நான்கு ஞாயிற்றுக்கிழமைகளை தந்து அதன் இறுதியிலே கிறிஸ்துமஸ் விழா கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இந்த அழைப்பினை ஏற்றுக்கொண்டு அதனை நிறைவேற்றுவது எம் ஒவ்வொருவரின் தலையாய கடமையாகும. அதற்கு நாம் உள்ளதில் ஏழையாக மாறவேண்டும். உண்மையில் உள்ளத்தில் ஏழையாக மாறாதவர்கள் கிறிஸமஸ் விழாவைக் கொண்டாடமுடியாது. என்னிடம் எல்லாமே உள்ளன. நான் மட்டுமே எனக்குப் போதும் என்ற மமதையில் வாழ்பவர்களுக்கு இறைவன் தேவைப் படுவதில்லை. அவர்களுக்குக் கிறிஸ்து பிறப்பும் தேவைப்படுவதில்லை. ஏழைகள், பசியுற்றோர், தேவையில் இருப்போர்.... இவர்களாலேயே கிறிஸ்து பிறப்பு விழாவில் பொருள் காண முடியும். அவர்களைத் தேடியே எம் மானுவேல், அதாவது, கடவுள் நம்மோடு என்ற பெயர் தாங்கிய இறைவன் வருவார். நல்லவைகள் வாழ்வில் நடக்கும். கருமேகங்களாய் சூழ்ந்து வரும் பிரச்சனைகள் மத்தியில் மின்னல் கீற்றுபோலத் தோன்றும் நல்லவற்றை உறுதியாகப் பற்றிக்கொள்வோம். அநாதை இல்லங்களும், முதியோர் இல்லங்களும் தெரு, தெருக்களாக அதிகரிக்கும் போது, ஆதரவற்றவர்களின் எண்ணிக்கை பெருகும் போது, கருவறையே கல்லறையாகும் போது, சிசுக்கொலையும், பாலயல் பலாத்காரமும், அதிகரிக்கும்போது, அநீதியின் கைகள ஓங்கும்போது, கலாசாரமும், பண்பாடும் அழியும் போது, சிவப்பு ஏரியாக்கள் எங்கும் மிளிரும்போது, அரசியலும், சினிமாவும்தான் வாழ்க்கை என்றாகும் போது, குடி, போதை, கஞ்சா, சீரியலுக்கு அடிமையாகும்போது, முதலாளித்துவம் தழைத்தோங்கும் போது இன்னும் பல போதுக்களோடு நாம் வாழும் போது இயேசுவின் பிறப்பு நம்மிலே எப்படி சாத்தியமாகும். இவர்களுக்காக குரல் கொடுக்காவிட்டாலும், உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை. இவற்றை செய்யாமலிருக்கும்போது இயேசு நம்மில் வருகிறார். இவற்றை எல்லாம் தகர்த்தெறிந்து உடைக்கும்போது நாம் இயேசுவாகிறோம். இவ்வுலகை ஆட்சி



செய்பவர் அவரே நமக்கு அமைதியை தருபவரும்அவரே. நாமும் பிறருக்கு அமைதியை அருளுவோம். இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவார். நமது வாழ்விலே வேதனை, சோதனை, துன்பங்கள், தோல்விகள், நோய்கள், ஏமாற்றங்கள் எது வந்தாலும் கலங்க வேண்டாம், அஞ்சவும் வேண்டாம். ஏனெனில் நமது கடவுள் எந்நாளும் நம்மோடு இருக்கிறார். திருவருகைக் காலத்தில் இருக்கும் நாம் இயேசுவின் பிறப்பு விழாவை கொண்டாட நம்மை தயார் செய்வோம். இருளிலும் இறப்பின் பிடியில் இருப்போருக்கு ஒளிதரவும் நம்முடைய கால்களை அமைதி வழியில் நடக்கச் செய்யவும், நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும், விண்ணிலிருந்து விடியல் நம்மைத தேடி வருகிறது. எனவே இயேசுவின் பிறப்பில் நாம் வாழ எம்மை தயார்படுத்துவோம.

**ம. பிரான்சிஸ்க்**
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கான உதைபந்தாட்டப் போட்டி






சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் புனர் நிர்மாணம் மற்றும் இந்துமத கலாசார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையின் கீழ் வவுனியா மற்றும் மன்னார் ஆகிய மாவட்டங்களுக்கிடையே நட்புறவை வளர்க்கும் முகமாக உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி வவுனியா தேசிய கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கடந்த வியாழக்கிழமை காலை வவுனியா புனர்வாழ்வு நிலையத்தின் பணிப்பாளர் கேணல் எம்.எ. ஆர். கமிடோன் தலைமையில் மேற்படி போட்டி நடைபெற்றுள்ளது.

புனர்வாழ்வு ஆணையாளர் செயலகத்தின் மூலம் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூகமயமாக்கப்பட்ட முன்னாள் போராளிகள் மற்றும் விளையாட்டுக் கழக இளைஞர்கள் பங்குபற்றிய இந்த உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் வவுனியா மற்றும் மன்னாரைச் சேர்ந்த எட்டு அணிகள் பங்குபற்றியிருந்தன.

நிகழ்வில் இணைப்பதிகாரிகள், மாவட்ட பொறுப்பதிகாரிகள், தேசிய கல்வியியல் கல்லூரி விளையாட்டு பொறுப்பதிகாரி உட்பட விளையாட்டு ஆர்வலர்களும் கலந்து கொண்டிருந்தனர். (க-15)



இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்படும் 2016 ஆம் ஆண்டிற்கான தேசிய கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் கொழும்பு சுகததாச உள்ளக அரங்கில் இடம்பெற்றது. இப்போட்டியில் கிளிநொச்சி மகா தேவா இல்லத்தினை சேர்ந்த இரு மாணவிகள் தங்கப் பதக்கத்தினை வென்றுள்ளனர். வெற்றி பெற்ற மாணவிகளுடன் பயிற்சி ஆசிரியர் சென்சே விஜயராஜ படத்தில் காணலாம்.

# காலிறுதிக்குள் நுழைந்தது குறிஞ்சிக்குமரன் வி.கழகம்





மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடக்கின் சுப்பர் கிங்-2016 உதைபந்தாட்டப்போட்டியில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போட்டியில் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஐயனார் விளையாட்டுக்கழகம் மோதியது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டி 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவுற்றது.

இதன்மூலம் கோல் புள்ளி அடிப்படையில் குறிஞ்சிக்குமரன் அணி காலிறுதிக்குள் நுழைந்தது. (க)

# அரிப்பு அ.த.க. பாடசாலைக்கு டெனீஸ்வரனால் உதவித்திட்டம்



மன்னார் அரிப்பு அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு கடந்த வருடாந்த இல்ல மெய் வல்லுநர் விளையாட்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரனிடம், பாடசாலை சமூகம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவும் மாணவர்களை விளையாட்டிலும் ஊக்குவிக்க வேண்டும் என்ற நோக்கோடும் அமைச்சர் தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதியில் இருந்து ரூபாய் ஒரு இலட்சத்து 25 ஆயிரம் நிதியை ஒதுக்கி, குறித்த பாடசாலையில் உதைபந்தாட்ட கோல் கம்பங்களும் வலைப்பந்தாட்ட கம்பங்களும் அமைக்கப்பட்டுள்ளன. குறித்த திட்டங்கள் நிறைவுற்றுள்ள நிலையில் அதற்கான காசோலையை பாடசாலையின் அதிபரிடம் 15.12.2016 வியாழக்கிழமை மாலை 2:30 மணியளவில் மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் வைத்து அமைச்சர் வழங்கி வைத்தார். (க-281)

## சமநிலை தவிர்ப்பு உதையில்

# வல்வை ஆதிசக்தி வி.கழகம் சுப்பர் 8 இற்கு தெரிவாகியது



அல்வாய் மனோகரா விளையாட்டுக்கழகம் நடத்தும் யாழ்.மாவட்ட ரீதியிலான அணிக்கு 11 பேர் கொண்ட மாபெரும் உதைபந்தாட்டப்போட்டியில் 15.12.2016 வியாழக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் யாழ்.சென் அன்ரனீஸ் வி.கழகத்தை எதிர்த்து வல்வை ஆதிசக்தி வி.கழகம் மோதியது.

பலத்த எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற ஆட்டத்தில் முதல்பாதி ஆட்டத்தில் ஆதிக்கத்தை செலுத்திய சென். அன்ரனீஸ் அணியினர் 13 ஆவது நிமிடத்தில் தமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தினை சரியான முறையில் பயன்படுத்த அதனை முன்கழ வீரர் கிறோசாந் கோலாக்கினார். தொடர்ந்து மிகவும் கடுமையாக போராடிய ஆதிசக்தி அணியினர் இடைவேளை வரை எந்தவித கோல்களையும் போடவில்லை.

ஆட்டம் இடைவேளையின் போது 01.00 என்ற நிலையில் காணப்பட்டது. தொடர்ந்து இரண்டாவது பாதியாட்டத்தில் தமது ஆதிக்கத்தை செலுத்திய ஆதிசக்தி அணியினர் 31 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினை போட்டனர்.



இதனை அந்த அணி சார்பில் நிமலதாஸ் அடித்தார். 1.1 என ஆட்டம் தொடர்ந்து செல்ல ஆட்டம் விறுவிறுப்படைய தொடங்கியது. தொடர்ந்தும் ஆதிசக்தி அணியினர் ஆதிக்கம் செலுத்திய போதும் எந்தவித கோலினையும் போடவில்லை.

இறுதியில் ஆட்டம் 01:01 என சமநிலையில் சமநிலை தவிர்ப்பு உதையில் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் ஆதி சக்தி அணியினர் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சுப்பர் 8 ஆட்டத்திற்குள் நுழைந்தனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மு.காவின் உட்கட்சிப்...

பட்டிருந்தார்.

அத்துடன் அவருக்கு வாக்களிக்கப்பட்டிருந்ததன் பிரகாரம் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வழங்கப்படாமை காரணமாக கட்சிக்குள் ஒரு அதிருப்தி மேலெழுந்திருந்தது.

இதற்கிடையே கட்சியின் பேராளர் மாநாடு கூட்டப்பட்டு புதிய பொதுச் செயலாளர் ஒருவரும் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில், ஹஸன் அலியும் கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கியிருந்தார்.

இதன் காரணமாக கட்சி இரண்டாக பிளவுபடும் நிலை ஏற்பட்டிருந்ததுடன், செயலாளர் பதவியில பிரச்சினை காரணமாக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்வரும் தேர்தல்களில் போட்டியிட முடியாத நிலையும் ஏற்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை தொடக்கம் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மற்றும் முன்னாள் பொதுச் செயலாளர் ஹசன அலி ஆகியோருக்கிடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் மூலம் கட்சிக்குள் நிலவிய உட்பூசல் முடிபுக்கு வந்துள்ளது.

அத்துடன் தற்போது சட்டத்த ரணி சல்மான் வகிக்கும் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பி னர் பதவியை ஹசன் அலிக்குப் பெற்றுக் கொடுப்பதற்கும் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது. (இ-10)

## சனி, ஞாயிறு...

வர்த்தக நிலையங்கள் மற்றும் தொழில் ஸ்தாபனங்களைத் திறந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடமுடியும். பண்டிகைக் காலத்தை கருத்தில் கொண்டே மேற்படி அறிவிப்பு விடப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நெல்லியடி வர்த்தக சங்கமும் நத்தார், புதுவருடம், தைப்பொங்கல் ஆகியவற்றை முன்னிட்டு சனி மற்றும் ஞாயிறுகளில் வர்த்தக நிலையங்களை திறந்து வர்த்தகர்கள் வியாபாரம் செய்யலாம் என அறிவித்தல் விடுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.(செ-6)

## சாவகச்சேரியில்...

குறித்த கோர விபத்து சம்பவமானது நேற்றைய தினம் பிற்பகல் 1 மணியளவில் யாழ்ப்பாணம் சாவகச்சேரி சங்கத்தானை புகையிரத நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. இவ் விபத்தில் சிலாபம் மாதம்பை பகுதியை சேர்ந்த குணசிறி (51 வயது) குணரட்ண (53 வயது) லகிறு மதுசங்க (26வயது). இந்திர ரட்ண (53 வயது) ஆகியோருடன் மேலும் இரு ஆண்களும் நான்கு பெண்களும் உட்பட மொத்தம் பத்து பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு குறித்த விபத்தில் சிவலிங்கம் ஜெயஜேஸ்வரன் (51வயது) ஸ்ரெஜினா (46 வயது) நேமிநாதன் சங்கீதா (24வயது) தம்பிபிள்ளை யோகேந்திரம் (62வயது) ஆகியோருடன் இரு பெரும்பான்மை இனத்தவர்கள் உட்பட 12 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றைய தினம் பிற்பகல் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்து வண்டியானது யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்தில் இருந்து சுமார் 35 பயணிகளுடன் வவுனியா நோக்கி பயணமாகியிருந்தது.

இவ்வாறு சென்ற பேருந்தானது சாவகச்சேரி சங்காதானை பகுதியை அண்மித்த போது சிலாபம் மாதம்பை எனும் இடத்தில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வான் ஒன்றுடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தது. இவ் கோர விபத்தின் போது பேருந்துடன் அதிவேமாக மோதிய ஹயஸ் வானானது முற்றாக உருக்குலைந்ததுடன் அதில் பயணித்த பெரும்பான்மை இனத்தை சேர்ந்த 14 பேரில் ஏழு ஆண்களும் மூன்று பெண்களுமாக மொத்தம் பத்து பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்திருந்திருந்தனர். அத்துடன் வானில் பயணித்த நால்வரும் அரச பேருந்தில் பயணித்த எட்டு பேருமாக 12பேர் படுகாயமடைந்திருந்தனர்.

இதனையடுத்து படுகாயமடைந்தவர்கள் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைகளுக்காக ஆறு பேர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தனர். ஏனையோர் சிறு சிறு காயங்களுக்கு உள்ளாகியிருந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைத்தே சிகிச்சையளிக்கப்பட்டிருந்ததாக சாவகச்சேரி வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்திருந்தன. இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக கொண்டுவரப்பட்டிருந்தவர்களில்,

இருவர் விபத்து தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் அதில் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். ஏனைய நால்வரும சாதாரண விபத்து பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளதாக யாழ். போதனை வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவித்தன.

மேற்படி விபத்தினால் சாவகச்சேரி யாழ்ப்பாணம் வரையிலான வீதிப் பகுதி, அம்புலன்ஸ் அலறலால் பரபரப்படைந்திருந்தது. சம்பவ இடத்திற்கு சாவகச்சேரி பொலிஸார் விரைந்ததுடன், யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியசகர் ஸ்ரெலஸின்லாஸ் வருகை தந்து விபத்து தொடர்பில் ஆராய்ந்திருந்தார். விபத்தில் காயமடைந்த தென்னிலங்கையை சேர்ந்தவர்களை அங்கு நின்ற அனைவரும் ஒன்று சேர்ந்து காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்துள்ளனர். உடனடியாக காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

விபத்து தொடர்பில் விபத்துக்குள்ளான அரச போக்குவரத்து சாரதியிடம் வலம்புரி செய்தியாளர் கேட்ட போது, நான் வவுனியா நோக்கி வீதியில் எனது போக்குவரத்து பக்கமாக சென்று கொண்டிருந்தேன். எனக்கு எதிரே வந்த வான் ஒன்று வேகமாக வந்து கொண்டிருந்தது. அந்த வான் திடீரென்று எனது பக்கம் வந்தது. அதனை கண்டதும் எனது பஸ்ஸினை உடனடியாக நிறுத்தி விட்டேன். அப்போது சடுதியாக நிறுத்தி வைத்த எனது பஸ்ஸின் மீது குறித்த வான் வேகமாக மோதியது. அதன் பின்னர் என்ன நடந்தது என்று எனக்கு தெரியவில்லை என கூறினார். இதேவேளை ஹயஸ் வானில் வந்தவர்கள் படுகாயங்களுடன் பேசமுடியாத நிலையில் இருந்தமையால் அவர்களிடம் என்ன நடந்தது என்பது குறித்து தகவல்கள் கேட்டறியவில்லை.

இதேவேளை குறித்த இக் கோர விபத்துக்கான காரணமாக ஹயஸ் வானின் ரயர் வெடித்து விட்டிருந்ததாக முன்னர் கூறப்பட்டிருந்த அதேவேளை ஹயஸ் சாரதியின் தூக்கம் வபத்தை ஏற்படுத்தியிருக்கலாம் என பொலிஸ் தரப்பில் சந்தேகம் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் குறித்த விபத்துக்கான காரணம் உறுதியாக நேற்று பின்னிரவு வரை கண்டறியப்படவில்லை என சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்ததுடன் குறித்த விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்திருந்தனர். காயமடைந்த மற்றும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் யாழ்ப்பாணத்தில் இல்லாத காரணத்தினால் அவர்களது மேலதிக தகவல்களை பெறமுடியவில்லை என வைத்தியசாலை நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (செ-4,30,89,312, 15, 60,85)


## தொழில்நுட்ப பீட அங்குரார்ப்பண நிகழ்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மிக அண்மைக்காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்நுட்ப பீடமானது வர்த்தமானி இல.9/1960, 2016 இல் பிரசுரிக்கப்பட்ட உயர் கல்வி அமைச்சின் பணிந்துரைக்கு அமைய பின்வரும் மூன்று பிரிவுகளை உள்ளடக்கியதாக ஆரம்பிக்கப்படவுள்ளது.

01.பொறியியல் தொழில்நுட்ப பிரிவு
02.உயிர்முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு
03.இணைந்த தொழில்நுட்ப பிரிவு

ஆரம்ப கட்டமாக ரூ.525 மில்லியன் செலவில் புதிய தொழில்நுட்ப பீட கட்டட தொகுதிக்கும் மற்றும் 800 மாணவர்களை உள்வாங்கக் கூடிய மாணவர் விடுதிக் கட்டடத்துக்குமான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இத் தொழில்நுட்ப பீடத்தின் அங்குரார்ப்பண நிகழ்வும், முதலாம் வருடத்துக்கு இருநூற்றுப்பத்து மாணவர்களை உள்வாங்கும் நிகழ்வும் 20.12.2016 அன்று காலை 9.00 மணியளவில் தொழில்நுட்ப பீட வளாகத்தில் நடைபெறவுள்ளது.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்** (சி-6782)



## மரண அறிவித்தல்

### திருமதி செபமாலை இருதயம் நீற்றம்மா (பூமணி)



யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை இருதயம் நீற்றம்மா (பூமணி)15.12.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் -அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கபிரியேல் -சூசானா தம்பதியரின் அன்பு மருமகளும் செபமாலை இருதயம் அவர்களின் அன்பு மனைவியும் ரஞ்சினி, ரட்ணகுமார், ராஜகுமார், சுதந்திரகுமார், அனுரகுமார் ஆகியோரின் அருமைத் தாயாரும் மனோகரன், வனஜா, வரோணிக்கா, மேரிறொபினா, சந்தியாகுமாரி ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான ராசரெட்ணம், மேரிதிரேசா, முத்துராசா, பீற்றர், மற்றும் சிசிலியா, மரியதாசன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் குளோஜின், ஜாக்குலின், நிக்கோலா, வலரி, விக்ரோரி, சஞ்சேர், பெஞ்சமின், சைமன், யாவேஸ், சாமுவெல், இவ்லின், அலன்குமார், அனோஜினி ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 19.12.2016 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**98, பழைய பூங்கா வீதி** (6979) குடும்பத்தினர்.



## சரஸ்வதி தந்த சரஸ்வதியை அஞ்சலி செய்கிறாள் நல்லை மங்கையர்க்கரசி



எங்கள் வித்தியாலய நலனுயர்வை
எந்நாளும் மறவாத
யாழிந்து ஆரம்ப பாடசாலையின்
முன்னாள் ஆசிரியத் தெய்வம்

**திருவாட்டி சரஸ்வதி ஆறுமுகம்**

அவர்களின்
பிரிவுத்துயரில் நாமும் பங்கேற்கிறோம்
அன்னை அன்னையடி சேர ஆராதிக்கிறோம்

**யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்** (சி-6787)





மலர்வு:-23.07.1937
உதிர்வு:-15.12.2016

## கண்ணீர் அஞ்சலி

திருமதி
**பாலசிங்கம் இராசம்மா**

எமது பாடசாலையின் பிரதி
அதிபர்களுள் ஒருவரான
திருமதி விமலேஸ்வரன் பர்வதசக்தி
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி பாலசிங்கம் இராசம்மா
அவர்கள் 15.12.2016 அமரத்துவம்
அடைந்துள்ளார். அன்னாரின்
பிரிவால் துயருற்றிருக்கும் அவரின்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களையும் ஆறுதல்களையும்
தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிச் சங்கம்**
**கிளி/கிளிநொச்சி மகா வித்தியாலயம்** (சி-6788)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடனடி வேலைவாய்ப்பு

கொழும்பு சுற்று பிரதேசத்தில் 17-50 வயது ஆண்/பெண் தேவை.

No.157,
கண்டி வீதி, தேக்கவத்தை.

தொடர்புகளுக்கு:-
0775583806, 0778527394

(சி-6758)

## காணி தேவை

யாழ்ப்பாண நகரப்பகுதியில் இருந்து 6KMக்கு இடைப்பட்ட பகுதியில் (பிரதான வீதிக்கு அருகாமையில்) பலாலி வீதி, காங்கேசன்துறை வீதியிலும் அத்துடன் கைதடி கோப்பாய் வீதி, நாவற்குழி சாவகச்சேரி வீதிக்கு இடைப்பட்ட பகுதியிலும் 10 பரப்பு காணி தேவை.

தொடர்புகளுக்கு:-
0772296188, 0753101116

(6915)

## V2 TRAVELS

குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.

- வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
- வெளிநாட்டு விசா (UK,கனடா,சுவிஸ்,ஜேர்மனி,பிரான்ஸ்) விண்ணப்ப படிவம்(Online form) நிரப்புதல்.
- இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.

தொடர்புகளுக்கு: 0768226236

● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

(சி-6756)

## வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை



பண்டிகைக் காலத்தில் உங்கள் உறவுகளுக்கு பெறுமதியான பொருட்களையும் கடிதங்களையும் விரைவாகவும் குறைந்த விலையிலும் அனுப்பிட

021 221 5656
070 330 5500

(சி-6684)

அண்ணா & கோ
976, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

## வேலைவாய்ப்பு

கொழும்பை அண்மித்த பகுதிகளில் ஜாம், பால்மா, கையுறை, சொக்லட், பிளாஸ்ரிக், தேயிலை, பொலித்தீன், கால்கீஸ், கொட்டல்ஸ் மற்றும் துறைமுக விமானநிலையம் மேசன், உதவியாளர், றூம்போய், கிச்சன் ஹெல்பர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

கிழமை சம்பளம், மாத சம்பளம் பெற்றுக் கொள்ள முடியும். ஆண், பெண் 17-45 வயது. தனியாக, குழுக்களாக வரும் நாளிலேயே சேர்த்துக் கொள்ளப்படும்.

No.435,
கவுண்டன் பிளாஸா
மருதானை, கொழும்பு. (சி-6758) 0778430179

## யாழ் புத்தகசாலை புதிய முகவரியில்

ஆஸ்பத்திரி பின் வீதி ஞானம்ஸ் ஹோட்டலுக்கு அருகில் இயங்கிய யாழ் புத்தகசாலை 09.12.2016 முதல் கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது. இத் திறப்பு விழாவை முன்னிட்டு விசேட விலைக்கழிவில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

புத்தகங்களுக்கு: 10% - 20%; காகிதாதிகள், எழுதுபொருட்கள், அப்பியாசக் கொப்பிகள்: 10% - 40%

*தொடர்புகளுக்கு:*

SALE

யாழ்.புத்தகசாலை
இல.22A, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சண்முகம் உணவகத்திலிருந்து 7வது கடை)
021 221 7874, 021 492 7568

*கிளை:* யாழ்.புத்தகசாலை
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
(கனகபுரம் விளையாட்டரங்கு சந்தி)
(சி-6677) 021 492 7625

## CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-6772)

அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

## Biology-2019

English and Tamil medium
K.KALAIVANAN
(Spl.in.Biological Sciences)
commence on
19.12.2016 Monday
Evening -6.00 PM
Royal Academy-Jaffna
0713438442 (6959)

## குயின்சி விநியோகஸ்தர்கள் (புத்தகசாலை)









- மருத்துவ பீட மாணவர்களுக்கான மருத்துவ நூல்கள்
- ஆங்கில அகராதிகள், தேசிய பாடசாலைப் புத்தகங்கள்
- சிறுவர்களுக்கான நகைச்சுவைக் கதைகள்
- மாணவர்களுக்கான அறிவியல் நூல்கள், நீதிநூல்கள்
- மங்கையர்களுக்கான சமையலில் ருசி பார்க்க சமையல் குறிப்புப் புத்தகங்கள், அழகுக்குறிப்புப் புத்தகங்கள் மற்றும் கோலப்புத்தகங்கள்
- சமயத்தினை வளர்க்க ஆன்மீகப் புத்தகங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான எழுதுகருவி உபகரணங்கள், பயிற்சிப் புத்தகங்கள், க.பொ.த. சாதாரண தர மாணவர்கள், க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

10% முதல் 50% வரையான விலைக் கழிவு

குயின்சி விநியோகஸ்தர்கள்
271, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 221 7513 H.P. 077 226 8486

(6952)

## Study In Latvia



Schengen visa
WITH WORK PERMISSION

(C-6775)

மீண்டும் ஓர் அரியசந்தர்ப்பம்

# 2017

VENUE
EXPONET COLOMBO

- எமது அலுவலகத்தில் நடைபெறும் ஆங்கில பரீட்சையில் சித்தி எய்துவதன் மூலம் IELTS இன்றி Visa வினை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும்.
- IELTS இன்றி உயர்கல்வியைத் தொடருவதற்கான அரிய சந்தர்ப்பம் A/L இல் 3 பாட சித்தியுடன் உங்களுக்கு விரும்பிய கற்கை நெறியை தொடர முடியும்.
- Sehengen Visa (Sehengen Union இல் உள்ள 26 நாடுகளிற்கும் சென்று பணிபுரிய முடியும்.)
- UK Student Visa Reject ஆன மாணவர்களுக்கும் அனுமதி பெற்றுத்தரப்படும்
- ஒரு வருடத்திற்கான கட்டணமாக Rs. 350,000/= உடன் (Engineering, Business Management, MBA, etc) உங்கள் உயர் கல்வியை பயிலமுடியும்.
- 2 மாதத்தில் உங்கள் பயணம் உறுதி

கொழும்பு மற்றும் யாழ். கிளையினூடாக முற்றிலும் இலவசமாக Latvia Studen Visa தொடர்பான ஆலோசனைகள் பெற்றுக்கொள்ள முடியும்.

EXPONET
Overseas Consultants
www.expogroup.lk

No. 379-1/2 Galle Road, Col -06.
Hotline: 0714150995
E-mail: nimal@expogroup.lk

136 Palali Road, Parameswara Junction.
021 7538395

## யாழ் மதர் கெயார் Dental Unit

Reg.No.#PV85754




நவீன உபகரணங்களின் உதவியுடன் விசேட வைத்திய நிபுணர்களினால் பல்லுக்கு கிளிப் (Clip) போடுதல், நிரந்தர பல்கட்டுதல் உட்பட மற்றும் பல உயர்தர சேவைகள் தற்போது யாழ் நகரில்





- பல், வாய், வைத்திய சேவை (விசேடமாக வேரடைப்பு, பல் வெண்மையாக்கல்)
- பல், வாய், முகம் அறுவைச் சிகிச்சை (அண்ணப்பிளவு மற்றும் வாய், முக சீரமைப்பு)
- பல், வாய், முகம் சீரமைப்பு (ஒழுங்கற்ற, மிதப்புப் பற்கள் சீராக்கல்)

514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)
Tel. 0214927308, 0773754490 Mob : 077 220 2769

(C-6774)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.12.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நாவாந்துறை படிப்பகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

நாதம் 96

# வலம்புரி
## சங்குநாதம்

வள்ளுவர் ஆண்டு 2047 | 18.12.2016 | தொலைபேசி : 021 222 3378



இ.போ.ச. பேருந்து - ஹயஸ் மோதி

# சாவகச்சேரியில் கோர விபத்து!





உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூறியதும் அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

கையில் வைத்திருந்த கடதாசி ஒன்றை விரித்த வாத்தியார் எங்கட மண்ணில வாழ்ந்த மூத்த ஆசிரியர் திருமதி சரஸ்வதி ஆறுமுகம் அவர்கள் காலமாகி விட்டார்.

அவரின் மறைவுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவம். வாத்தியார் இப்படிக் கூறியதும் அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்ததும் பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி சரஸ்வதி ஆறுமுகம் அவர்கள் ஒரு சிறந்த ஆசிரியர் மட்டுமல்ல, மற்றவர்கள் மீது அன்பும் இரக்கமும் கொண்ட ஒரு பண்பாளர்.

விருந்தோம்பல் பண்பில் சிறந்து விளங்கிய அம்மையாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூற, ஆலடி மாநாட்டில் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஈழத்தின் தலை சிறந்த எழுத்தாளர் முல்லை மணி அவர்கள் காலமாகி விட்டார் என்ற செய்தி ஈழத்தின் எழுத்துலகிற்குப் பேரிழப்பு.

அவரின் மறைவிற்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலியை செலுத்துவோம் என்று வாத்தியார் அறிவிக்க அனைவரும் எழுந்து நின்று மௌன அஞ்சலி செலுத்தியதுடன் முல்லை மணி அவர்களின் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஊரில இருக்கிற வாத்தியார், பண்டிதர், விதானையார், கங்காணி, மூப்பர், சாத்திரியார் இவர்கள் தான் ஆலடி மாநாட்டு உறுப்பினர்கள். இருந்தாலும் ஒரு ஐ.நா. சபை போலத்தான் அந்த மாநாட்டின் நிகழ்வு ஒழுங்குகள் இருக்கும்.

**விதானையார்:-** எல்லாம் சரி ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு என்று சொல்லுகினம் எல்லோ இதனை எங்கட தமிழ்த் தலைவர்கள் ஏற்பினமோ?

**கங்காணி:-** ஏற்பினமோ! ஒற்றையாட்சிக்குள்ள தான் தீர்வு என்பதற்கு எங்கட தமிழ் தலைமை எப்பவோ ஓம் எண்டு சொல்லிப் போட்டுது.

சும்மா வெளியில் நாங்க விடமாட்டம், ஏற்கமாட்டம் வடக்கு - கிழக்கு இணைந்த சமஷ்டிக்கு குறைவாக எதனையும் வாங்க மாட்டம் என்று சொல்லுவினம். ஆனால் உள்ளுக்கு எல்லாம் உடன்பாடு கண்டாச்சு.

**வாத்தியார்:-** மண் மீட்புப் போர் தோல்வியில் முடிந்த பிறகு அரசாங்கம் தாறதை வாங்கிறதுதான் புத்திசாலித்தனம் என்று எங்கட அரசியல் தலைமை நினைக்குது போல.

**விதானையார்:-** வாத்தியார் இதை இப்ப அல்ல முன்பு நினைத்திருந்தால் அது ஏற்புடையதுதான்.

முதுமையைச் சொல்லுறன். அடுத்த தேர்தலில போட்டியிட மாட்டன் என்றிருக்கிற சம்பந்தர் ஐயாவிற்கு தன்ர காலத்தில இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டிட வேண்டும். அதன் மூலம் தன்ர பெயரை நிலை நிறுத்த வேணும் என்ற நினைப்பு இருக்குமே தவிர; தமிழ் மக்கள் பிரச்சினைக்கு இது தான் தீர்வு என்று ஒரு போதும் நிற்கமாட்டார்.

**மூப்பர்:-** அதெண்டால் உண்மைதான். போதைக்குறைக்கு அவர்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் கொடுத்து அமிர்தலிங்கத்துக்கு அடுத்ததாக சம்பந்தர் தானே எதிர்க்கட்சித் தலைவர் எண்டு செய்து போட்டார்கள் அப்ப அரசுக்கு விசுவாசமாக இருக்கிறது தானே நல்லது எண்டு நினைத்து செயற்படுகினம் அவ்வளவு தான்.

**வாத்தியார்:-**என்ன இருந்தாலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு எண்பது, இனி மேல் இந்த நாட்டில ஒரு பிரச்சினைக்கும் இடம் தராமல் இருக்க வேண்டும். இதை நினைக்காமல் ஏதோ ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வு எண்டு சொல்லி தமிழ் மக்களையும் சர்வதேசத்தையும் சமாளிப்பம் எண்டு நினைத்தால் எதிர் காலத்திலும் இலங்கை நிம்மதியாக இருக்க முடியாது.

**மூப்பர்:-** அப்ப வாத்தியார் வடக்கும் கிழக்கும் இணையாதோ?

**வாத்தியார்:-**விடிய விடிய இராமாயணம் விடிந்த பிறகு இராமர் சீதைக்கு என்ன முறை? எண்ட மாதிரித்தான் இருக்குது...

வடக்கு - கிழக்கு இரண்டையும் இணைக்கிறதுக்கு தமிழ் அரசியல் தலைமை விரும்பி இருந்தால் கிழக்கு மாகாணத்தில ஒரு தமிழனைத்தான் முதலமைச்சராக்கியிருக்க வேணும்.

அதுக்காக ஒரு முஸ்லிம் முதலமைச்சராக இருக்கிறதை நான் எதிர்க்கல்ல.

கிழக்கு மாகாணத்தில ஒரு முஸ்லிம் மகன் முதலமைச்சராக இருக்கும் போது கிழக்கு -வடக்கோட இணைய விரும்பும் என்று நாங்கள் எப்படி நினைக்கிறது.

கிழக்கு மாகாணம் பிரிந்து இருக்கிறதால தானே எங்கட இனம் சார்ந்த ஒருவர் முதலமைச்சராக இருக்கிறார் எண்டு முஸ்லிம் மக்கள் நினைப்பினம்.

அதில நியாயம் இருக்குமல்லோ உண்மையில கிழக்கு மாகாணத்தில முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக இருப்பதற்கு தமிழ் அரசியல் தரப்புத் தான் காரணம் என்பதை முஸ்லிம் மக்கள் உணர மாட்டினம். அவர்களுடைய பார்வை எல்லாம் வடக்கில இருந்து கிழக்கு பிரிந்ததால தான் எங்கட இனத்துக்கும் முதல மைச்சர் பதவி கிடைத்த தெண்டு.

**விதானையார்:-** அரசியல் என்பது மக்கள் மத்தியில அறியப்பட வேணும்.

ஆனால் எங்கட மக்கள் தேர்தல் காலங்களில மட்டும் அரசியலில கவனம் செலுத்துவினம். சிலர் அதுவும் இல்லை. இதனால் மக்களை ஏமாற்றக் கூடியவர்கள் வெற்றி பெறுகினம்.

இப்ப எங்களிட்ட இருக்கிற அரசியல் தலைமையிட்ட சமபல அங்கத்துவம் இல்லை. அதுதான் பிரச்சினைக்குக் காரணம்.

**கங்காணி:-** விதானையார் கொஞ்சம் புரியக் கூடியதாகச் சொல்லுங்க. 'சமபலம்' எண்டால் என்ன?

**விதானையார்:-**கங்காணியார், ஒரு அரசியல் தலைமை என்றால் அந்தத் தலைமையில பிரதிநிதித்துவம் பெற்றுள்ள அனைவருக்கும் சமபலம் இருக்க வேணும்.

ஆனால் எங்கட கூட்டமைப்புக்குள்ள இரண்டு, மூன்று பேரிட்டத் தான் முழுப் பலமும் கிடக்குது.

இதால அவர்கள் எடுக்கிற தீர்மானங்களுக்கு ஆமாப் போடுகிறதைத் தான் ஏனைய பிரதிநிதிகள் செய்யினம்.

**மூப்பர்:-** விதானையார் சொல்லுறது முழுக்க முழுக்க உண்மை. அடுத்த தேர்தலில ஆசனம் தர வேணும் என்பதற்காக பேசாமல் இருந்தால் பிழை ஒன்றும் இல்லை எண்ட நினைப்பு.

எங்கட சனங்கள் தான் பாவங்கள் (மூப்பர் இப்படிக் கூறும் போது மாநாட்டில் இருந்து கங்காணியார் வெளிச் செல்ல ஆயத்தமானார்.)

**வாத்தியார்:-** என்ன கங்காணியார் அவசரப்படுகிறியள்?

**கங்காணியார்:-** ஓம் வாத்தியார் எங்கட கிராம முன்னேற்ற சங்கத்தால (RDS) ஒரு கோயில் வேலை செய்தனாங்கள். பன்முகப் படுத்தப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தில இருந்து ஒதுக்கப்பட்ட நிதி தொழில் நுட்ப உத்தியோகத்தர் மதிப்பீடு செய்து அவற்ற சிபாரிசுக்குப் பிறகு பிரதேச செயலகம் காசோலை தந்தது. அந்தக் காசோலையை வங்கியில வைப்பிலிட்டம். இப்ப என்னடா எண்டால் அந்தக் காசை எடுக்கிறதுக்கு செய்த வேலைத் திட்டத்தின், பற்றுச் சீட்டுக்கள், வேலைத்திட்டத்தின்ர உடன்பாட்டுப் பிரதிநிதி இவற்றைத் தங்களிட்டத் தர வேணும் எண்டு RDO சொல்லுகிறார்.

வங்கியில இருந்து காசை மாற்றி எடுப்பது எண்டால் RDO, பிரதேச செயலர் ஆகியோர் உறுதி செய்ய வேணுமாம். அதுதான் அலைஞ்சு திரியிறன். கடனுக்குப் பொருள் தந்த கடைக்காரர் துரத்துகினம்.

இதுதான் சொல்லுறது பொது வேலையில ஈடுபட்டால் வீட்டு வேலை செய்ய முடியாமல் போகுமெண்டு.

**விதானையார்:-** எங்கட காலத்தில இப்படி நிபந்தனையள் இல்லை. பொது வேலையில ஈடுபடுகிறவியள் வேலையற்றவர்கள் எண்டு அரச அதிகாரிகள் நினைக்கினம் போல.

ஆர்.டி.எஸ். வேலை செய்ததை ரிஓ உறுதி செய்தால் பிறகென்ன உறுதிப்படுத்தல். பொது வேலையில ஈடுபடுகிறவியளை அலைக்கழிப்பதால தான் அநேகர் பொது வேலையில இருந்து ஒதுங்குகினம். இது தொடர்பில எங்கட யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுக்க வேணும்.

**கங்காணி:-** கிராம முன்னேற்றச் சங்கத்தில இருக்கிறவியள அரச உத்தியோகத்தர்கள் படுத்துகிறபாடு... தெரியாத்தனமா வேலைத் திட்டம் ஒன்றை எடுத்தால படாப்பாடு படவேண்டி இருக்கு. இப்படி சொன்னபடி கங்காணியார் மாநாட்டில இருந்து வெளியில செல்ல அந்த நேரம் ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் அடிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## அங்க ஒற்றையாட்சி இங்க சமஷ்டி ஆட்சி

ஆனால் இப்ப தமிழினம் அழிக்கப்பட்டிருக்குது வன்னிப் போரில நடந்த நிட்டூரம் ஐ.நா. சபையில பேசப்படுகுது. பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களை கொன்று ஒழித்த இன அழிப்பு யுத்தத்தில எல்லாவற்றையும் இழந்த தமிழினம் தனக்கு ஏற்பட்ட இழப்பை தனது பலமாகக் கொள்ள வேணும்.

இதைவிட்டிட்டு நாங்கள் தோற்றுப் போனவர்கள். இலங்கை அரசு தாறதை வாங்கிக் கொண்டு செம்பகப் பறவை மாதிரி வேலிக்குள்ள கிடந்து கறுக்குக் கறுக்கு எண்ட வேண்டியது தான் என்று நினைக்கிறது தான் மிகப் பெரிய பிழை.

**பண்டிதர்:-** வாத்தியார் நீங்கள் என்னதான் சொன்னாலும் முதுமை என்பது ஒரு பலவீனமானது தானே!

**கங்காணி:-** என்ன வாத்தியார் நாங்கள் ஒற்றையாட்சி, இழப்பு என்று பேசுறம். நீங்கள் முதுமை என்று சொல்லுறியள்.

**பண்டிதர்:-** கங்காணியார் எங்கட சம்பந்தர் ஐயாவிற்கு

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய புராணமும் புதிய அரசியலும்

திருமுருகாற்றுப்படையைத் தந்தவர் நக்கீரர்.

சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த பரம்பரையில் நக்கீரர் குற்றம் கடிந்து தமிழுக்குப் பெருமை சேர்த்தார்.

இந்த உலகம் முழுவதற்கும் கர்த்தா என்று சைவத்தமிழ் போற்றும் சிவப்பரம்பொருள் உலக ஜீவராசிகள் மீது கொண்ட அளப்பெருங் கருணையால் அவ்வப்போது மண் மீது தோன்றி தன் கருணையைப் பொழிந்துள்ளார்.

தாய்ப்பன்றியின் உருக்கொண்டு பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தது முதல் செம்மணச் செல்விக்காக மண் சுமந்தது வரை யாங்கும் சிவபெருமானின் தாயுள்ளம் தெரியும்.

ஆனால் நக்கீரரிடம் மட்டும் சிவபெருமான் கோபாவேசத்தோடு வருகிறார். அதன் மறுபக்கம் தர்மி மீது கொண்ட பாச மன்றோ! என நீங்கள் கேட்டால் அதற்கும் ஆம் என்று தான் கூறவேண்டும். இருந்தும் தர்மிக்காக சிவன் வந்தாராயினும் காட்சிக்குரியவன் நக்கீரன்.

இதோ அந்தக் காட்சி:

பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே நறுமணம் உண்டா என்ற சந்தேகம் பாண்டிய மன்னனுக்கு ஏற்படுகிறது. அப்படியொரு சந்தேகம் இப்போது மன்னர்களுக்கு ஏற்பட்டால் முகநூலில் அவரின் கதை கந்தலாகிவிடும் என்பது வேறுகதை.

பாண்டிய மன்னனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்க்க புலவர்கள் அழைக்கப்படுகின்றனர். இதில் தர்மி என்றொரு புலவன்.

ஏழ்மையும் வறுமையும் வாட்டக்கூடிய தர்மி சொக்கநாதப்பெருமான் மீது பெரும் பக்தி கொண்டவர். தர்மி மீது இரக்கம் கொண்ட சிவன் பாண்டிய மன்னனின் சந்தேகத்தைத் தீர்க்கும் பாட்டை எழுதி தர்மியிடம் கொடுத்துவிடுகிறார்.

அந்தப் பாட்டுடன் தர்மி பாண்டியமன்னனின் சபைக்குப் போகிறான். தலைமைப்புலவராகிய நக்கீரர் உள்ளிட்ட சபையில் தான் கொண்டு வந்த பாட்டை தர்மி படிக்கிறான்.

*கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி..* என்று பாட்டு விரியும். தர்மியின் பாட்டை செவியுற்ற மன்னன் ஆஹா, ஓஹோ, அற்புதம் அருமை என்றெல்லாம் புகழ்ந்து பொற்கிழி கொடுக்கத் தலைப்படுகிறான். அந்நேரத்தில் ஆஸ்தானப்புலவனாகிய நக்கீரர் எழுந்து மன்னா பாட்டில் தவறு உண்டு என்கிறார். அந்தோ! தர்மிக்குக் கிடைக்க வேண்டிய பரிசு தடைப்படுகிறது. தகவல் அறிந்த சிவன் பாண்டிய மன்னனின் அரண்மனைக்கு வருகிறார். என் பாட்டைக் குற்றம் என்று கூறிய புலவன் எவனோ என்று கர்ச்சிக்கிறார்.

நக்கீரர் எழுந்து யானே



பாட்டில் பிழை கண்டவன் என்கிறார். அடே நக்கீரா என் பாட்டில் சொற்பிழை கண்டீரோ. பெரும்பிழை கண்டீரோ என்று வாதிடுகிறார்.

சொற்பிழையாயின் மன்னிக்கலாம். பாட்டில் பொருட்பிழை உண்டு என்கிறார் நக்கீரர். சிவனுக்கு கடும் கோபம் வருகிறது. இது அன்றைய புராணக்கதை. இப்போது

காட்சி மாறுகிறது

ஆட்சி மாறுகிறது; கட்சியும் மாறுகிறது; இடம், மன்னர் மனை, ஆட்கள் எல்லாமுமே மாற்றம். ஆனால் சொற்பிழை, பொருட்பிழை என்பது மட்டும்தான் மாறவில்லை.

இதோ காட்சி தொடர்கிறது

இடம்: மைத்திரியின் அரண்மனை

இனப்பிரச்சினைக்குத் தீர்வு; ஒற்றையாட்சியா? சமஷ்டியா? வாதம் நடக்கிறது. புதிய அரசியலமைப்பில் எது இருக்கிறது.

**தமிழ் மக்கள்:** ஒற்றையாட்சி வேண்டாம், சமஷ்டி தான் வேண்டும்.

**மந்திரர்:** தீர்வு எல்லாம் தயார்.

**சாம்:** (அரங்கு இரண்டாக அமைக்கப்படுகிறது. ஒரு பக்கத்தில் தமிழர். மறுபக்கத்தில் சிங்கள ஆட்சியாளர்)

(தமிழர் பக்கத்தைப் பார்த்து)

சமஷ்டி இல்லையேல் தீர்வை ஏற்கமாட்டோம்.

(சிங்கள ஆட்சியாளர்களைப் பார்த்து)

ஒற்றையாட்சிதான் உகந்தது. இது போதும்... போதும்... அதிகம் கொடுத்தால் தமிழருக்கு கர்வம் வந்துவிடும்.

**தமிழ்மக்கள்:** எங்களுக்கு எது தீர்வு?

**மந்திரர்:** தீர்வு உங்களுக்கல்ல, அது எங்களுக்கு.

**சாம்:** மந்திரா அதிகம் அவசரப்படாதே. அமத்திவாசி.

**தமிழ்மக்கள்:** உங்களுக்குத்தான் தீர்வென்றால் ஒற்றையாட்சி முறையா? சமஷ்டியா?

**மந்திரர்:** குழப்பாதீர்கள்... குழம்பாதீர்கள்... ஒற்றையாட்சி, சமஷ்டி இவையெல்லாம் வெறும் சொல்லாட்சி. இப்போது இங்கு நடப்பது நல்லாட்சி. நாங்கள் சொல்லாட்சியை [illegible] பொருளாட்சியைப் பார்ப்போம்.

**தமிழ்மக்கள்:** பொருளாட்சியா? அதற்காகத் தான் ஒற்றையாட்சிக்கு உடன்பட்டீர்களா?

**மந்திரர்:** நாசமறுப்பு. பொருளாட்சி என்பதை பொருள்கோடல் என்று பொருள் கொள்க. ஒற்றையாட்சி, சமஷ்டி இவையெல்லாம் வெறும் சொல்லாட்சி. சொல்லில் ஏதும் இல்லை. பொருளில் தான் எல்லாமும் உண்டு.

**தமிழ்மக்கள்:** அப்படியானால் தீர்வுத்திட்டத்தில் ஒற்றையாட்சி என்றிருந்தாலும் தீர்வு சமஷ்டி என்பது தானே நீங்கள் கூறுவதன் பொருள்.

காட்சி மாறுகிறது

பாண்டிய மன்னனின் சபைக்கு வாருங்கள்.

**சிவன்:** பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே நறுமணம் உண்டு.

**நக்கீரர்:** ஒருக்காலும் இருக்கமுடியாது.

**சிவன்:** நக்கீரா தேவலோகத்துப் பெண்களுக்கும் கூந்தலில் இயற்கையாக நறுமணம் இல்லையோ.

**நக்கீரர்:** நான் வணங்கும் பார்வதியின் கூந்தலுக்கும் இயற்கையில் நறுமணம் கிடையாது.

மீண்டும் காட்சி மாறுகிறது

*இடம்: மைத்திரி சபை*

**தமிழ்மக்கள்:** ஒற்றை யாட்சியும் சமஷ்டியும் ஒன்றா?

**மந்திரர்:** சொல்லால் வேறுபட்டாலும் பொருளால் ஒன்று.

**தமிழ்மக்கள்:** குழப்புகிறீர்கள்.

**மந்திரர்:** குழப்பாதீர்கள்.

**தமிழ்மக்கள்:** நீங்கள் குழப்பினால் நாங்கள் குழம்புவதில் என்ன தவறு உண்டு.

**மந்திரர்:** நீங்கள் குழம்பினால் தீர்வு குழம்பும்.

**தமிழ்மக்கள்:** நாங்கள் குழம்பாதிருக்க சமஷ்டியைத் தாருங்கள்.

**மந்திரர்:** சமஷ்டிதான் வருகிறது.

**தமிழ் மக்கள்:** அப்படியானால் ஒற்றையாட்சி இல்லையா?

**மந்திரர்:** ஒற்றையாட்சிதான் சமஷ்டி. சமஷ்டிதான் ஒற்றையாட்சி.

**தமிழ்மக்கள்:** ஒரே குழப்பமாக இருக்கிறது.

**மந்திரர்:** சர்வதேச விசாரணை முடிந்து விட்டது என்றேன் நீங்கள் நம்பவில்லை. இப்போது ஒற்றையாட்சிதான் சமஷ்டி. அரசியலமைப்பு வந்த பின்பு சமஷ்டி கிடைத்து விட்டது என்பேன். நீங்கள் அதையும் நம்பமாட்டீர்கள்.

காட்சி மாற்றம்

**சிவன்:** நக்கீரா என்னை நன்றாகப் பார். நான் எழுதிய பாட்டுக் குற்றமா?

**நக்கீரர்:** நெற்றிக் கண்ணைத் திறப்பினும் குற்றம் குற்றமே.

**சிவன்:** நக்கீரா (நக்கீரர் எரிதணல் வெப்பத்தால் பொற்றாமரை தடாகத்தில் வீழ்கிறார்.

காட்சி மாற்றம்

*இடம்: மைத்திரிமனை*

**மந்திரர்:** தமிழ்மக்களே! நான் சொல்வது பொய்யா?

**தமிழ்மக்கள்:** அப்படித் தான் தெரிகிறது.

**மந்திரர்:** என்னை நன்றாகப் பாருங்கள்.

(மந்திரரின் கோபப் பார்வையால் தமிழ் மக்கள் வீழ்ந்து விடுகின்றனர்.

தமிழ் மக்களின் வீழ்ச்சியோடு புதிய அரசியலமைப்பு எழுகை பெறுகிறது)

காட்சி முற்றும்

நாடகமும் நடிப்பும்

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இட்லியைத் துரத்திய பாட்டி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

அரக்கியின் பேச்சைக் கேட்டு சமையலறைக்குச் சென்ற பாட்டிக்கு என்ன நடந்தது... பாட்டி ஆச்சர்யத்துடன் சமையலறை சென்று ஒரு பாத்திரத்தில் அரிசியைப் போட்டுக் கலக்கினார். மறுகணம் அந்தப் பாத்திரம் முழுக்க அரிசி நிறைந்திருந்தது. அதை வைத்து ருசியாகச் சமைத்தார். அதை அரக்கிகள் தின்று தீர்த்தார்கள். சில நாள் கழித்து, பாட்டிக்கு வீடு திரும்பும் ஆசை வந்தது. ஆனால் அரக்கியை மீறி எப்படிச் செல்வது என்று தெரியவில்லை. மறுநாள், அரக்கி இல்லாத நேரத்தில் படகில் ஏறிப் புறப்பட்டார் பாட்டி. ஞாபகமாக அந்த மந்திரக் கரண்டியைத் தன் மடியில் செருகிக்கொண்டார். சிறிது நேரத்தில் அவர் நதியைக் கிட்டத்தட்ட கடந்துவிட்டார். அப்போது, அரக்கி வந்துவிட்டாள். பாட்டி திகைத்தார். அரக்கி சத்தம் போட்டு எல்லாரையும் அழைத்தாள். இப்போது ஆற்றின் இருபுறமும் அரக்கிகள். ஆனால் யாருக்கும் நீச்சல் தெரியாது. அவர்களால் பாட்டியை நெருங்க இயலாது. பாட்டியாலும் கரையேற இயலாது. அரக்கிகள் சட்டென்று குனிந்து ஆற்று நீரைக் குடிக்க ஆரம்பித்தார்கள். சில நிமிடங்களில் ஆற்று நீரை அவர்கள் முழுக்கக் குடித்துவிட்டார்கள். பாட்டியின் படகு சேற்றில் சிக்கிக்கொண்டது. அரக்கிகள் கோபத்தோடு பாட்டியை நெருங்கினார்கள். பாட்டி இறங்கி ஓடத் தொடங்கினார். சேற்றில் பாட்டியின் கால் சிக்கிக்கொண்டது, தடுமாறி விழுந்தார். இதைப் பார்த்த அரக்கிகளுக்குச் சிரிப்பு தாங்கவில்லை. 'ஹாஹாஹா' என்று அவர்கள் வாய்விட்டுச் சிரிக்க, அவர்கள் குடித்த தண்ணீரெல்லாம் வெளியே வந்துவிட்டது. ஆறு மறுபடி ஓடத் தொடங்கியது. சட்டென்று படகில் ஏறிக்கொண்டார் பாட்டி, அரக்கிகள் நீரில் சிக்கித் தவிக்க, அவர்களுக்கு நடுவே படகைச் செலுத்தி மறுகரைக்கு வந்துவிட்டார். மளமளவென்று ஓடித் தன் வீட்டுக்குள் நுழைந்தார். அதே கணம், அந்தப் பள்ளமும் மூடிக்கொண்டது. பாட்டியைப் பார்த்தவர்கள் மிகவும் மகிழ்ந்தார்கள். 'இவ்ளோ நாளா எங்கே போனீங்க பாட்டி? உங்க இட்லி சாப்பிடாம ரொம்ப கஷ்டப்பட்டுட்டோம்' என்றார்கள். 'இதோ, வந்துட்டேன்' என்றார் பாட்டி. 'இனிமே உங்களுக்குமட்டுமில்லை, இந்த ஊருக்கே நான் இட்லி செஞ்சு போடுவேன்' என்றார் தன் இடுப்பிலிருந்த மந்திரக் கர்ண்டியைத் தொட்டுக்கொண்டு. அன்றுமுதல், பாட்டியின் வீட்டில் அரிசியும் மற்ற பொருள்களும் நிறைந்து வழிந்தன. தினமும் ஆயிரக்கணக்கானோர் அவர் தந்த இட்லியைச் சாப்பிட்டு மகிழ்ந்தார்கள்!








## சிந்தனை துளிகள்

* அகங்காரத்தைக் களைந்தால் நல்ல சிந்தனையும் பகுத்தறிவும் ஞானமும் ஏற்படும். அகங்காரத்தைக் களைந்ததால் தான் புத்தருக்கு ஞானம் பிறந்தது.

நீரோடைக்கும் பாறைக்கும் இடையே நடக்கும்
இடைவிடாத போராட்டத்தின் இறுதியில்
நீரோடை வெற்றி பெறுகிறது.
தனது பலத்தினால் அல்ல. தொடர் முயற்சியினால்

* ஒரு நாள் ஆத்திரம்.. பல நாள் துக்கத்தை தரும்...

* வீழ்வதில் வெட்கப் படாதே! வீழ்ந்து எழுவதில் தான் வெற்றி காண்பாய்!

* நாம் எடுத்துக்கொள்வதுதான் வாழ்க்கை. எப்போதும் அது அப்படித் தான் இருந்தது. இருக்கும். வாழ்க்கை மட்டும் மகிழ்ச்சி தராது. அதை மகிழ்ச்சியா வைத்திருக்க நாமும் விரும்ப வேண்டும். வாழ்க்கை உனக்கு நேரமும் இடமும் மட்டும் தரும். நிரப்ப வேண்டியது உன் சாமர்த்தியம்

* படித்தவனிடம் பக்குவம் பேசாதே. பசித்தவனிடம் தத்துவம் பேசாதே.


* மகான் போல் நீ வாழ வேண்டும் என்றில்லை, மனச்சாட்சிப்படி வாழ்ந்தால் போதும்.

(தொடரும்)

* உழைப்புக்கு என்றும் மரியாதை உண்டு.

* வாய்ப்பு ஒரு முறைதான் வரும், இனி வாய்ப்பைத் தேடி நாம் தான் செல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532



## தமிழர் பிரச்சினைக்கு மைத்திரி தீர்வு தருவாரா?

## ஒருவரை தேவைக்கு பயன் படுத்தி விட்டு தூக்கி எறியக்...

## ஜெயலலிதாவின் சாவு நிகழ்வா? நிகழ்த்தப்பட்டதா?

**தவராஜா — இணுவில்**

**ஜெயலலிதாவின் சாவு நிகழ்வா? நிகழ்த் தப்பட்டதா?**

நிகழ்வோ... நிகழ்த்தப்பட்டதோ... விசாரணைகள் செய்யப்பட்டு எல்லாம் வெளிச்சத்திற்கு கொண்டுவர வேண்டும். ஈழத்தமிழருக்காக பல தீர்மானங்களை நிறைவேற்றி எம் துயர் துடைக்க பாடுபட்ட ஒரு ஜீவன் வீணே சென்றுவிட எப்படி ஏற்றுக்கொள்ள முடியும் விதியெனின் விட்டுவிடுவோம். சதியெனின் சதிகாரர் முகத்திரைகள் கிழிக்கப்பட வேண்டும். இதுவே ஈழத்தமிழரின் வேண்டுகோள்.

**மதீசன் — நல்லூர்**

**தமிழர் பிரச்சினைக்கு மைத்திரி தீர்வு தருவாரா?**

தீர்வைத் தருவதற்கான மனம் மைத்திரியிடம் இருக்கிறது. தீர்வு தர சிங்கள மக்கள் தயாராவார்களா என்பது தான் கேள்வி. ஒரு காலத்தில் அடிமைச் சந்தைகளில் விற்கப்பட்ட கறுப்பினத்தவர்களின் விடிவுக்காய் உதித்த கறுப்பு சூரியனாய் மண்டேலா எழுந்தார். சுதந்திரத்தைப் பெற்றார். தமிழர் எம் சூரியன்தான் 2009 இல் அஸ்தமித்து விட்டதே.

இனி விடிவா அது நடக்கவே நடக்காது. செத்துப்போன கிளிக்கு சிங்காரமாய் சொகுசுக் கார்கள் மட்டும் ஓடும் ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை எங்கள் தெருக்களில்.

**தனு — அல்வாய்**

**ஒருவரை தேவைக்கு பயன்படுத்திவிட்டு தூக்கி எறியக் காரணம்?**

சோடாப் போத்தல்கள், உணவு பெட்டிகள், ஜோக்கட் பைக்கட்டுகள், ஐஸ்கிறீம் கப்புகள் இப்படி எல்லாவற்றிலும் பாவித்துவிட்டு குப்பையில் போடவும் என்றுதானே எழுதியிருக்கிறது. ஒருவரை தேவைக்குப் பயன்படுத்திவிட்டு குப்பையில் போடுவது ஒன்றும் தவறில்லையே? இப்படி என்னை ஒருவர் கேட்டார் அதைத்தான் சொன்னேன்.

**கருணா — மானிப்பாய்**

**உங்கள் காதலி எப்படி?**

நான் எதையாவது சாதிக்க வேண்டும் என்று நினைத்தால் அவளின் பெயரைச் சொல்லி சொல்லி குழைவேன். அவளும் செல்லமாய் என்னதான் வேணும்டா என்பாள். நானும் சாதகத்தைப் பயன்படுத்தி நீதான்டி வேணும் என்பேன். அவள் ஐஸ்கிறீமாய் உருகுவாள். நான் நினைத்தது நடந்துவிடும்.

மிகப்பயங்கரமான இரைச்சல் சத்தம். திடுக்கிட்டு கண்விழித்தேன்.கண்டது கனவு இரைச்சல் சத்தம் மனைவியின் குறட்டை.

**கவி — மிருசுவில்**

**பெண் அடிமை என்பது?**

அன்று படிக்காத பெண்கள் கருத்துச் சொல்லும் போது படிக்காத கழுதை கருத்துச் சொல்கிறது என்ற அதே சமூகம் இன்று படித்த பெண் கருத்துச் சொல்லும் போது படித்துவிட்டோம் என்ற திமிரில் பேசுகிறாள் என்று கூறும் கேடுகெட்ட உலகத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

**மிதுலா — காரைநகர்**

**எனது அன்பை என் காதலி புரிந்து கொள்கிறாளில்லையே?**

தன்னை நிராகரிப்பவரின் அன்பை எப்படியாவது பெற்றுவிடவேண்டும் என்று அலைகின்றாள் இந்த அன்பிற்கு அடிமைப்பட்ட மானிடன்.

**கயல்விழி — உரும்பிராய்**

**இந்த உலகம் எப்படிப்பட்டது வியாசரே?**

நம்மிடமிருக்கும் ஒரு பொருள் நீண்டகாலமாக தாழ்வாரத்து மழை வெயிலைத் தாங்கியபடி எதற்கும் பிரயோசனமின்றிக் கிடக்கும் அதை யாராவது வந்து கேட்கும் போது தான் நமக்கு முக்கியமான பொருளாக மாறிவிடுகிறது. இதைத்தான் மனம் ஒரு குரங்கு என் பார்களோ.

**குறுந்தகவல் (SMS) உங்கள் கேள்விகளை அனுப்புங்கள் 021 567 1532**

**எஸ் - கஜல்**

**காதலுக்கும் நட்புக்கும் இடையில் என்ன வித்தியாசம்?**

உங்கள் கேள்வியின் மூன்றாவது அடிக்குகை போனால் காதல். போகவில்லை என்றால் நட்பு. பதில் புரியவில்லையென்றால் கேள்வியை அழுத்தி வாசிக்கவும்.

**அனு — பருத்தித்துறை**

**ஜெயலலிதாவின் மரணத்தில் மர்மம் இருக்கிறதா?**

ஜெயலலிதாவின் கன்னத்தில் இருந்த அந்த நான்கு புள்ளிகளே மர்மமானவைதான். உடலை நீண்ட நாட்கள் கெடாமல் வைத்திருக்க இன்போம் செய்யும் முறை அது. அப்படியெனில் அவர் ஏற்கனவே இறந்து விட்டாரா? அப்படி இறந்திருந்தால் ஏன் அதை மக்களுக்குத் தெரியப்படுத்தவில்லை. இப்படி பல மர்மக் கேள்விகளுக்கு விசாரணைகள் நிச்சயம் விடை சொல்லும். தாமம் வெல்லும்.

**வே.அகிலேஸ்வரன் — மருதங்கேணி**

**கவிதை எழுதுவோருக்கு மேடை கிடைப்பதில்லையே?**

''கவிதை'' எழுதினால் மேடை கிடைக்கும் என்பது நம்கருத்து.

**மாதுளன் — யாழ்ப்பாணம்**

**நீங்கள் வாழ்வில் சாதிக்க விரும்புவது?**

சாதனை என்பது விண்வெளிக்கு ரொக்கட் அனுப்புவது மட்டும்தான் என பலர் நினைக்கிறார்கள். அதுதான் இல்லை. ஒருவன் தாய் தந்தைக்கு நல்ல மகனாக, மனைவிக்கு நல்ல கணவனாக, பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாக, சகோதரர்களுக்கு நல்ல அண்ணனாக, இந்த சமூகத்திற்கு நல்ல மனிதனாக இருந்தால் அதுவும் சாதனைதான். எங்கே இதில் நான் சாதித்துவிட்டேன் என எத்தனை பேர் கைகையத் தூக்குகிறீர்கள் பார்ப்போம்.

**ஜென்சிகா — இருபாலை**

**பணம் இருந்தால் எதையும் சாதிக்கலாமா?**

ம்... பாதாளம்வரை சென்று சாதிக்கலாம். சாதித்து முடித்துவிட்டால் திரும்பிவர முடியாது ஏனென்றால் பாதாளத்துக்குச் செல்லும் பாதைதான் பணம். புரிகிறதா.

**தனுஸ் — வயாவிளான்**

**ஒரு ஆணை காதலித்துக் கொண்டு இன்னொரு ஆணுடன் காதல் புரிபவர்களைப் பற்றி?**

நீங்கள் நிறைய தொலைக்காட்சி தொடர் பார்க்கிறீர்கள் என்பது மட்டும் எனக்கு நன்றாகப் புரிகிறது கண்ணா.

**கேதீஸ் — மாவிட்டபுரம்**

**ஜோக் பிளீஸ்?**

ஆசிரியர் :- இந்த உலகம் ஒரு நாடக மேடை அதில் நாம் எல்லோரும் நடிகர்கள்.

மாணவன் :- ஓ... அப்படியா! அப்படியென்றால் எனக்கு ஜோடியா கீர்த்தி சுரேசை போடுவிங்களா சேர்.

ஆசிரியர் :- நல்லா வருவாய்டா...

**மதுஸ் — பருத்தித்துறை**

**பாசத்தைக் காட்டி ஏமாற்றுபவர்களை என்ன செய்யலாம்?**

ஏதோ சின்னப்பிள்ளையிடம் பாயாசத்தைக் காட்டி ஏமாற்றியது போல சொல்கிறீர்களே. அன்பென்றால் அதன் அர்த்தம் தெரியாதவர்களுடன் பழகிவிட்டு இப்படியெல்லாம் கேள்வி கேட்க உங்களால் எப்படி முடிகிறதோ தெரியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## முகவரி தருவாயா?

காற்றாக வந்து என்னுள்
கலந்து கொண்டாய்
கனவாக மாறி என்னுள்
காதல் தந்தாய்
விடியாத இரவு இல்லை
என்றுரைத்தாய் இன்று
விடிவே என்வாழ்வில் இல்லாது
விண்ணோக்கிச் சென்றாய்
யாருக்கும் புரியாத புதிராக
வாழ்ந்து வந்தாய்
புதுவிடியல்தமை அமைக்க
விரைந்து சென்றாய்
என் வாழ்வில் விடிவே
வேண்டாம் என முடிபு செய்தாய்
அதனால் இருளாக்கி நீ எங்கோ
ஒளிந்து கொண்டாய்

**பி.சங்கவி**

## ஆசை

ஆசை ஆசை ஆசை
நெஞ்சில் தோன்றும் ஆசை
தோன்றும் ஆசையுள்ளே
நியாயம் தோன்ற ஆசை
நம்மைத் தாங்கி வாழ வைக்கும்
பூமிமீது ஆசை
நம்பூமி போல பொறுமைகொண்ட
உள்ளம் வாங்க ஆசை
பூமி தோன்றும் உயிர்கள்
அன்பில் இணைய ஆசை– அதை
புதுமையான இணைய வலையில்
இணைத்துப் பார்க்க ஆசை
பூமிமீது வாழும் உயர்
மாண்பினர் மீது ஆசை
நீதி நேர்மை வாய்மையோடு
வாழ்ந்து பார்க்க ஆசை

**தேவயாழ்வாசி**

## காத்திருப்பு

எருக்கிலைப் பஞ்சாய்
காற்றிலே மிதந்து
புவியை விட்டு உயர்ந்தேன்
புவியின் கவர்ச்சி விசை
என்னை மட்டும்
புறக்கணித்துவிட்டது
இந்தக் கேடு கெட்ட
மனிதரில்லா வாழ்க்கை
எத்தனை மகத்தானது–என்
உயிரை மதிக்காத
உலகை விட்டுப் போவதில்
எனக்கு உடன்பாடுதான்
ஆனாலும்...
போனது உடல்
போவது உயிர்
காத்திருப்பதோ என் கனவுகள்

**சி.சாமந்தி**
**பளை**

## இது தகுமோ?

வளரும் போது மரங்கள்
வளைந்து கொடுக்கும்
உரம் கொண்டு விட்டால்
தம்மைத் திடப்படுத்திவிடும்

வளைந்து செல்லும் பாதைகள்
வளைந்து நெளிந்துதான் செல்லும்
பிறர் செல்லும் இடத்தை
சேர்த்துவிடும் அது

பத்தவைக்கும் நெருப்பு
தொட்டால் சுட்டுவிடும்
வயிற்றுப் பசி தீர்க்க
சுட்டுத் தருகிறது உணவை

கடல் வற்றும் வரை
மழை கொட்டினால்
காட்டாறாய் உலகம்மாறும்
கருணை கொண்டு அளவாய் கொட்டுதே!

கற்கள் எல்லாம்
காலில் மிதிபட
சில கற்கள் சாமி
சிலையாகி விடுகிறதே

சுற்றும் பூமியது
கொஞ்சம் கூடிச் சுழன்று விட்டால்
உயிர்கள் நிலையென்ன
இறைவன் கருணையது

வாழ்வது சாவது
இரண்டின் நடுவில்– மனிதன்
நீ பெரிது நான் பெரிது
நியமம் பார்க்கிறான்

இது தகுமோ?

**மாவை. நா.கஜேந்திரன்**

# மௌனத்தின் தேடல்– 332



## அம்மா

சந்தியாவின் மகளாய் பிறந்தாய்
சாதனைக்கோர்
தலைவியாய் வாழ்ந்தாய்
இந்திய தேசத்தின்
விடிவெள்ளியானாய்
சிந்திக்க முன்னர் சிதைந்தது ஏனோ?
அம்மா என்று
அனைவரும் அழைக்க
அகிலத்தில் அரசாண்ட நீங்கள்
அவசரமாய் ஆண்டவனிடம்
விரைந்தது ஏனோ?
ஈழத்தமிழர் எம் விடிவுக்காய்
குரல் கொடுத்த
இந்திய தேசத்தின் புதல்வியே
ஆண்டுகள் ஆயிரம் கடந்தாலும்
அழியாது என்றும்
உன் நினைவுகள்!

**சி.பிரவீனா**
**யா/ விக்டோறியா கல்லூரி**

## தமிழகத்தின் தாயே!

தமிழகத்தின் தாயே
தாய்க்குலத்தின் நாடியே
ஆறு தடவை முதல்வரானீர் அம்மா!
தொப்புள்கொடி உறவுகளும்
தொலைந்து போகும் ஆனால்
ஒரு தாயாக தமிழக முதல்வராக
நீர் தந்த உறவு தொலையாதம்மா
உம்மை அம்மா என்றழைத்தோரை
அநாதையாக்கிச் சென்றதேனோ!

**சி.அபிலாசினி**
**யா/வ/ம./ம./க.**

## வீரத்தமிழ் மங்கை

உன் உறுமலும்
வீரக் கர்ஜனையும்
கேட்டிடவே பாவிகள்
பாரதத்தில் பயந்திடவே
தமிழ் வீரம் காட்டும் பெண்
புலியாய் வந்தாய் இங்கு
வீறு கொண்டு தமிழருக்காய்
போராடி நீ வாழ்ந்திடவே
காலனவன் கண்பட்டு
வீர மரணம் எய்திடவே
நீ இன்றி பூமித்தாயும்
கண்ணீர் வடிக்குதம்மா
உலகத் தமிழனவன் கண்ணீரால்
நாளைவரலாறு உன் புகழ்
பாடும் அம்மா!

**க.பே.நாஹாதிவன்**

## ஆளப்பிறந்தவள்

சொர்க்கத்தின் வாசல்படி
சென்ற எம் அம்மா
சினிமாவில் தடம் பதித்து
பல விருதுகளையும் வென்று
அரசியலிலும் தலைவர் வழியில்
வென்று வாகை சூடியது
போதும் என்றோ
பாதி வழியில் நம்மை விட்டு
பூமித்தாயுடன் சேர்ந்து
நல்லாட்சி புரியும்
புவியரசியான நம் அம்மா
என்றுமே கலையரசியே

**இரா.ஜெ[illegible]**
**மாத[illegible]**

## எங்கள் அம்மா

தமிழகத்தின் தங்கச்சூரியனே
திரையுலகின் அணையா ஒளியே!
மனமாய் வாழ்ந்த வாழ்வினிலே
மங்கா விளக்காய் ஒளிர்கையிலே
மலர்ந்தும் மணக்கா மலரினிலே
மணந்து பரப்பும் வாசனை போல்
வாழ்ந்தாய் இப்பாரினிலே
இருந்தாலும் மறைந்தாலும்
உன் பெயர் சொல்ல வேண்டும்
இவர் போல யார் என்று
உளம் சொல்ல வேண்டும்

**அ.கஜா, யா/நெ.ம.க.**

## தமிழகத்தாய்

தமிழகம் வளர்த்தெடுத்த
தமிழ்ச் செல்வியே
மஞ்சுளாவிய வானமெல்லாம்
கறுத்ததம்மா
கார்கள் எல்லாம் கண்ணீர் வடிக்குதம்மா
எம்மைக் கரை சேர்க்கும் பொழுதினிலே
ஏன் கதறவிட்டுச் சென்றாயோ
கானகம் எல்லாம் கதறல் சத்தம்
வானகம் எல்லாம் கண்ணீர் மழை
பூதங்களுக்கு எல்லாம் புன்சிரிப்பு
இனி எப்பொழுது
உயருமோ உன் இருவிரல்

**அ.அச்சுதன்**
**கோண்டாவில்**

## விடைபெற்ற அம்மா

அம்மாவை மறக்காத
பொழுதுகள் இல்லை
அம்மா செய்யாத
நன்மைகள் இல்லை
அம்மா கொடுக்காத
செல்வங்கள் இல்லை
தன்னிகரற்ற தாயை இழந்து தனிமையாய்
அநாதரவான குழந்தையாய்
தவிக்கிறது தமிழகம்
கெஞ்சும் ஏழைகளுக்கு
உன் கை அன்னமிட்டகை
உன் அன்புக்கு பாரதப் பெண்கள்
அடிமைப் பெண்கள்
தமிழருக்காய் குரல் கொடுத்து
விடைபெற்றார் ஆயிரத்தில் ஒருத்தி
செல்வி. ஜெயலலிதா

**அனோஜியஸ்**
**யா.இ.க.**

# மௌனத்தின் தேடல் –333



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 21.12.2016ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தலைவிதியை மாற்றப்போகும் தலைமாற்று சிகிச்சை




இதயம், நுரையீரல் வரிசையில் அடுத்ததாகத் தலையையே வேறு ஒருவருக்கு மாற்றிப் பொருத்தும் உறுப்புமாற்று அறுவைச் சிகிச்சைக்குத் தயாராகி விட்டார்கள் மருத்துவர்கள். பார்த்ததுமே பதறுதா? இத்தாலியைச் சேர்ந்த நரம்பியல் மருத்துவர் செர்ஜியோ கேனவெரோதான் இந்த முதல் தலைமாற்று அறுவைச் சிகிச்சையைச் செய்யப் போகிறாராம். அடுத்த ஆண்டு நடைபெறப்போகும் இந்த அறுவைச் சிகிச்சைக்கான ஏற்பாடுகள் கிட்டத்தட்ட முடிந்துவிட்டதாம்!

மரபியல் உடற்குறைபாடு உடைய ரஷ்யாவைச் சேர்ந்த வேலரி ஸ்பிரிடோனோவ் என்பவர், இந்த அறுவைச் சிகிச்சைக்கு தாமாகவே முன்வந்து, முதல் உறுப்பு மாற்றாளராகச் சேர்ந்திருக்கிறாராம். ஆனால், "ஒருவரின் தலையை இன் னொருவரின் உடலோடு பொருத்துவது எளிதல்ல" என உயிரி- மருத்துவத்துறைப் பேராசிரியர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

டாக்டர் செர்ஜியோ கேனவெரோ இந்த அறுவைச் சிகிச்சைக்காக, "உலகிலேயே முதல் முறையாக நோயாளியின் புரோட்டாகாலை உருவாக்க விர்ச்சுவல் ரியாலிட்டி முறையில் பல புதுமைகளைப் புகுத்தியிருக்கிறோம்" என்கிறார்.

வரும் ஜனவரியில் ஒரு குரங்கை வைத்து இந்த முயற்சிகளைச் சோதித்துப் பார்க்கப் போகிறார்களாம். இது சாத்தியமானால் மருத்துவத் துறையின் மிகப்பெரிய சாதனையாக இருக்கும்.

# இயற்கையோடு விளையாடு



தான்சானியா நாட்டின் நொராங்கொரா என்னும் இடம் அடர்ந்த காட்டுப்பகுதிகளால் சூழப்பட்டுள்ளது. காடுகளில் மரங்களுக்கு இடையே குடியிருப்புகளை அமைத்தல் பாதுகாப்பில்லாததாலும், நகர்ப்பகுதிகளில் அடிக்கடி நிலநடுக்கம் போன்ற இயற்கைப் பேரிடர்கள் நிகழ்வதாலும் வித்தியாசமான முறையில் மரங்களுக்கு நடுவே வீடுகளை அமைத்திருக்கிறார்கள்.

அடர்ந்த மரங்களுக்கு நடுவே மரக்கட்டைகளை நட்டு எடை குறைவான, அதே நேரத்தில் வலிமையான பொருட்களைக் கொண்டு உருண்டை வடிவ வீடுகளை அமைத்திருக்கிறார்கள்.


வீட்டின் உட்பகுதி ஸ்டார் ஹோட்டல்களைப் போல எல்லா வசதிகளைக் கொண்டதாகவும் அழகாகவும் இருக்கிறது.

விலங்குகளால் அச்சுறுத்தல் ஏற்படாவண்ணம் உயரத்தில் இருப்பதால் பாதுகாப்பாக உணர்வதாக இங்கே வசிப்பவர்கள் கூறுகிறார்கள். மேலும், நகரத்தை விட்டு விலகி இருப்பதால் இயற்கையான காற்றை சுவாசித்து ஆரோக்கியமாகவும் வாழலாம்.

இந்த வீடுகள் தினசரி வாடகைக்கு ஹோட்டலாகவும் பயன்படுத்தப்படுகிறதாம். மரங்களை அழிக்காமல் காடுகளுக்கு மத்தியில் இயற்கையை ரசித்தபடி வாழ்வது பேரின்பம்தானே!

# இளமையா இருக்க மெஷினா?





மனிதர்களின் தலையாய பிரச்சினைகளில் ஒன்று முதுமை! வயது முதிர்வதைத் தடுக்க சஞ்சீவினி மூலிகை எல்லாம் இப்போ மார்க்கெட்ல கிடைக்கிறதில்லைங்கிறதால விஞ்ஞானிகள் மூளையைப் பிராண்டி ஒரு கருவியைக் கண்டுபிடிச்சிருக் காங்க.

இந்த மெஷின் சின்னப் புள்ளைக விளையாடுற காத்தாடி மாதிரி அமைப்புல பற்றரியால் ஓடும் ஒரு கருவியைக் காட்டுகிறார்கள்.

அதில் பற்றரி அளவில் இருக்கும் நடுப்பகுதியை வாயில் கடித்தபடி தலையை மேலும் கீழும் ஒரு நிமிடம் தொடர்ந்து அசைக்க வேண்டுமாம்.

இப்படியே தொடர்ந்து செய்து வந்தால் இந்தப் பயிற்சியின் விளைவால் தசைப்பகுதிகள் வயதானாலும் சுருக்கமற்று இளமையான தோற்றத்தைக் கொடுக்குமாம்.

இதனால் நீண்ட வருடம் இளமையாகவே இருக்கலாம் என அந்த நிறுவனம் சொல்லியிருக்கிறது. இதைத் தயாரித்திருக்கும் **PAO** நிறுவனத்தின் விளம்பரத்தில் பிரபல கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ நடித்திருப்பதுதான் அங்கே சிறப்பம்சமாகும்.

# மான்களில் பீட்சா




வியாபாரத்தில் பல புதுமையான முயற்சிகளைக் கையாளும் டொமினோஸ் பீட்சா நிறுவனம் இந்த ஆண்டும் ஒரு புது உத்தியை அறிமுகப்படுத்தியுள்ளது.

ஜப்பானில் இந்த ஆண்டு வழக்கத்தைவிட கடும் குளிர் நிலவுகிறது. கிறிஸ்துமஸ் பண்டிகையின் போது பனிப்பொழிவு அதிகளவில் இருக்கும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதனால்கிறிஸ்துமஸ்கொண்டாட்டத்தின்போது வாடிக்கையாளர்களுக்கு பீட்சா டெலிவரியில் தாமதம் ஏற்படலாம் எனக் கருதி, அதைத் தவிர்க்க டொமினோஸ் பீட்சா நிறுவனம் ஒரு வித்தியாசமான முடிவை எடுத்துள்ளது.


அதன்படி கிறிஸ்துமஸ் பண்டிகையின்போது பனிச்சறுக்கு வண்டியை இழுக்கும் பெரிய கொம்புகள் கொண்ட கலைமான்கள் மூலம் பீட்சாக்களை விநியோகிக்கத் திட்டமிட்டுள்ளது.

அதற்காக மான்களுக்கு மிருகப் பயிற்றுநர்கள் பயிற்சி அளிதது வருகின்றனர்.

மேலும், அந்த மான்களின் உடலில் ஜி.பி.எஸ் சென்சார்களைப் பொருத்தியிருப்பதால் டெலிவரி செய்யப்படும் பொருளை டிராக் செய்து கொள்ளலாமாம்.

இதை வித்தியாசமான ஏற்பாடு எனச் சிலர் பாராட்டினாலும், மான்களை வதை செய்வதாகச் சிலர் எதிர்ப்புக்குரல் காட்டியுள்ளனர்.

# தூங்கிக்கிட்டே படிக்கலாம்!



பலருக்கும் பிடிச்ச விடயங்கள்ல ஒண்ணு புத்தகத்தோட வாசம். புத்தகம் சில பேரை வேற உலகத்துக்குக்கூட்டிப்போகும். அதே நேரத்துல சில பேரைக் குறட்டை விடவும் செய்யும். இந்த ரெண்டையும் ஒண்ணு சேர்த்த மாதிரி ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் கட்டப்பட்டுள்ள 'புக் அண்ட் பெட்"(**Book and Bed**) ஹோட்டல் இப்போ அங்கே ஓர் அடையாளமாகவே மாறிக்கிட்டு வருது.

இந்த ஹோட்டலின் வெற்றிக் கதை இது. இங்கே வர்ற வாடிக்கையாளர்கள் தங்களுக்குப் பிடிச்ச புத்தகத்தை தேர்வு செய்திட்டு புத்தக அலமாரிக்கு நடுவில் இருக்கிற பெட் போடப்பட்ட பங்க்ல படுத்துக்கிட்டே படிக்கலாம். தூக்கம் வந்தாத் தூங்கலாம். போர் அடிச்சா தாகத்தைத் தணிக்க பீர் விற்பனையும் உண்டு. பங்க் அளவைப் பொறுத்து 30 முதல் 50 அமெரிக்க டொலர் வரை இதற்காக கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

போனமாசம் ஆரம்பிச்ச இந்த ஹோட்டல் பிரபலமானதால், கியோட்டோவில் அடுத்த கிளையோட திறப்புவிழாவுக்குத் தயாராகிட்டு இருக்கு இந்த ஹோட்டல் நிர்வாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகின் தொழில் நுட்ப நாயகர்கள்

பல்வேறு பிசினஸ்களில் மில்லியனர்கள்உலகம்முழுவதும் உண்டு ஆனால் கணனி இணைய சேவை வணிகம் என



காலத்திற்கேற்ப புதிய டிசைனில் யோசித்து அதனை செயற்படுத்தி காசு பார்த்து கோடீஸ்வரர்கள் ஆனவர்கள் தனித்துவமான வர்கள் தானே! அவர்களைப் பற் றிய சிறு அறிமுகமே இக்கட்டுரை.

**பில்கேட்ஸ், மைக்ரோசொப்ட்**



1975 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் இணை நிறுவனரான பில் கேட்ஸ்,மைக்ரோசொப்ட் பொது நிறுவனமாக வளர்ச்சியடைந்த போது 30 வயதில் உலகமே வியக்கும் கோடீஸ்வரராகி



இருந்தார். கல்லூரிப் படிப்பிலிருந்து பாதியில் வெளியேறிய பில்கேட்ஸ் நண்பருடன் இணைந்து மைக்ரோசொப்ட்டை தொடங்கி வரலாற்று வெற்றி கண்டார்.2000 ஆம் ஆண்டில் இதன் தலைமைப்பதவியிலிருந்து ஒதுங்கிக் கொண்டார்.தற்போது மனைவி மெலிண்டாவோடு இணைந்து தனது கேட்ஸ் அறக்கட்டளையின் சமூக சேவைப் பணிகளைச் செய்து வருகிறார்.ஒரு இலட்சத்து 14 ஆயிரம் பேர் பணியாற்றும் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் தற்போதைய சொத்து மதிப்பு 85.32 பில்லியன் டொலர்களாகும்.பில்கேட்ஸின் சொத்து மதிப்பு 89.4 பில்லியன் டொலர்கள்.

**ஜெப் பெஸோஸ், அமேஸான்**


கார் கேரேஜில் வாழ்க்கையைத் தொடங்கி ஒன்லைனில் எலக்ரோனிக் பொருட்கள்,புத்தகங்களை விற்கும் நம்பர் 1 நிறுவனமான அமேஸான் நிறுவனத்தை 1994 ஜூலை 5இல் தொடங்கினார் ஜெப் பெஸோஸ். பரபர பிஸினஸ் டெக்னிக்குகளால் சக்சஸ் வேகம் கூட்டி பணக்காரர் ஆனவர் இவர்.இன்று ஒன்லைன் வணிகம் கடந்து வோஷிங்டன் போஸ்ட் நாளிதழ் ரொக்கெட் மூலம் பயணிகளை விண்வெளிக்கு அனுப்பும் ப்ளூ ஒரிஜின் நிறுவனம் என பல்வேறு நிறுவனங்களின் இயக்குநராக தீவிரமாக பணிபுரிந்து வருகிறார்.2இலட்சத்து 68 ஆயிரத்து 900 பணியாளர்களைக் கொண்டுள்ள அமேஸான் நிறுவன சொத்து மதிப்பு 107 பில்லியன் டொலர்களாகும்.ஜெப் பெஸோஸின் சொத்து மதிப்பு 51.2 பில்லியன் டொலர்கள்.

**மார்க் ஸுக்கர்பெர்க், பேஸ்புக்**

மார்க்,ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போதே மாணவர்கள் உரையாடுவதற்கான ஜாலியான ப்ராஜெக்டாக பேஸ்புக்கை (2004 பெப்ரவரி 4) உருவாக்கினார்.ஆனால் கம்பஸ் தாண்டி உலகளவில் பேஸ்புக் சுப்பர் ஹிட் அடித்தவுடனே அவர் செய்த முதல் வேலை,படிப்பை உதறிவிட்டு தொழிலில் உற்சாகமாக ஈடுபட்டது தான். தனது சம்பாத்தியத்தில் 99 சதவிகிதம் சமூகத்திற்குத்தான் என தில்லாக அறிவித்துள்ளார் மார்க். அதுமட்டுமல்ல பல்வேறு நல அமைப்புகளுக்கு பண உதவிகளும் நிறுவனத்தின் பங்குகளை வாரி வழங்குவதும் இவரின் வழக்கம்.14 ஆயிரத்து 495 பேர் பணிபுரியும் பேஸ்புக் நிறுவனத்தின் மதிப்பு 17.928 பில்லியன் டொலர்களாகும்.மார்க்கின் சொத்து மதிப்பு 46.2 பில்லியன் டொலர்கள்.

**லாரி எலிசன்,ஆரக்கிள்**

ஆரக்கிள் கார்ப்பரேஷனை



(ஜூன் 16,1977) அமைப்பதற்கு முன் கல்லூரி படிப்பிலிருந்து 2 முறை எஸ்கேப்பானவர் லாரி எலிசன். இஷ்டப்பட்டு இலட்சியத்திற்காக கஷ்டப்பட்டதால் மைக்ரோசொப்டுக்கு அடுத்த பெரிய கணனி நிறுவனமாக ஆரக்கிளை செதுக்கியெடுத்த உழைப்பாளி.உலகின் மிக அதிக சம்ப



ளம் வாங்கும் நிர்வாகி என்பதோடு, அப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜாப்ஸின் நெருங்கிய நண்பரும் கூட, ஹவாய் தீவுகளில் உள்ள லனாய்த் தீவு இவருடையது தான். ஒரு லட்சத்து 36 ஆயிரத்து 262 பேர் பணிபுரியும் ஆரக்கிள் நிறுவனத்தின் மதிப்பு 37.04



பில்லியன் டொலர்களாகும்.46.1 மில்லியன் டொலர் மதிப்பிலான சொத்து லாரி எலிசனுக்கு மட்டுமே சொந்தம்.

**லாரி பேஜ்,ஆல்பபெட்**

1973ஆம் ஆண்டு பிறந்த லாரன்ஸ் பேஜ் கூகுள் நிறுவனத்தை தொடங்கிய நிறுவனர்களில் ஒருவர் ஸ்மார்ட் போன் வணிகத்திற்காக தீர்க்கதரிசியாக ஆண்ட்ராய்ட் நிறுவனத்தை வாங்கியவர் இவர். கிட்டத்தட்ட 10 வருடம் கூகுள் நிறுவன பதவியிலிருந்து ஒதுங்கியிருந்தவர்.தற்போது 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கூகுளின் தாய் நிறுவனமான ஆல்பபெட்டின் நிர்வாகி 69 ஆயிரத்து 953 பணியாளர்களைக் கொண்ட இந்நிறுவனத்தின் சொத்துமதிப்பு 74.98 பில்லியன் டொலர்களாகும்.லாரிபேஜின்சொத்து மதிப்பு 37.8 பில்லியன் டொலர்கள்.

**செர்ஜி பிரின் கூகுள்**

செர்ஜி பிரினும் லாரி பேஜும் இணைந்து தான் 1998ஆம் ஆண்டு கூகுளை தொடங்கினர். அதுமட்டுமல்ல.கிராமப்புற மக்களுக்கு எளிதில் WIFI கிடைக்கும்படி செய்ய (ப்ராஜெக்ட்லூன்) விண்ணில் பலூன்களை பறக்கச் செய்யும் முயற்சி மக்களை சந்திரனுக்கு கூட்டிச் செல்லும் மூன்ஷாட் என சார் செமபிஸி. கூகுள் நிறுவனத்தின் சொத்து மதிப்பு 200 பில்லியன் டொலர்களாகும்.செர்ஜி பிரினின் சொத்து மதிப்பு 36.2 பில்லியன் டொலர்கள்.

**ஜாக்மா,அலிபாபா**


1999ஆம் ஆண்டு உருவான இவருடைய அலிபாபா சீனப் பொருட்களை உலகளவில் விற்கும் இணைய நிறுவனமாகும்.2014ஆம் ஆண்டு அலிபாபா பொது நிறுவன அந்தஸ்தை பெற்ற போது உலகின் மிகப்பெரிய பங்குத்தொகை விற்பனையாக 25 பில்லியன் டொலர்கள் கிடைத்தது.இன்று ஜாக்மா ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரர் என்பதோடு வியாபார நிறுவனங்களை இணைத்து புதிய தொழில் நுட்பங்களை செயற்படுத்துவதிலும் தீராத ஆர்வமுள்ளவராவார். 40 ஆயிரத்து 228 பணியாளர்களைக் கொண்ட அலிபாபா நிறுவனத்தின் சொத்து மதிப்பு 101.148 பில்லியன் டொலர்களாகும். ஜாக்மாவின்சொத்து மதிப்பு 26.3 பில்லியன் டொலர்கள்.

**ஸ்டீவ் பால்மர், மைக்ரோசொப்ட்**

1980 இல் மைக்ரோசொப்ட் அதிபர் பில்கேட்ஸுடன் இணைந்து மைக்ரோசொப்ட்டை தொடங்கிய போது அதன் முதல் பிசினஸ் மனேஜர் இவர் தான். அப்போதே அவருக்கு 50 ஆயிரம் டொலர்கள் சம்பளத்தோடு கூடுதலாக நிறுவன பங்குகளும் வழங்கப்பட்டன. தனது கடின உழைப்பால் 2000-2014 ஆண்டுகள் வரை மைக்ரோசொப்டின் தலைமை நிர்வாகியாக பணியாற்றினார். மைக்ரோசொப்ட் பங்குகளின் மூலம் பணக்காரரும் ஆனார். ஸ்டீவ் பால்மரின் சொத்து மதிப்பு 28.6 பில்லியன் டொலர்கள்.

**மைக்கேல் எஸ்டெல் டெல்**

1984 இல் மைக்கேல் டெல் ஆஸ்டினில் படித்த போது 'PC Ltd' என்ற பெயரில் ஒரு கணனி நிறுவனத்தை தொடங்கினார். ஒரு கட்டத்தில் கல்லூரிப் படிப்பிலிருந்து விலகி சொந்தமாக கணனிகளைத் தயாரிக்கத் தொடங்கிய போது அவருக்கு வயது 23. கணனி தயாரிப்பில்



உலகிலேயே 3 ஆவது பெரிய நிறுவனமான டெல் நிறுவனம் பொது நிறுவனமானபோது 30 மில்லியன் டொலர்கள் இலாபம் கிடைத்தது. மைக்கேல் டெல் பங்கு 18 மில்லியன் டொலர்களாகும். 13 ஆயிரம் பணியாளர்கள் பங்களிப்பு செய்யும் டெல் நிறுவனத்தின் சொத்து மதிப்பு 19.1 பில்லியன் டொலர்களாகும்.மைக்கேல் டெல்லுக்கு 18.9 பில்லியன் டொலர்கள் சொந்தம்.

**மா ஹுவாடெங் டென்செண்ட்**

போனிமா என்றழைக்கப்படும் இவர். பங்குச் சந்தையில் கிடைத்த



இலாபத்தை வைத்து நண்பர்களோடு இணைந்து Tencent இணையத்தள சேவை நிறுவனத்தை தொடங்கினார். டென்செண்ட் மூலம் தொடங்கிய தொழிலான 'QQ' தகவல் அனுப்பும் சேவையில் சக்சஸ் ஆக இன்று இவர் வசம் பல தொழி



ல்கள் உள்ளன. 31 ஆயிரத்து 557 பணியாளர்கள் பணிபுரியும் டென்செண்ட் நிறுவன மதிப்பு 102.9பில்லியன் டொலர்களாகும்.போனிமாவின் சொத்து மதிப்பு 18.2 பில்லியன் டொலர்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை




காற்று பலமாக வீசிக் கொண்டிருந்தது.வானத்தின் உச்சியிலே உலங்கு வானூர்தி ஒன்று விரைவாக பறக்கின்றது.கடலலை கரை தொட்டு மகிழ்கின்றது.சூரியன் மெல்ல புன்னகைத்த படி கடல் அடிக்குள் இருந்து மேலே மும்புகின்றான். குயில் ஒன்று வேப்பமரத்தில் இருந்து கூவுகின்றது.இரண்டு சிறுவர்கள் கைகளைக் கோர்த்தபடி பள்ளிக்கூடம் போகின்றார்கள். இயற்கை எவ்வளவு ரம்மியமாக இருக்கின்றது.என்னுடைய தோழி தமிழ்ச்செல்வியின் வீட்டுக்கு அந்த மணற் பாதையின் ஊடாகத் தான் செல்ல வேண்டும்.பண்டார வன்னியனின் சிலை இருந்த இடம் கடந்து தான் போக வேண்டும். சைக்கிளில் செல்வதனால் இயற்கையை ரசித்தபடி செல்ல முடிகின்றது.

அவளுடைய வீட்டுப்படலையை அண்மித்து விட்டேன். தமிழ்ச்செல்வி சின்னக்குழந்தைகளுடன் கிளித்தட்டு விளையாடிக்கொண்டிருப்பது வேலி இடுக்கின் ஊடே தெரிகின்றது.தமிழ்ச்செல்வி தமிழ்ச் செல்வி என்று வீட்டுப் படலையில் நின்று கூப்பிடுகின்றேன்.ஓம் வாறன் என்று சொல்லியபடி ஓடி வருகின்றாள். இளமதியா வாடி உள்ளுக்கு இந்த மரத்துக்கு கீழே இருக்கின்ற பனங்குத்தில் இரு. கை,கால கழுவீற்று வந்திற்றன்.தமிழ்ச் செல்வி முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்திற்கு தெரிவானவள். மிகவும் இரக்க சுபாவம் கொண்டவள். யாருடனும் அதிகமாக கதைக்க மாட்டாள்.எதையும் கதைக்கும் போது உண்மையும் நியாயமும் இருக்கும். கூடைப்பந்து,துடுப்பாட்டம் எல்லாம் அவளுக்கு கைவந்த கலை ''எனக்கு,இப்பவும் ஞாபகம் இருக்கு நாங்க இரண்டு பேரும் ஆறாம் வகுப்பு படிக்கேக்க வாணி விழா அண்டைக்கு நடந்த கோலப் போட்டி, பேச்சுப் போட்டி எல்லாத்திலையும் முதலாவதாக வந்தவள். மிகவும் சிறந்த அறிவாளி தமிழ்ச் செல்வி. அவள் ஒரு போதும் தங்க ஆபரணங்களை அணிவதில்லை. இறுக்கமான ஆடைகளை அணியும் பெண்களை பார்த்தால் என்ன இளமதி காலம் இப்படி மாறிப் போச்சு இப்பதைய பெட்டைகள் இப்படி உடுப்புகளைப் போடுதுகள் என ஏசுவாள்.ஏழைக் குழந்தைகளைக் கண்டால் மிகவும் அன்போடு கட்டித் தழுவி உணவு பரிமாறுவாள். இளமதி இந்த பிள்ளைகள் பாவம் யுத்தத்தில் தாய், தந்தையை தொலைச்ச பிள்ளைகள்.நகரத்து பஸ்சுகளில கையேந்தி அலையுதுகள். இந்தப் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும். பல்கலைக்கழக விடுமுறை நாட்களில் இந்தப் பிள்ளைகளுக்கு இலவசமாக பாடம் சொல்லிக் கொடுப்பாள் தமிழ்ச்செல்வி.தான் பிறந்த மண்ணையும் மக்களையும் நேசிக்கும் ஒரு பூவை அவள்.

என்ன இளமதி நீண்ட நாளைக்குப் பிறகு வந்திருக்கின்றாய்?ஓமடி தமிழ்ச்செல்வி எப்படி நலமா? அம்மா, அப்பா எல்லாம் எப்பிடி இருக்கிறாங்கள்?எல்லாரும் நல்ல சுகம் நீ எப்படி இருக்கின்றாய் இளமதி? இருக்கின்றன் தமிழ்ச்செல்வி. அம்மா, அப்பாக்கள் எல்லாம் எங்க? எல்லாரும் யாழ்ப்பாணத்தில் தான். அண்ணா கல்யாணம் செய்து இப்ப ஒட்டிசுட்டான்ல தான் இருக்கின்றார். அண்ணா வீட்ட வந்தனான் அதுதான் உன்னையும் பார்த்திட்டு போவம் எண்டு வந்தனான்.

கடசி பிரச்சினையோட இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்துக்கு போனதுதான் ஏழு வருசத்துக்குப் பிறகு முல்லைத்தீவுக்கு வந்திருக்கிறன் எண்டாலும் எனக்கு நல்ல மனசில சந்தோசம் என்ன தெரியுமா?நான் பிறந்த முல்லை மண்ணுக்கு வந்ததையிட்டும் அதைவிட சந்தோசம் எனது பள்ளிக்கூட தோழியான உன்னை சந்திச்சதும் தான் தமிழ்ச்செல்வி.

ஓமடி இளமதி உன்னைக் காணுறது எனக்கு சந்தோசமா இருக்கு.நானும் நீயும் ஒண்டாய் பள்ளிக்கூடத்துக்கு நடந்துபோன காலங்கள் இனிமையானவை.நெஞ்சுக்கு சந்தோசம் தரும் ஞாபகமான நாட்கள்.ஒருநாள் கார்த்திகை மாதத்தில் நல்ல மழை பெய்து கொண்டிருந்த போது பள்ளிக்கூடத்துக்கு நான் குடை கொண்டு வரவில்லை.உனது குடையை எனக்கு தந்து வீடு அனுப்பி வைத்தாய். உன்னை எப்படி மறப்பேன் இளமதி?

அதுசரி அம்மாவின்ர சிலமனைக் காணன் எங்க தமிழ்ச்செல்வி?ஓ அம்மா ஆட்டுக்கு கஞ்சி வைக்கவெண்டு போயிற்றா இப்ப வந்து விடுவா இரு இளமதி.ஒருக்கா பன்னாடைய வைச்சு அடுப்புமூட்டி தண்ணியை வைச்சுட்டு வாறன். இப்பதான் சாப்பிட்டு வாறன் தமிழ்ச்செல்வி.பரவாயில்லை இளமதி தண்ணியை வைச்சிட்டு வாறன்.

நீண்ட நாட்களின் பின் முல்லைத்தீவுக்கு வந்தது எனக்கு அளவுகடந்த மகிழ்ச்சி. நான் நீண்டகாலம் கால்பதித்து நடந்த நிலம் "அ" எழுதிப் பழகிய மண் மனதிலே ஒருவித சந்தோசம். தூரத்தே ஒரு குயில் ஒன்று பாடுகின்றது.எதையோ இழந்து விட்ட சோகத்திலா பாடுகிறது? ஒன்றும் புரியவில்லை.

சிறுவர்கள் அந்த வேப்ப மரத்துக்கு கீழே கிளித்தட்டு விளையாடிக்கொண்டிருக்கின்றார்கள். அணில் பிள்ளை ஒன்று தமிழ்ச்செல்வி வீட்டு முற்றத்தில் நிற்கின்ற பப்பாசியின் பழத்தினை கோதுகின்றது.சில புளினிக்குருவிகள் நான் இருக்கும் பனங்குத்தி அருகே தத்தி தத்தி வந்து பறந்து செல்கின்றன.

இளமதி உன்னை தனியே இருக்க விட்டு நான் உள்ளுக்க போயிற்றன்...இல்லை பரவாயில்லை...இந்தா தேத்தண்ணி இதை குடி. எடி பிள்ளை தமிழ்ச்செல்வி யாரோட கதைக்கின்றாய்?அம்மா இளமதி வந்திருக்கிறாள்.யார் யாழ்ப்பாணத்து இளமதியோ...!ஓம் அம்மா...எடி பிள்ளை எப்பிடி இருக்கிறாய்?இருக்கிறன் அம்மா. நீண்டநாளைக்கு பிறகு காணுறன்.நல்லா நிறத்திட்டாய் இளமதி.உண்மையாவா? ம்ம்ம்...

தமிழ்ச்செல்வி அந்த பனம் பெட்டிக்கை பனங்காய்ப் பணியாரம் இருக்கு எடுத்துக் கொண்டு வந்து குடன்.ஓம் அம்மா இந்தா இளமதி இந்த பனங்காரப் பணியாரத்தைச் சாப்பிடு.பனங்காய் எங்கத்தால தமிழ்ச்செல்வி? எங்கட வளவுக்க நிண்ட எல்லாப் பனைகளும் செல்லடி பட்டு பட்டுப்போச்சு.மாமா அண்டைக்கு வரேக்க பனங்காய் பாணி வாங்கிற்று வந்தவர் அதில சுட்டது தான் இந்தப் பனங்காய் பணியாரம்.

யாழ்ப்பாணம் எப்படி இருக்குது இளமதி? சனமெல்லாம் சந்தோசமாய் இருக்கா? பத்திரிகை எடுத்தா யாழ் செய்தி படிக்கிறது எனக்குப் பிடிக்கும்.இப்ப என்ன செய்கின்றாய் இளமதி? குடும்ப வாழ்வாதாரம் எப்படிப் போகுது? எங்கட வீட்டுக்கு பக்கத்த இருக்கின்ற பள்ளிக்கூடத்துக்கு தொண்டராசிரியரா படிப்பிக்க போறனான்.அதில வாற வருமானத்திலையும் அப்பா கடலுக்குப் போட்டு வாற சீவியத்திலையும் தான் குடும்பம் ஓடிக்கொண்டிருக்கு. பல்கலைக்கழக கல்வி முடிஞ்சுதோ தமிழ்ச்செல்வி? என்ர மருத்துவப் படிப்பு முடிய மூண்டு வருசம் இருக்கு படிப்பு நிறையக் காசு முடியும் போல இருக்கு.

அப்பா கடலுக்கு போய் உழைச்சு வாற காசில தான் என்னால் படிக்க முடியுது அப்பா அடிக்கடி சொல்லுவார். நீ படிச்சு மருத்துவராய் வரோனும் எங்கட மாஞ்சோலை ஆஸ்பத்திரிக்கு வைத்தியர்கள் இல்லை.நீ அந்தக் குறையை நிவர்த்தி செய்யோனும். என்ர மூளைக்கு கிட்ட இருக்கின்ற குண்டு சிதறலை நீதான் டாக்குத்தராய் வந்து சத்திரசிகிச்சை செய்ய வேண்டும்.

இளமதி நான் என்ர அப்பான்ர கனவையும் என்ர கனவையும் நிறைவேற்ற வேணும்.நான் வைத்தியராய் வந்தால் எங்கட சனத்தின்ர உடம்பில இருக்கின்ற குண்டுச் சிதறல்களை எடுக்கின்றது தான் என்ர இலட்சியம்.தமிழ்ச்செல்வி உன்னுடைய கனவு நனவாக வேண்டும். அண்ணாவும் அண்ணியும் தேடப்போயினம். போயிற்று வாறன். அண்ணான்ர பிள்ளைன்ர முதலாவது பிறந்த நாளுக்கு வரேக்க வாறன். இதுதான் என்ர தொலைபேசி இலக்கம். நான் போயிற்றுவாறன்.

அவளுடைய முகத்தை கடைசியாக உற்றுப் பார்க்கின்றேன்.வைத்தியராக வர வேண்டும் என்ற கனவு அவள் முகத்திலே பிரதிபலிக்கின்றது.மனதில யேசுவை பிரார்த்திக்கின்றேன். தமிழ்ச்செல்வி வைத்தியராக வரவேண்டும் என்று.இளமதி இனி நான் உன்னை எப்ப காணுவனோ தெரியாது. இந்தா இதைக் கொண்டு போய் வாசித்துப்பார். அந்தப் புத்தகம் சுபாஸ் சந்திரபோசின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம். புத்தகத்தை வாங்கி விட்டு தலையசைத்து விட்டு செல்கின்றேன்.

வீதியிலே சில பெண்கள் தண்ணீர் குடங்களுடன் செல்கின்றார்கள்.இரண்டு சிறுவர்கள் பாலை மரத்தின் மேலே ஏறிப் பாலைப்பழங்களை பறித்துக் கொண்டிருக்கிறார்கள். வானத்திலே இரண்டு கொக்குகள் இருப்பிடம் திரும்பிக் கொண்டிருக்கின்றன.

தமிழ்ச்செல்வி தந்த புத்தகத்தை வாசித்துப் பார்க்கின்றேன்.உண்மையும் நியாயத்தையும் தேடி புறப்பட்ட தேச விசுவாசியின் வாழ்க்கை வரலாறு.இரண்டு மாதங்கள் கடந்து விட்டன. தமிழ்ச்செல்வி எனது செல்லிடத் தொலைபேசிக்கு ஒரு குறுந்தகவல் அனுப்பியிருந்தாள்.

நம்பிக்கை உரமிடு
விருட்சமாய் உருவெடு
துணிவுகொள் வானம் பிளக்கும்
துயரம் கொல் வாழ்வு பிறக்கும்

என்ற சிந்தனைத் துளியை அனுப்பியிருந்தாள். இது தான் அவள் எனக்கு இறுதியாக அனுப்பிய குறுஞ்செய்தி. படிக்கின்ற காலங்களிலையே தமிழ்ச்செல்வி வித்தியாசமானவள்.மாணவர் மன்றம்,கலை இலக்கிய விழாக்களில் அவளின்ர கவிதை கட்டாயம் இடம்பிடிக்கும். அவள் தன்னுடைய கவிதைகளுக்காக நிறைய பரிசுகளையும் கைதட்டல்களையும் வாங்கியிருக்கிறாள். அவளைப் பற்றிய ஞாபகம் வரும் போது எல்லாம் அவளை சந்திக்கோனும் போல மனதில் தோன்றும். நீண்டநாட்கள் யுத்த சூழலால் தொடர்பு அற்றுப் போயிருந்தது.இரண்டு வருடங்கள் கழிந்து விட்டன. தமிழ்ச்செல்வி பற்றி அங்கிருந்து வருபவர்களிடம் விசாரிப்பேன். அவள் எங்கு இருந்தாலும் திருமணம் முடித்து சந்தோசமாக இருக்க வேண்டும் என்பது எனது எதிர்பார்ப்பு. கடவுளிடம் அடிக்கடி வேண்டிக்கொள்வேன்.


நீண்ட நாட்களின் பின்னர் பத்திரிகையில் பார்த்த செய்தி என்னை அதிர்ச்சியடையச் செய்தது.''பல்கலைக்கழக மாணவி வன்புணர்வுக்குட்படுத்திக் கொலை" கடவுளே யாராக இருக்குமோ என நெஞ்சு பதை பதைத்தது. வாசித்த போது தலை விறைத்தது. தமிழ்ச்செல்வி உன்னையா இப்படிச் செய்தார்கள்?இதைச் செய்த கொடூரவாதிகள் என்றோ ஒருநாள் அழிந்தே போவார்கள்.நீ தனியே துடி துடித்து இறந்த கணங்களை நினைத்துப் பார்க்கையில் நெஞ்சம் பதறுகின்றது. இதயம் வேகமாக துடிக்கிறது.உனது இறப்பை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. தமிழ்ச் செல்வி உன்னோடு பழகிய காலங்கள் எனக்கு வசந்தகாலம்.நீ எனக்கு ஒரு நண்பியாய் உண்மையான தேச விசுவாசியாய் இந்த மண்ணில் வாழ்ந்தாய்...

உன்னை நினைக்கும் போது எல்லாம் எனது மனது உருகும். நீ ஆசையோடு பரிசளித்த சுபாஸ்சந்திரபோஸின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் எனது படுக்கையறையில் பத்திரமாய் இருக்கிறது.தமிழ்ச்செல்வி நீ அன்றொருநாள் எனக்கு அனுப்பிய அந்த குறுஞ்செய்தியை உச்சரிக்கின்றேன். முட்புதருக்கிடையே இருக்கின்ற உனது கல்லறையின் மரம் அசைந்தாடுகின்றது.

ஆ.முல்லைதிவ்யன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குறட்டை ஆபத்து!




**தொடர்ச்சியான குறட்டை மூச்சுத் திணறல், இரத்தக் கொதிப்பு, இதய நோய், ஸ்ரோக் போன்ற பிரச் சினைகளில் கொண்டுவிட்டு விடும் அபாயம் உள்ளது. நுரை யீரல் மூளையும் பாதிக்கப்படலாம்.**

குறட்டை சாதாரணமான சகஜமான விடயம் என்கிற நினைப்பு கொண்டவர்கள் அதை மாற்றிக் கொள்ளலாம். கொஞ்சம் அசந்தாலும் நம் சுவாசத்தை மொத்தமாக நிறுத்தி விடக்கூடியது குறட்டை என்கிறனர் வைத்தியர்கள். தூங்கும் போது ஏற்படக்கூடிய சுவாசக் கோளாறு என்று குறட்டையைக் குறிப்பிடுகிற சென்னை ஸ்டானிலி வைத்தியசாலையின் ஈ.என்.டி.பிரிவுத் தலைவர் டாக்டர் எம்.என்.சங்கர் குறட்டை குறித்து அவசியம் தெரிந்து கொள்ள வேண்டிய விடயங்களை டிப்ஸ்களாத் தந்தார்.

நாம் சுவாசிக்கும் காற்று மூக்கு, வாய், தொண்டை, மூச்சுக் குழாய் வழியே நுரையீரலை அடைகிறது. இந்தப் பாதையில் தடை ஏற்படும் போது குறட்டை ஒலிஎழும்புகிறது.

மல்லாந்து படுக்கிறபோது நாக்கு உள்வாங்கி தொண்டைக்குள் இறங்கி காணப்படும். இதனாலும் மூச்சுப் பாதையில் தடை உண்டாகலாம். எனவே மல்லாந்து படுப்பதை தவிர்ப்பது குறட்டையிலிருந்து தப்பிக்க ஒரு வழி.தலையை ஓரளவு உயர்த்தி வைத்துக்கொண்டு தூங்கலாம்.

ஆரம்பத்திலேயே வைத்தியர்களிடம் சென்றால் குறட்டைக்கான காரணம் . கண்டுபிடிக்கப்பட்டு சரி செய்யப்பட்டு விடும். தீவிரமான பின் குறட்டையை தடுக்க வேண்டுமானால் தனியார் வைத்தியசாலைகளில் 2 இலட்சம் வரை செலவாகிறது.


உணவுப் பழக்கத்தை எடுத்துக் கொண்டால் இரவில் கொழுப்புச் சத்துள்ள உணவைத் தவிர்ப்பது சிறந்தது.

குறட்டையை தவிர்ப்பதற்கென கருவிகள்,தைலங்கள் வந்துள்ளன. அவற்றை மருத்துவ ஆலோசனை பெற்று பயன்படுத்தலாம்.

குறட்டை ஒலியின் அளவு சீராக இல்லாமல் ஏறி இறங்குகிறது என்றால் அது எச்சரிக்கை மணி. உடனே சிகிச்சை எடுக்க வேண்டும். கவனிக்காமல் விட்டால் மூச்சுத் திணறல் ஏற்படலாம்.

**மூக்கடைப்பு டொன்சில் வளர்ச்சி சைனஸ் தைரோய்டு பிரச்சினை இருப்பவர்களுக்கு குறட்டையும் எக்ஸ்ட்ரா பிரச்சினையாக சேர்ந்து கொள்ளும். உடல் பருமன்,மது, புகை போன்றவையும் குறைந்த சதவிகிதத்தில் குறட்டைக்கு காரணமாகின்றன.**

# சமையல் டிப்ஸ்



**இ**ட்லி அவிக்கும் பாத்திரத்திலுள்ள சுடுநீரில் காய்ந்த கறிவேப்பிலையை போட்டு இட்லி அவித்தால் இட்லி பிரமாதமான வாசனையோடு இருக்கும்.

**வீ**ட்டு சமையறையில் சிறிய தொட்டியில் மண் வைத்து அதில் சின்ன வெங்காயம், பெரிய வெங்காயம் ஊன்றி வைத்தால் அது துளிர் விட்டு வளர அதன் வாடைக்கு பல்லி வராது.

**டூ**ல்ஸ் பாக்ஸில் ஒரு சோக்பீஸ் துண்டை போட்டு வைத்தால் அது ஈரப்பசையை உறிஞ்சி டூல்ஸ் துருப்பிடிக்காமல் இருக்க உதவும்.

**தே**ங்காய் உடைத்த இளநீரை சுண்ணாம்பு போத்தலில் சிறிது ஊற்றி வைத்தால் சுண்ணாம்பு சீக்கிரத்தில் காய்ந்து போகாது.

**கோ**லிஃபிளவர் சமைக்கும் போது ஒரு துளி பால் சேர்த்தால் பூப்போன்ற அதன் வெள்ளை நிறம் மாறாது. பச்சை வாடையும் அடிக்காது.

**சா**ம்பார் வெங்காயத்தை ஃப்ரிஜ்ஜில் வைத்து எடுத்து உரித்தால் சுலபமாகத் தோல் உரிக்கலாம். உரிக்கும்போது கண்ணீரும் வராது.

**மு**ட்டை ஓட்டின் மேல் சிறிதளவு ரீஃபைண்ட் ஓயில் தேய்த்து வைத்தால் முட்டை நீண்ட நாள் கெடாது.

**ச**ப்பாத்தி மாவு பிசைவதற்கு முன் கைகளில் சிறிதளவு உப்பைத் தடவிக் கொண்டால் கைகளில் மாவு ஒட்டாது.

**உ**ப்பு ஜாடியில் சில அரிசி மணிகளைக் கலந்து வைத்தால் ஈரக்கசிவு ஏற்படாது.

**ரோ**ஜாச் செடியை நடும் போது அத்துடன் இரண்டு சிறிய வெங்காயத்தை ஊன்றி வைத்தால் பூச்சிகள் செடியை அரிக்காது




# நம்பினால் நம்புங்கள்!



நமது சருமத்தின் செல்கள் அவ்வப்போது புதுப்பிக்கப்பட்டாலும் தழும்புகள் மட்டும் அப்படியே இருக்க என்ன காரணம்? அவற்றுக்கு அடியிலுள்ள கொலஜன் மாறாமல் இருப்பது தான்!

பிரவுனிஸ் மற்றும் ஓட் மீல் குக்கீஸ் போன்ற பேக்கரிப் பொருட்களைத் தயாரிப்பதற்கான வழிமுறைகளைக் கற்றுத் தரும் 26 பக்க ஆவணத்தை அமெரிக்க இராணுவம் நடைமுறையில் வைத்திருக்கிறது!

முதல் உலகப் போரின் போது,எதிரி கப்பல்களில் உள்ள பெரிஸ் கோப்களில் எச்சமிடும் வகையில் ஸீகல் பறவைகளைப் பழக்க இங்கிலாந்து இராணுவம் முயற்சி மேற்கொண்டது!



மைக்கேல் ஜாக்சனின் பிரேத பரிசோதனையின் போது அவருக்கு வழுக்கைத் தலை என்பதும் அதை மறைக்க விக் அணிந்திருந்தார் என்பதும் தெரியவந்தது.

இருமலுக்கு பல நேரங்களில் இருமல் மருந்தை விட ,சொக்லேட் நல்ல பலன் தரும்

அமெரிக்காவிலுள்ள மன்ஹாட்டன் பகுதியின் மக்கள் தொகை அடர்த்தி போல- அவ்வளவு நெருக்கமாக வாழ்வதானால் , ஒட்டுமொத்த உலக மக்களையே நியூசிலாந்து நாட்டுக்குள் நிரப்பி விடலாம்!

அமெரிக்காவில் ஒவ்வொரு விநாடியும் சராசரியாக 45 கிலோ சொக்லெட் சாப்பிடப்படுகிறது.

பெஞ்சமின் ஃப்ராங்கிளின் வாயு பிரிதலுக்குப் பெருமிதம் கொள்ளுங்கள் என்ற தலைப்பில் ஓர் அறிவியல் கட்டுரை எழுதியிருக்கிறார்!

லண்டனின் தரைக்கு அடியில் ட்யூப் ரயில் ஓடும் பாதையில் ஏறக்குறைய 5இலட்சம் எலிகள் வசிக்கின்றன!

நோர்வேயின் முதல் விமானக் கடத்தல் சம்பவம் ஆயுதங்களுக்குப் பதிலாக கூடுதல் பியர் பானம் கொடுக்கப்பட்டு தீர்க்கப்பட்டது!




# கதை சொல்லப் போகிறோம்!



செல்ஃபி எடுத்துக் கொண்டிருந்த போது தன் தோளுக்குப் பின்னால் பாம்பு ஒன்று நெளிவதைப் பார்த்த பிரவீன்...

இந்த குட்டிக்களை valampurii Face book இல் போட அதற்கு எமது வாசகர்கள் முடிவு சொல்லியிருக்கிறார்கள். அது இதோ!

**ராம்ராஜ்:**-பாம்புடன் சேர்ந்து செல்ஃபி எடுக்க நினைத்த பிரவீனை பாம்பு படம் எடுத்து கழுத்தில் ஒரு போடு போட்டது. நுரைதள்ளி பிரவீன் கீழே விழுந்தான். அடுத்த அடிமையைத் தேடி பாம்பு நெளிந்து சென்றது.

**ஜெயசூரியா:**-தன் வாழ்க்கையின் கடைசி செல்ஃபியை எடுத்துக் கொண்டான் பிரவீன்

**குமார்:**-பாம்பு கமராவில் தெரிவது போல கமராவை திருப்பத் தொடங்கினான். இவனெல்லாம் திருந்தவே மாட்டான் என டென்ஷனாகி பாம்பு அந்த இடத்தைக் காலி செய்தது.

**மணிமாறன்:**-அப்படியே பாம்புடன் சேர்ந்து செல்ஃபி எடுத்து ஃபேஸ்புக்கில் போட்டான். லைக்ஸ் குவியத் தொடங்குவதைப் பார்க்கும் போதே பாம்பு அவனைப் போட்டுத்தள்ளியது.

**கரன்:**-மொபைலைக் கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தான். திரும்பி வந்து பார்த்தால் அந்த இடத்தில் பாம்பையும் காணோம். மொபைலையும் காணோம். ஐ போன் போச்சே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெஸ்சியை மிஞ்சும் ரொனால்டோ



சர்வதேச உதைபந்தாட்டத்தில் கிறிஸ்டியானோ ரொனால்டோ. வயசு ஏற ஏற ரொனால்டோ ஆட்டமும் மெருகேறுகிறது. மைதானத்தில் அவர் என்ன செய்தாலும் அது வசீகரமா இருக்கு. இது ரொனால்டோ குறித்து, சந்தோஷ் டிராபியில் தமிழ்நாடு அணியின் பயிற்சியாளராக இருந்த ராபின் சார்லஸ் ராஜா சொன்னது.


சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு (FIFA) சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்படும் உலகின் சிறந்த கால்பந்து வீரர் (ballon d'or') விருதை, நான்காவது முறையாக வென்றிருக்கிறார் போர்த்துக்கல் கப்டன் கிறிஸ்டியானோ ரொனால்டோ. பிரான்ஸில் நடந்த 2016 யூரோ கோப்பையில் போர்த்துக்கல் சம்பியன், 2016 சம்பியன்ஸ் லீக் தொடரில் ரியல் மாட்ரிட் சம்பியன். தேசிய அணி, கிளப் என இரு தரப்புக்காகவும், இரண்டு தொடர்களிலும் முத்திரை பதித்திருந்தார் என்பதால் ரொனால்டோவுக்கு சிறந்த வீரர் விருது கிடைக்கும் என்பது முன்பே எதிர்பார்த்தது. மெஸ்சி, ரொனால்டோ இருவர் மட்டுமே கடந்த ஒன்பது ஆண்டுகளாக இந்த விருதுக்கு தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். ஆர்ஜென்டீனா, பார்சிலோனாவுக்காக விளையாடி வரும் மெஸ்சி ஐந்துமுறையும் (2009,2010,2011,2012,2015), போர்த்துக்கல் ரியல் மாட்ரிட் அணிகளுக்காக விளையாடும் ரொனால்டோ நான்கு முறையும் (2008, 2013, 2014, 2016) ballon d'or விருதை வாங்கியுள்ளனர். கடந்த ஆண்டு மெஸ்சி இந்த விருதை வென்றதும் உங்கள் பார்வையில் அவர் (மெஸ்சி) என்னை விட சிறந்தவராக இருக்கலாம்.

மற்றவர்கள் என்ன நினைப்பார்கள், என்ன சொல்வார்கள் என்பதைப் பற்றி எனக்கு கவலையில்லை. என்னைப் பொறுத்தவரையில் நான்தான் பெஸ்ட். இந்த ஆண்டு மட்டுமல்ல, எப்போதுமே... கால்பந்து வரலாற்றில் என் பெயரைத் தவிர்க்க முடியாது. ஏனெனில் நான் ஜாம்பவான் என்றார் ரொனால்டோ. இதை கர்வம் என்றார்கள் மெஸ்சியின் ரசிகர்கள். இந்த ஆண்டு அந்த விருதை வாங்கி, மெஸ்சி ரசிகர்களுக்கு கிலி ஏற்படுத்தி உள்ளார் ரொனால்டோ. ஏனெனில் மெஸ்சியை சமன் செய்ய ரொனால்டோவுக்கு இன்னும் ஒரேயொரு விருதுதான் பாக்கி. மெஸ்சியின் ஐந்தை விட, ரொனால்டோவின் நான்கு பெரிது. காரணம்... 22 முதல் 28 வயது வரையிலான காலம்தான் ஒரு கால்பந்து வீரனின் உச்சம். மிஞ்சிப் போனால், 30 வயது வரை ஜொலிக்கலாம். அதற்குப் பின் மனம் விரும்பினாலும் உடல் ஒத்துழைக்காது. தொடர்ந்து விளையாடினாலும், நம்பர் -1 வீரராக இருப்பதெல்லாம் சந்தர்ப்பம் இல்லை. தற்போது ரொனால்டோவின் வயது 31. மெஸ்சியின் வயது 29. இந்த வயதிலும் ரொனால்டோதான் நம்பர் -1. கடந்த நான்கைந்து ஆண்டுகளாகத்தான் அவர் வெறிகொண்டு ஆடி வருகிறார். அதற்கேற்ப உடம்பை முறுக்கேற்றி, மனதைப் பக்குவப்படுத்தி வைத்திருக்கிறார். அணி வெற்றிபெற வேண்டும். அதுவும் என்னால் வெற்றி பெற வேண்டும் என்பது ரொனால்டோவின் பொலிசி. அதற்காக எந்த எல்லைக்கும் செல்வார்.

பயிற்சிக்கு முதல் ஆளாக வந்து கடைசி ஆளாக செல்வது ரொனால்டோ வழக்கம். இரவு இரண்டு மணிக்கு ஐஸ் பாத் எடுப்பார். அவரைப் போல உடம்பை பிட்டாக வைத்திருக்கும் வேறு வீரரைப் பார்க்க முடியாது என்றார் மான்செஸ்டர் யுனைடெட் முன்னாள் பயிற்சியாளர் சர் அலெக்ஸ் பெர்குசன். இவர் ரொனால்டோவை ஆரம்ப காலங்களில் செதுக்கியவர். இவரைத்தான் ரொனால்டோ என் தந்தைக்கு நிகர் என்றார். கோல் அடிப்பது மட்டுமல்லாது. பந்து கிடைத்த அடுத்த நொடியில் விருட்டென பறப்பது, பெனால்டி பாக்ஸில் புகுந்து டிரிபிளிங் செய்வது, வலது கால், இடது கால் என இரண்டிலும் சர்வ சாதாரணமாக கோல் அடிப்பது, ப்ரீ கிக், ஸ்பாட் கிக் என செட் பீஸை கோல் அடிப்பது என எல்லா விதத்திலும் ரொனால்டோ பெர்ஃபெக்ட். எல்லாவற்றையும் விட, ரொனால்டோ ஹெட்டர் பாத்திருக்கீங்களா? அப்படியே காத்துல ரெண்டு செகண்ட் நிப்பான் பாருங்க... ப்பா...' என சிலாகிக்கும் வகையில் இருக்கும் தலையால் அவர் முட்டி அடிக்கும் கோல். 2013 சம்பியன்ஸ் லீக் போட்டி ஒன்றில் மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு எதிராக, ரொனால்டோ பறந்து முட்டிய கோலை பார்த்து மிரண்டு நின்றார் பெர்குசன். ரொனால்டோ நாளுக்குநாள் மெருகேற இன்னுமொரு காரணம், அவர் உடம்பைப் போல மனதையும் அவ்வளவு பிரஷ்ஷாக வைத்திருக்கிறார். வரி ஏய்ப்பு, அடிக்கடி கேர்ள் ப்ரண்ட் மாற்றம் தொடர்பான சொந்த விவகாரங்கள் எதுவும், களத்தில் பாதிக்காத வகையில் பார்த்துக் கொள்வார். இவ்வளவு ஏன்... தன் மகனைப் பெற்ற பெண் யார் என்பதையே ரகசியமாகப் பாதுகாத்து வருகிறார்.

ரொனால்டோவிடம் வெற்றிக்கான தாகம் அதிகம். அணியில் தான் தனித்து தெரிய வேண்டும் என்பதற்காக ரொம்பவே செலவளிப்பார். பிரான்ஸ்க்கு எதிரான யூரோ கோப்பை இறுதிப் போட்டியில், வெற்றிக்கான கோல் அடித்த போர்த்துக்கல் வீரர் பெயரை நாம் மறந்திருப்போம். ஆனால், காயம் காரணமாக ரொனால்டோ பாதியிலியே வெளியேறி, டெக்னிக்கல் லைனில் இருந்தபடி பயிற்சியாளர் அவதாரம் எடுத்த காட்சியை மறக்க முடியுமா என்ன? தற்போதுள்ள போர்த்துக்கல் அணியை விட லூயிஸ் பிகோ காலத்து அணி வலிமையானது. ஆனால், அவர்களால் பெரிய டிராபி எதுவும் ஜெயிக்க முடியவில்லை. ரொனால்டோ அதை மாற்றிக் காட்டி, போர்த்துக்கல் என்றாலே ரொனால்டோதான் என்ற இமேஜை ஏற்படுத்தி விட்டார். இது சாதாரண விடயமல்ல.

இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் யுனைடெட் கிளப்பில் இருந்து ஸ்பெயின் கிளப்பான ரியல் மாட்ரிட்டுக்கு மாறிய பின், ரொனால்டோவுக்கு ஏறுமுகம். அட்டாக்கிங் ஃபார்மட்டில் இங்கிலீஷ் பிரிமியர் லீக் பிரபலம் எனில், டெக்னிக்கல் வியூகங்களில் ஸ்பெயினில் நடக்கும் லா லிகா தொடர் பிரசித்தி. இங்குதான் தென்னமெரிக்க வீரர்கள் கோலோச்சுவர். இங்கிலாந்தை விட ஸ்பெயினில் ரொனால்டோ றெக்கை கட்டி பறக்கிறார். அதிலும் சம்பியன்ஸ் லீக்கில் படு ஸ்மார்ட். மற்ற லீக் தொடர்களில் கோல் அடிப்பதை விட, சம்பியன்ஸ் லீக்கில் முத்திரை பதிப்பதே, ஒரு தேர்ந்த வீரனுக்கு அழகு என்பர் கால்பந்து நிபுணர்கள். அந்த வகையில் ரியல் மாட்ரிட் பத்தாவது முறையாக சம்பியன் லீக் வென்றபோதும், 11 ஆவது முறையாக வென்றபோதும் அழுத்தம் திருத்தமாக தடம் பதித்தார் ரொனால்டோ. எப்போது தேவையோ, அப்போது கோல் அடிப்பார். அதுதான் ரொனால்டோவின் பியூட்டி. யூரோ கோப்பை தொடரில், ஒரு கட்டத்தில் போரத்துக்கல் தொடரில் இருந்து வெளியேறும் நிலையில் இருந்தது. ஹங்கேரிக்கு எதிரான முக்கியமான போட்டியில் எதிரணி முன்னிலை பெற்றிருந்தது. ஆனால், தனி ஒருவனாக இரண்டு கோல்கள் அடித்ததோடு, சக வீரர் நானிக்கு ஒரு கோல் அசிஸ்ட் செய்த போதுதான், போர்த்துக்கல் மட்டுமல்லாது ஒட்டுமொத்த கால்பந்து உலகமும் ரொனால் டோவை வியந்து பார்த்தது. பிடிச்சிருக்கோ, பிடிக்கலையோ, ரொனால்டோவைக் கொண்டாடித் தான் ஆக வேண்டும். இந்த முறை ballon d'or விருதுக்கு அவர் தகுதியானவர் ● (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சு பொறுக்குதில்லையே!

அந்தப் பாதை மிகவும் கரடு முரடாக இருந்தது. பாம்பின் வாலைப்பிடிச்சு தலை கீழா குலுக்கி விட்டா அதின்ர எலும்பெல்லாம் கொலுத்துப்போய் செத்திடும் என நான் சின்னப் பிள்ளையா இருக்கேக்க பக்கத்து வீட்டு பரமண்ணை சொன்ன கதை ஞாபகம் வந்துச்சு.

அந்தக் குலுக்கத்துக்கையும் நான் குலுங்கிக் குலுங்கிச் சிரிச்சன். இந்தப் பாதையால மனிசன் போனாலும் இதே நிலை தான் எண்டு நினைச்சதுதான் என்ர சிரிப்புக்குக் காரணம்.

நான் நினைக்கிறன் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில கேட்டதுக்குப் பிறகு இந்த றோட்டைப் போட்டிருக்கவேமாட்டாங்கள். இதை நம்பி நல்லூர் முருகனில அடிச்சுச் சத்தியம் பண்ணுவன்.

அறுவார். தேர்தலுக்குத் தேர்தல் வருவார்கள். வந்து நிறைய வாக்குறுதியளை அள்ளிவிடுவார்கள். பிறகு அவ்வளவுதான்.

ஒரு கர்ப்பிணிப் பொம்புளய இதால கொண்டு போனா நிலையென்ன. என்ர பரமசிவனே நினைக்கவே நெஞ்சு வெடிக்குது.

இப்படி என்ர நினைவுகள் இந்த நாசமறுப்புக்களை நினைச்சுக் கொண்டிருக்க, பட்டப்பகல்ல கெட்லைட்ட போட்டபடி மூன்று மோட்டார் சைக்கிள்கள் சவாரித்திடல்ல புளுதியைக் கிளப்பி ஓடுற மாடுமாதிரி அந்த வீதியை புளுதி மயமாக்கிக் கொண்டு வருது.

ஒரு நிமிசம் என்ர இதயம் வெடிச்சிடும் போல இருந்தது. அவ்வளவு பயம் வந்திட்டுது.

மோட்டார் சைக்கிள ஓரமா நிப்பாட்டிட்டு அவையள அனுப்பிட்டு நான் போவம் எண்ட நினைப்போட நிப்பாட்டுறதுக்கு முன்னமே ஒரு மோட்டார்சைக்கிள் என்னை விலத்திட்டு.

இரண்டாவது மூண்டாவது மோட்டார் சைக்கிளும் சீறிப்பாஞ்சு கொண்டு போகுது.

என்ர பரம்பொருளே! என்ன கொடுமை இது. மூண்டு மோட்டார் சைக்கிள்ல ஆறுபேர். அவையளின்ர கையில அந்தப் பெரிய வாள். காது குடுத்துக் கேக்கேலாத தூசண வார்த்தைகள்.

புளுதி அடங்க மனதைத் திடப்படுத்தி ஒரு பெருமூச்சை விட்டுட்டு மோட்டார்சைக்கிளை எடுத்தேன்.

ஐயோ என்ர பிள்ளையை வெட்டிப்போட்டுப் போறாங்களே என்ற அவலக்குரல்.

ஓட்டோ ஒன்று சீறிப்பாய்ந்த படி வந்து வெட்டுண்டவனை ஏற்றிக் கொண்டு புளுதியைப் பிரித்த படி செல்கிறது.

இவற்றையெல்லாம் வேலியோரமாக பார்த்துக் கொண்டிருந்த ஐந்தாம் தரத்தில் படிக்கும் இரண்டு மாணவர்கள் தமக்குள் பேசிக்கொள்கிறார்கள்.

டேய் திருப்பாச்சி படத்தில விஜய் வந்து வெட்டிட்டு போனமாதிரி இருந்துதெல்லா? பிஞ்சுகளின் நெஞ்சில் விதைக்கப்படும் நஞ்சை பிடுங்கி எறிய 'நீங்கள் பள்ளிக்கூடம் முடிஞ்சா வீட்டை போறதில்லையோ?' என உறுக்கினேன்.

'டேய் சேர்டா' என்றவாறு ஓடினார்கள் சிறுவர்கள். நானும் மோட்டார்சைக்கிளை ஓட்டினேன் பள்ளமும் மேடும் நிறைந்த அந்த வீதிவழி.

- அபிமன்யு-



## காலத்தால் அழியாத கானங்கள் ...

| | |
|---|---|
| பாடல்:- | ஆடிய ஆட்டமென்ன |
| திரைப்படம்:- | பாத காணிக்கை |
| பாடலாசிரியர்:- | கண்ணதாசன் |
| இசை:- | ரி.கே.ராமமூர்த்தி |
| பாடியவர்:- | ரி.எம்.சௌந்தரராஜன் |





PATHAKANIKKAI

ஆடிய ஆட்டமென்ன?
பேசிய வார்த்தை என்ன?
தேடிய செல்வமென்ன?
திரண்டதோர் சுற்றமென்ன?
கூடுவிட்டு ஆவிபோனால்
கூடவே வருவதென்ன...?

வீடுவரை உறவு
வீதி வரை மனைவி
காடு வரை பிள்ளை
கடைசி வரை யாரோ?

ஆடும் வரை ஆட்டம்
ஆயிரத்தில் நாட்டம்
கூடிவரும் கூட்டம்
கொள்ளிவரை வருமா?

தொட்டிலுக்கு அன்னை
கட்டிலுக்குக் கன்னி
பட்டினிக்குத் தீனி
கெட்ட பின்பு ஞானி!

சென்றவனைக் கேட்டால்
வந்துவிடு என்பான்
வந்தவனைக் கேட்டால்
சென்று விடு என்பான்!
விட்டுவிடும் ஆவி
பட்டுவிடும் மேனி
சுட்டுவிடும் நெருப்பு
சூனியத்தில் நிலைப்பு...

# கனவுகளும் பலன்களும்



**கனவில் ஆய்வுகூடம் வந்தால்**

விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றைக் கனவில் காண்பவர் ஒரு புதிய முயற்சியை மேற்கொண்டு அதில் வெற்றி காண்பார்.

**கனவில் சிறு பிராணிகள், பூச்சிகள் வந்தால்**

முயலைக் கனவில் காண்பது நல்லது. அதனால் வாழ்க்கையில் மேன்மை உண்டாகும். முயல் தனக்கு கிடைப்பதாகக் கனவு கண்டாலும் நல்லதே நடக்கும்.

தன்னிடமிருந்து முயல் தப்பிச் சென்று விட்டதாகவோ அல்லது இறந்து விட்டதாகவோ கனவு கண்டால் தீய பலன்கள் உண்டாகும். தொழிலில் நட்டமும் வாழ்க்கையில் கஷ்டங்களும் ஏற்படும்.

எறும்புகளைக் கனவில் காண்பது நல்லது. தொழிலில் விருத்தியும் பண வரவும் ஏற்படும். எறும்புகள் சாரை சாரையாகச் செல்வது போலக் கனவு கண்டாலும் அதே பலன்கள் ஏற்படும். ஆனால் எறும்புகள் சிதறிப் பல திக்குகளிலும் செல்வது போலக் கனவு கண்டால் தொழிலில் நட்டமும் கஷ்டமும் ஏற்படும்.

தேனீக்கள் தன்னைக் கொட்டிவிட்டதாகக் கனவு கண்டால் தொழிலில் நட்டம் ஏற்படும். கனவில் தேனையோ தேன் அருந்துவது போலவோ அல்லது தேன் கூட்டையோ அல்லது தேனீக்கள் கூடு கட்டுவதையோ கண்டால் நல்ல பலன்களே நடக்கும். தேன் கூட்டிலிருந்து தேன் எடுப்பதாகக் கனவு கண்டால் பொன், பொருள் சேரும். மற்றவர்கள் பாராட்டும் வகையில் வாழ்க்கையில் உயர்வு ஏற்படும்.

ஆமையைக் கனவில் கண்டால் நல்ல காலம் ஆரம்பமாகும். நண்பர்களின் உதவியால் புதிய தொழில் தொடங்குவர்.

எலிகளைக் கனவில் கண்டால் பிறரால் மோசம் செய்யப்படுவர். களவு போகும். கஷ்டமும் நட்டமும் ஏற்படும்.

எலிகளைக் கொல்வது போலக் கனவு கண்டால் மேற்கண்ட கஷ்டங்கள் ஏற்பட்டு நீங்கும். எலி கடித்து விட்டது போலக் கனவு கண்டால் நோய்கள் குணமாகும்.

பூச்சி புழுக்களைக் கனவு கண்டால் கஷ்டப்பட நேரும். சிலருக்குத் தொற்று நோய்கள் ஏற்படலாம். சிலந்தியையோ சிலந்தி வலையையோ கனவில் கண்டால் தொழில் மேன்மை, பொருள் வரவு ஆகியவை உண்டாகும்.

சிலந்தி வலையை அழிப்பது போலக் கனவு கண்டால் கெடுதல்கள் உண்டாகும். தேரைக் கனவில் கண்டால் நண்பர்கள் அல்லது உறவினர்களில் யாராவது ஒருவர் மரணமடைவர். தேரை மேலே விழுவது போல கனவு கண்டால் நோய்கள் ஏற்படும்.

பல்லி சுவரில் ஊர்ந்து செல்வது போலக் கனவு கண்டால் செய்யும் தொழிலில் உயர்வு ஏற்படும். பல்லிகள் இணைவதைக் கனவில் கண்டால் நினைத்த காரியம் நடக்கும். பல்லிகள் சண்டையிடுவதாகக் கனவு கண்டால் கணவன் மனைவி உறவில் விரிசல் ஏற்படும்.

**கனவில் மருத்துவ மனை வந்தால்**

கனவில் ஓர் மருத்துவ மனை தோன்றுமானால் அவ்வாறு கனவு காண்பவர் தமது உடல் நலம் பேணுவதில் கொண்டுள்ள கவனத்தைக் குறிக்கும்.

தனக்கு அறுவைச் சிகிச்சை நடப்பது போல் கனவு கண்டால் பொருளாதார வளர்ச்சிக்கான புதிய முயற்சியில் ஈடுபடும் வாய்ப்பு வரும்.

பறப்பது போல் கனவு காண்பவர்கள் வாழ்வில் மிக உன்னதமான நிலையை அடைவார்கள்.

இதுவரை இருந்து வந்த கஷ்டங்கள் நீங்கும். வாழ்வில் உயரப்போகும். உங்களுக்கு என் வாழ்த்துக்கள். கனவில் அந்தணனைக் கண்டால் நல்லது. குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும். தலப் பயணம் மேற்கொள்ள நேரும். புண்ணிய ஆலய வழிபாடு புனித நீராடல் நிகழும்.

கனவில் அரசனைக் கண்டாலும் அரசரோடு தொடர்பு கொண்டாலும் நல்ல செல்வாக்காகும். மதிப்பும் உயர்வும் உண்டாகும். அரசர் போன்ற பெரும் பதவியில் உள்ளோரைக் கண்டாலும் இப்பலன் பொருந்தும்.


அமைச்சரோடு தொடர்பு கொள்வது போன்றோ அல்லது உரையாடுவது போன்றோ கனவு கண்டால் விரைவில் பதவியுயர்வு கிடைக்கும். தொழிற்றுறையில் உள்ளவர்களுக்கு தொழிலில் இருந்து வந்த தடைகள் விலகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா செய்தி
















# வீரசிவாஜி

## திரைவிமர்சனம்



விக்ரம் பிரபு இது என்ன மாயம், வாகா போன்ற படங்களால் கொஞ்சம் சறுக்கலில் உள்ளார். இவருக்கு இந்த நேரத்தில் கண்டிப்பாக ஒரு வெற்றி தேவை என்ற நிலையில் தகராறு படத்தின் இயக்குநர் கணேஷ் விநாயக் கூட்டணியில் வீரசிவாஜி படத்தின் மூலம் களம் இறங்கியுள்ளார்.

விக்ரம் பிரபு சறுக்கலில் இருந்து மீண்டாரா? பார்ப்போம்.விக்ரம் பிரபு கால் டாக்ஸி ட்ரைவராக பாண்டிச்சேரியில் இருக்கிறார். அவர் அநாதையாக இருந்தாலும் சொந்த அக்கா போல் பார்த்துக் கொள்கிறார் வினோதினி.

வினோதினியின் குழந்தைக்கு மூளையில் கட்டி வர, உடனே ரூபாய் 25 இலட்சம் தேவைப்படுகின்றது. கால் டாக்ஸி விற்று ரூபாய் 5 இலட்சம் ஏற்பாடு செய்கிறார், அந்த நேரத்தில் தான் யோகிபாபு, ரோபோ ஷங்கர் மூலம் ஜான் விஜய் அறிமுகம் கிடைக்கின்றது. அவர் குறைந்த பணத்திற்கு அதிக பணம் தருவதாக கூறி பணத்தை வாங்கி ஏமாற்றி செல்கிறார். அதன் பிறகு அந்த கும்பலை கண்டுபிடித்தாரா, குழந்தைக்கு அறுவைச்சிகிச்சை நடந்ததா என்பதே மீதிக்கதை.

விக்ரம் பிரபு கால் டாக்ஸி ட்ரைவராக வந்தாலும் கலர்புல்லாக தான் இருக்கிறார். ஆக்ஷனில் அதிரடி காட்டினாலும் இன்னும் ரொமான்ஸில் கஷ்டப்படுகின்றார். அமைதியாக நடிக்க சொன்னால் செம்ம ஸ்கோர் செய்து விடுகிறார், அதே நேரத்தில் துறுதுறு நடிப்பில் முன்னேற்றம் தேவை சார்.

ஷாம்லி நீண்ட வருடங்களுக்கு பிறகு தமிழ் சினிமாவில் காலடி எடுத்து வைக்கின்றார். பேபி ஷாம்லி தற்போது ஹீரோயின் ஷாம்லி. ஆனால், இவர் நடிப்பதற்கு கொஞ்சம் கூட ஸ்கோப் இல்லை, அதிலும் டப்பிங் வாய்ஸ் எங்கும் செட் ஆகவில்லை.

வழக்கமான ஹீரோயின் போல் காதல், டூயட் மட்டுமே. படத்தின் பெரிய ப்ளஸ் யோகி பாபு, ரோபோ ஷங்கர் கூட்டணி தான். ரமேஷ், சுரேஷ் என காமெடியில் கலக்கியுள்ளனர். அதிலும் யோகி பாபு பேச ஆரம்பித்தாலே சிரிப்பு சரவெடி தான். மேலும் ஜான் விஜய், மொட்ட ராஜேந்திரன் எல்லாம் வழக்கமான ஓவர் ஆக்டிங் தான்.

படத்தின் முதல் பாதி எதை நோக்கி செல்கிறது என்று தெரியாமலே சென்றாலும், குறிப்பிட்ட நேரத்திற்கு பிறகு படம் செம்ம சூடு பிடிக்கின்றது. வேகவேகமாக செல்லும் திரைக்கதையில் இடைவேளை வர, அடுத்து என்ன என்று நிமிர்ந்து உட்கார, அதன் பிறகு இயக்குநருக்கே படத்தை எங்கு கொண்டு செல்வது என்று தெரியாமல் குழம்பி நின்றுள்ளார்.

இமான் இசையில் பாடல்கள் எல்லாம் நன்றாக இருந்தாலும் எங்கோ கேட்டது போலவே ஒரு பீலிங். அதைவிட பின்னணி இசை படத்தில் காட்சி வருவதற்கு முன்பே இசை வந்து காதை பதம் பார்க்கின்றது.

படத்தின் முதல் பாதியில் வரும் ஒரு சில சேஸிங் காட்சிகள். ஒளிப்பதிவு பாண்டிச்சேரியை ஏதோ பாரீன் போல் காட்டியுள்ளார்கள். திரைக்கதை குறிப்பாக இரண்டாம் பாதியில் காதல் காட்சிகள், லாஜிக் மீறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பில் காலி கலந்துரையாடலின் முக்கியத்துவம்

காலி கலந்துரையாடல் இலங்கை பாதுகாப்பு அமைச்சு மற்றும் கடற்படை ஆகியன இணைந்து நடத்திய ஒரு வருடாந்த அனைத்துலக கடல்சார் கருத்தரங்கு ஆகும். கடந்த மாதம் கொழும்பில் இடம்பெற்ற ஏழாவது காலி கலந்துரையாடலானது கடல்சார் கூட்டுப் பங்களிப்பு தொடர்பான மூலோபாயத்தை மேம்படுத்துதல் என்ற எண்ணக் கருவை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

கடற்படை உயர் அதிகாரிகள் தொடக்கம் முன்னணி மூலோபாய ஆய்வாளர்கள் வரை பல்வேறு தரப்பினரும் இக்கருத்தரங்கில் உரை நிகழ்த்தினர். இவர்களில் சிலர் இந்திய-பசுபிக் பிராந்தியத்திற்குள் கடல்சார் பாதுகாப்பைப் பரிமாறுதலும் கலந்துரையாடல்களை நடத்துதலும் என்கின்ற தலைப்பில் உரையாற்றினர்.

அனைத்துலக வர்த்தகம் மற்றும் கடல், கரையோரக் கண்காணிப்பு கப்பல்கள் தரித்து நிற்பதற்குமான கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடத்திலுள்ள இலங்கையானது தனது பிராந்திய கடல் சார் விவகாரங்களில் பங்களிப்பதில் எவ்வளவு முக்கியத்துவம் மிக்கது என்கின்ற விடயம் தொடர்பாகவும் காலி கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

தற்போது கொழும்பு துறைமுகமானது இந்திய மாக்கடலின் ஊடாகப் பயணிக்கும் 70 சதவீதக் கப்பல்களை கையாளுகின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக, 95 வெளிநாட்டு போர்க் கப்பல்கள் இலங்கையின் துறைமுகங்களில் தரித்து நின்றுள்ளன. இதற்கும் அப்பால், புலிகள் அமைப்பின் கடற்புலிகளை எதிர்த்துப் போரிட்ட இலங்கை கடற்படையின் அனுபவமானது பெறுமதிமிக்க ஒரு சொத்தாகக் காணப்படுகிறது.

இலங்கைத் தீவின் வெளியுறவுக் கொள்கை வகுப்புக் கணிப்புக்களில் பெருமளவில் செல்வாக்குச் செலுத்தும் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இக்கலந்துரையாடலில் உரை நிகழ்த்தினர். இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா மற்றும் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் கடற்படை உதவித் தளபதி ரியர் அட்மிரல் வாங்ட சோங்க் ஆகியோரின் உரைகள் அதிகம் கவனத்திற் கொள்ளப்பட்டன.

சார்க் அமைப்பு நாடுகளின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சிக்காகவும் இந்தியப் பிரதமர் மோடி பாடுபடுவதாகவும் இப்பிராந்தியத்தில் 'முதலில் அயல்நாடுகள் கோட்பாடு' என்கின்ற பிராந்திய நட்புக் கோட்பாட்டையும் பிரதமர் அமுல்படுத்தியுள்ளதாகவும் இந்தியக் கடற்படை தளபதி அட் மிரல் சுனில லன்பா குறிப்பிட்டார். இந்திய மாக்கடலின் கடற்படைக் கருத்தரங்கு என்கின்ற குடையின் கீழ் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பானது கட்டி வளர்க்கப்படுவதாகவும் அட்மிரல் லன்பா பரிந்துரைத்தார்.

இவரது இக்கருத்தானது இந்திய மாக்கடலின் கடற்படைக் கருத்தரங்கு போன்ற பல்வேறு ஒத்துழைப்புப் பொறிமுறைகள் நடைமுறையில் பயன்படுத்தப்படுவதுடன் இந்திய மாக்கடல் பிராந்தியத்துடனான அனைத்துச் செயற்பாடுகளும் தனது அதிகாரத்தின் கீழேயே இடம்பெற வேண்டும் என்பதையும் இந்தியத் தளபதி வலியுறுத்தினார்.

இதேவேளை, பொதுவான பாதுகாப்பு, முழுமையான பாதுகாப்பு, ஒத்துழைப்புப் பாதுகாப்பு, நிலைத்தன்மையுள்ள பாதுகாப்பு போன்றவற்றை மையப்படுத்திய கடல்சார் பாதுகாப்பையே சீனா வலியுறுத்துவதாகவும் இதற்காக சீனக் கடற்படையானது அளப்பரிய பங்காற்றுவதாகவும் சீனக் கடற்படைப் பிரதி தளபதி ரியர் அட்மிரல் வாங் தெரிவித்தார். ஏடன் வளைகுடாவில் இடம்பெற்று வரும் கடற்கொள்ளையைக் கட்டுப்படுத்துவது உட்பட சீனக் கடற்படையால் மேற்கொள்ளப்பட்டு வரும் கடல்சார் நடவடிக்கைகள் தொடர்பாகவும் வாங் தெரிவித்தார்.

2016 இல் மட்டும், 38 நாடுகளைச் சேர்ந்த 310 இற்கும் அதிகமான கப்பல்களை சீனக் கடற்படை தரித்து நிற்பதற்கு ஒழுங்கு செய்ததாகவும் 83 நாடுகளுக்கு கிட்டத்தட்ட 200 வரையான கப்பல்களை சீனக் கடற்படை அனுப்பி வைத்ததாகவும் வாங்க் குறிப்பிட்டார்.

21 ஆம் நூற்றாண்டின் கரையோர பட்டுப் பாதைத் திட்டமானது மாக்கடல்களை ஒன்றுடன் ஒன்று இணைப்பதையும் துரித வளர்ச்சியை எட்டும் சீனப் பொருளாதாரத்தை இத்திட்டம் அமுல்படுத்தப்படும் நாடுகளின் அபிவிருத்தி நலன்களுக்காகச் செலவிடுவது போன்ற பல்வேறு இலககுகளையும் கொண்டுள்ளதாக ரியர் அட்மிரல் வாங் தெரிவித்தார்.

2015 இல் மைத்திரி, ரணில் நிர்வாகம் பொறுப்பேற்றது தொடக்கம் மேற்குலக நாடுகளுடனான இலங்கையின் இராஜதந்திர மற்றும் பாதுகாப்பு உறவுகள் முன்னேற்றமடைந்துள்ளது என்பதை காலிக் கலந்துரையாடல் வெளிப்படுத்தியது.

எடுத்துக்காட்டாக, 2011 இன் பின்னர் முதன்முதலாக 2016 இல் நான்கு அமெரிக்க கடற்படைக் கப்பல்கள் இலங்கை துறைமுகத்திற்கு வருகை தந்ததாக அமெரிக்க பசுபிக் கட்டளைத் தளபதி அட்மிரல் ஹரி ஹரிஸ் தெரிவித்தார்.

இந்திய மற்றும் பசுபிக் மாக்கடல்கள் நடவடிக்கை மற்றும் வர்த்தக செயற்பாடுகளுக்காக ஒன்றிணைத்து செயற்படுவது மிகவும் முக்கியமானது எனவும் இக்கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டது.

'ஏ' என்கின்ற ஒரு நாட்டினால் 'பி' என்கின்ற நாட்டில் கட்டப்படும் துறைமுக கொள்கலனானது 'சி' என்கின்ற நாட்டின் வர்த்தகத்தை பிற நாடுகளுடன் தொடர்புபடுத்துவதற்குத் தேவையான வர்த்தக சார் கடல் கட்டுமானங்கள் தொடர்பாகவும் இதில் ஆராயப்பட்டது. இதற்கும் மேலாக, கடல்சார் ஒத்துழைப்புச் செயற்பாடுகள் மூலம் கடலில் எழக்கூடிய பல்வேறு அச்சுறுத்தல்களையும் முறியடிக்க முடியும் எனவும் கூறப்பட்டது.

குறிப்பாக தகவல் பரிமாற்ற ஏற்பாடுகள், பொறிமுறைக் கட்டியெழுப்புவதற்கான நம்பிக்கை, நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய திறன் அபிவிருத்தி மேம்படுத்தப்பட வேண்டும் எனவும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மாறிவரும் பூகோள-அரசியல் மாற்றத்திற்கு ஈடாக இந்திய-பசுபிக் பிராந்தியத்தை எவ்வாறான ஒத்துழைப்புக்களை மேற்கொள்வது என்பது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டது. பாதுகாப்பற்ற பொறிமுறைகளின் விளைவுகளானது பரந்தளவில் தாக்கத்தைச் செலுத்துவதற்கு வழிவகுத்தாலும் கூட, ஏற்கனவே உள்ள பொறி முறைகளை விரிவாக்கி அவற்றின் மூலம் புதிய முயற்சிகள் புகுத்தப்பட வேண்டும் எனவும் காலி கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

ஏற்கனவே நடைமுறையிலுள்ள பிராந்திய பாதுகாப்பு உறவுகள் மற்றும்பொருளாதார இணைசார்புகள் போன்றவற்றின் வலைப்பின்னலானது உத்தியோகபூர்வமாக முரண்பாட்டைக் களையக் கூடிய நிலையில் இருந்தாலும் கூட, இந்த நாடுகளுக்கு இடையிலான அதிகரித்து வரும் சிக்கலானது இந்த வலைப்பின்னலில் பிளவை ஏற்படுத்துவதற்கு சில நாடுகள் திட்டம் தீட்டுவதற்கும் காலாக இருக்கலாம்.

கலந்துரையாடல்கள் மற்றும் ஒத்துழைப்புக் கலாசாரத்தைப் பேணுவதற்காக உருவாக்கப்பட்ட காலி கலந்துரையாடல் போன்ற ஒன்றியங்கள் காணப்பட்டாலும் கூட, காலமும் மோதலும் மட்டுமே இவ்வாறான அமைப்புக்கள் நெருக்கடிகளைக் கையாள்வதில் எத்தகைய ஆளுமைத்திறன்களைக் கொண்டுள்ளன என்பதைக் கூறும்.



ஆங்கிலத்தில் – Rajni Gamage
வழிமூலம் – The diplomat
மொழியாக்கம் - நித்தியபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

# குடுமி ஆட்டம்



ஒரு ஊரில் ஒரு பண்ணையார் இருந்தார். அவருக்குச் சொத்துக்கள் ஏராளமாக இருந்தன.

பண்ணையாருக்கு ஒரே ஒரு பெண்தான்! ஆனால், அந்தப் பெண் ஆணைப் போலவே வளர்ந்தாள். கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றாள். மேலும, கலை, இலக்கியம், இசை ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தாள்.

பெண்ணுக்கு தகுந்த மாப்பிள்ளை தேட முயற்சி எடுத்தார் பண்ணையார். வரக்கூடிய மாப்பிள்ளை தன் வீட்டோடு இருக்கக் கூடியவனாகப் பார்த்தார்.

பல மாதங்களாக பல ஊர்களில் பார்த்தும், எதுவும் பொருத்தமாக அமையவில்லை. எவருமே மாமனார் வீட்டில் தங்கும் மாப்பிள்ளையாக வர விரும்பவில்லை.

பக்கத்து ஊரில் பையன் ஒருவன் இருந்தான். அவனுக்கு தாய், தகப்பன் இல்லை. கல்லூரியில் படிக்க வசதி இல்லை. சித்தப்பன் வீட்டில் தங்கி இருந்தான். அவன் வேலை தேடியும், விண்ணப்பம் போட்டுக் கொண்டும் இருந்தான். பண்ணையார் அவனைப் பற்றி விசாரித்தார்.

அவன் ஏழையாக இருந்தாலும், பரவாயில்லை. அவனையே ஏற்பாடு செய்து, பெண்ணை திருமணம் செய்து கொடுத்து, அவனை வீட்டோடு வைத்துக் கொள்ளலாம் என்று சிலர் கூறினர்.

அந்த ஏழை இளைஞனுக்கு தன் பெண்ணை திருமணம் செய்து வைத்தார் பண்ணையார். அந்த இளைஞனும் மாமனார் வீட்டில் மனைவி சொல்வதைக்கேட்டுக்கொண்டு, அமைதியாக இருந்து வந்தான்.

பண்ணையார் காசிக்கு யாத்திரை சென்றார். ஒருநாள், பாடகர் ஒருவர், தம் குழுவினருடன் பண்ணையார் வீட்டுக்கு வந்தார்.

ஊர்தோறும், செல்வந்தர் வீடுகளில் பாடுவது வழக்கம், என்றார். பண்ணையார் யாத்திரை சென்றுள்ளார். எனக்கு இசையில் விருப்பம் இல்லை. நீங்கள் பண்ணையார் வந்த பிறகு வரலாம், என்றார் மாப்பிள்ளை.

பாடகர் வருத்தத்தோடு புறப்படத் தயாரானார். அப்போது, குளித்து விட்டு வந்த பண்ணையார் மகள், வந்தவர் யார் எதற்காக வந்தார்கள்? என்று கேட்டாள்.

பாடகர், பாடினால் சன்மானம் பெறலாம் என்று வந்துள்ளார். பண்ணையார் யாத்திரை போயிருக்கிறார். அவர் வந்த பிறகு வரலாம் என்று கூறி அனுப்பினேன் என்றான் மாப்பிள்ளை.

நம்பிக்கையோடு வந்தவரை வெறுமனே போகச் சொல்வது முறையல்ல, என்று கூறி பாடகரை வரவழைத்து இசை நிகழ்ச்சி நடத்தும்படி ஏற்பாடு செய்தாள் பண்ணையார் மகள்.

எனக்கு இசையே தெரியாது. நான் எப்படி சபையில் இருந்து ரசிப்பது? என்றான் மாப்பிள்ளை.

அதை நான் கவனித்துக் கொள்கிறேன், என்று கூறிவிட்டு அவன் குடுமியில் ஒரு நூலைக் கட்டி, அதை தன்கையில் பிடித்துக் கொண்டு, பின்வரிசையில் அவள் இருந்தாள்.

பாடகர் உற்சாகமாகப் பாடிக் கொண்டிருந்தார். பாட்டுக்கு ஏற்றபடி நூலை ஆட்டிக் கொண்டிருந்தாள் பண்ணையார் மகள்.

அவ்வவ்போது மாப்பிள்ளையின் தலை அசைந்து ஆடியது. மாப்பிள்ளை நல்ல ரசிகராக இருக்கிறாரே என்று பாடகர் நினைத்து, மேலும், சிறப்பாகப் பாடிக் கொண்டிருந்தார்.

திடீரென்று பாடகரைப் பார்த்து, உம்முடைய பாட்டை நிறுத்தும்! என்றார் மாப்பிள்ளை.

பாடகர் திடுக்கிட்டார். பாட்டில் ராகத்தில் ஏதேனும் தவறு நேர்ந்து விட்டதோ என்று குழப்பத்தில் ஆழ்ந்து பாட்டை நிறுத்தி விட்டு, மாப்பிள்ளைப் பார்த்தார்.

என் குடுமியில் கட்டியிருந்த நூல் அறுந்து விட்டது! என்றார் மாப்பிள்ளை. பாடகர் உட்பட அன்னவருக்கும் சிரிப்புத் தாங்க முடியவில்லை.


அதன்பிறகு ஒரு பாடகரைக் கொண்டு மாப்பிள்ளைக்கு இசைப்பயிற்சி கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்தனர்.

ஏழையாக இருப்பது குற்றம் இல்லை ஆனால், முட்டாளாக இருக்கக் கூடாது.

## ராதை facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 931

Search for people, places and things. Nagendram Home

### இராதை




### அருள்ஒலி

உன் பின்னால் நிற்கிற எல்லோருமே உன்னை நேசிக்கிறவர்கள் என்று நினைத்துவிடாதே. அதில் எத்தனைப்பேர் உன் முதுகில் குத்தப்போகிறார்கள் என்பது இப்போது தெரியாது!


### தெய்வீகன்




### ரவிராஜ்




### குணசீலன்




### சிந்து




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 64

## மூன்றில் ஒருபங்கு புற்றுநோய்கள் தடுக்கப்படக் கூடியவை

வேகமாக அதிகரித்துவரும் புற்று நோய் ஒரு பெரும் சுகாதாரப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. இது சம்பந்தமானபலஆய்வுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. மூன்றில் ஒரு பங்குபுற்றுநோய்கள் ஒருவரின் பழக்க வழக்கங்களால் தூண்டப்படுகின்றன என்பதை ஆய் வாளர்கள் உறுதி செய்திருக்கிறார்கள். புற்றுநோய்களை அவற்றின் தோற்றத் தின் ஆரம்ப கட்டத்திலேயே கண்டறி வதற்கான பரிசோதனை முயற்சிகளை மிகப் பெரிய அளவில் முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர்கள் பரிந் துரைத்திருக்கிறார்கள்.

சில செல்கள் மட்டும் திடீரென புற்று நோய்க்கான செல்களாக மாறுவது ஏன் என்று அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ந்தார்கள். உடலில் தோன்றும் எத்தனையோ கோடி செல்களில் குறிப்பிட்ட சில செல்கள் மட்டும் ஏன் இப்படி நடந்து கொள்கின்றன என்பது இவர்களின் ஆய்வின் மையப் பொருள்.

தவறான உணவுகள், அளவுக்கு அதிகமான குடிப்பழக்கம் மற்றும் புகைப்பிடித்தல், சுற்றாடல் மாசடைதல் போன்ற காரணங்களால் புற்றுநோய் தோன்றும் வீதம் அதிகரித்திருப்பதையும் அவர்கள் உறுதி செய்திருக்கிறார்கள்.

புற்றுநோயை ஊக்குவிக்கும் பழக்க வழக்கங்களை தவிர்ப்பது மற்றும் புற்றுநோய்களை அவற்றின் ஆரம்ப கட்டங்களிலேயே கண்டுபிடிப்பது, உடனடி சிகிச்சை அளிப்பது ஆகிய இரண்டு வகையான அணுகுமுறைகளும் சம அளவில் கைக்கொள்வதன் மூலம் புற்றுநோயினால் ஏற்படும் தாக்கங்களை பெரு மளவு குறைத்துக் கொள்ளமுடியும்.

வைத்தியர். சி.சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்.

### விற்றமின் A

விற்றமின் A ஆனது கண்பார்வையை மேம்படுத்துகிறது. ஆரோக்கிய மான நோய் எதிர்ப்புச் சக்தியை விருத்தி செய்கிறது. உடல் கலங்களின் வளர்ச்சிக்கும் அவற்றின் விருத்திக்கும் மிகவும் முக்கியமானது.

ஆரோக்கியமான தோலை பேணி வைத்திருப்பதற்கும் உதவுகின்றது. இவை பச்சை, கடும் மஞ்சள் அல்லது மென்சிவப்பு போன்ற நிறங்களைக் கொண்ட பழங்களிலும் காய்கறிகளிலும் காணப்படுகின்றன.

#### விற்றமின் A அதிகளவில் காணப் படும் உணவுகளாவன.

இவை பச்சை, கடும் மஞ்சள் அல்லது மென்சிவப்பு போன்ற நிறங்களைக் கொண்ட பழங்களிலும் காய்கறிகளிலும் காணப்படுகின்றன.




#### விலங்கு உணவுகள்

- முட்டை, முழுப்பால், சீஸ், பட்டர், இறைச்சி, ஈரல், மீன் எண்ணெய்

#### கடும் பச்சை இலைக் காய்கறிகள்

- அகத்தி, முளைக்கீரை, பசளிக்கீரை, கரட் மற்றும் பீற்றூட் இலைகள், முள்ளங்கி இலை, முருங்கை இலை, கறிவேப்பிலை, மஞ்சள் கிழங்கு இலை மற்றும் கடும் பச்சை நிறமான சாப்பிடக்கூடிய இலைகள்.

#### ஏனைய காய்கறிகள்

- கரட், மஞ்சள் வத்தாளை, உருளைக் கிழங்கு, தக்காளி, மஞ்சள் பூசணிக்காய்

#### பழங்கள்

- மாழ்பழம், பலாப்பழம், இலாவுழுப் பழம், தோடம்பழம்

### இரும்புச்சத்து






செங்குழியங்களின் முக்கியமான பகுதியாக இரும்பு இருக்கின்றது. இரும்புச்சத்து குறைபாட்டினால் குருதிச் சோகை நோய் ஏற்படும். பச்சை இலைக் காய்கறிகளில் இரும்பு அதிகமாக காணப் பட்டாலும், அதனை அகத்துறிஞ்சி பெற்றுக் கொள்ளக் கூடிய இரும்பின் அளவானது, விலங்குஉணவுகள் மூலம் அகத்துறிஞ்சி பெற்றுக்கொள்ளக்கூடிய இரும்பின் அளவை விட குறைவாகவே இருக்கும்.

#### இரும்புச்சத்து அடங்கியுள்ள உணவுகளாவன

#### இறைச்சி

- ஈரல், சிறுநீரகம் மற்றும் சிவப்புநிற இறைச்சியிலான மற்றைய உறுப்புக்கள் மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி.

#### மீன்

- Tuna இனங்கள், பாரைமீன், கெலவல்லா மீன், வாளை மீன், நெத்தலிமீன் மற்றும் ஏனைய கருவாடுகள்.

#### முட்டை

- கோழிமுட்டை, குயில் முட்டை, வாத்து முட்டை.

#### கடும் பச்சை மற்றும் ஏனைய இலை காய்கறிகள்

- முளைக்கீரை, சாரணை, வல்லாரை, பொன்னாங்காணி, அகத்தி, கரட் மற்றும் பீற்றூட் இலைகள்.


#### காய்கறிகள்

- தாமரைத் தண்டு (தாமரைக்கிழங்கு)

#### பருப்பு வகைகள்

- அவரை, சோயாஅவரை, பயறு, உழுந்து, கடலை, கௌபி மற்றும் பருப்பு.








மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org